ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஆழ்வார்திருநகரியில்

ஆழ்வாருக்குத் திருமஞ்சன கைங்கரியம் நடத்திவந்த

வாலப்பிரமசரிய ராமவிரதர்என்னும்

சிறப்புத்திருநாமம் பெற்றவரான்

ஸ்ரீமான். வேங்கடத்துறைவான் கவிராயர்

செய்தருளிய

மாறன் கோவை.

இது

கோயம்புத்தூர்-பூளைமேடு

வேணுகோபாலசாமிநாயுடு

அவர்களால்

பரிசோதிக்கப்பெற்று

சென்னை, வேப்பேரி

செங்கல்வராயநாயகர் ஆர்பனேஜ் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1906.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

	ரூ.	அ.
அரிசமய தீபம் (குருபரம்பரை) செய்யுளும் உரையும்	2	0
மாறனகப்பொருளும்-திருப்பதிக்கோவையும்	0	8
மாறன் [illegible]	0	6
திருவேங்கடவுலா	0	3
ஸ்ரீ ஆண்டாள் பிள்ளைத்தமிழ்	0	3
ஸ்ரீ ஆண்டாள் சந்திரகலாமாலை	0	1
அழகர் கிள்ளைவிடுதூது	0	1
நவநீதப்பாட்டியல் மூலமும் உரையும் ...	0	2
அரங்கநாதகவிராயர் பாரதம்	1	8
இராமாயணத்திருப்புகழ்	0	6

பதிப்பிக்கப்படுவன

குருகாமான்மியம்.

ஸ்ரீரங்கஸ்தலபுராணம்.

கூடலழகர் புராணம்.

இந்தப் புத்தகங்கள் வேண்டுவோர் சென்னை ரூலை சாமி பிள்ளைவீதி 19-வது நம்பர் வீட்டில் ஸ்ரீமாந் சே. முத்துகிருஷ்ண நாயுடவர்களிடத்திலும், தன்றயூர் உபாத்தியாயர் ஸ்ரீமான் மு. கோவிந்தப்பிள்ளை யவர்களிடத்திலும், கோயம்புத்தூர் புஸ்தக ஷாப் ம-௱-௱-ஸ்ரீ, பெ. கோவிந்தகவுடரிடத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

இங்ஙனம்

மு. வேணுகோபாலசாமி நாயுடு,

பூளைமேடு, கோயம்புத்தூர்.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

சாத்துகவி.

ஸ்ரீவில்லிபுத்தூர் ஹிந்துஹைஸ்கூல் தமிழ்த்தலைமைப்புலவரும்
மதுரைத்தமிழ்ச்சங்கப் புலவர்களிலொருவரும் ஆகிய,

ஸ்ரீமத்-உ-வே-ரொ-அப்புவையங்கார் ஸ்வாமிகள்

செய்தருளிய

கட்டளைக்கலித்துறை.

மறைக்குரு கூரவ் விறைக்குறு தக்கதெய் வக்கவிஞன்
சிறைக்குரு கூரவர் போற்பொன் கொழிக்குந் திருச்சங்கணித்
துறைக்குரு கூர னவர்க்குகப் பாம்ம துரகவியித்
தறைக்குரு கூரதி விற்கென்னுங் கம்பரைச் சாற்றுவரே. (௧)

அவர்வேங் கடத்துறை வான்கவி ராயரென் றுன்னுநித்து
நிவர்வேங் கடத்துறை வான்பெய் தெனவரு ணீர்பொழிந்து
கவர்வேங் கடத்துறை வான்பிலத் தோடக் கடிந்தருண்மா
தவர்வேங் கடத்துறை வானுதி நாதர் சரண்பணிந்தே. (௨)

மூலப் பிரம சரிதமுன் னூற்கடன் மொண்டெழுந்து
ஞாலப் பிரம மொழியக் கவிமழை நன்குபொழி
வாலப் பிரம சரிய விராம வ்ரதரெனுஞ்சீர்
சாலப் பிரம தெனுஞ்சிறப் புப்பெயர் சார்ந்துயர்ந்தே. (௩)

திருமாறன் கோவைச்செவ் வாய்ச்சொல்லின் மாலுறச் செய்தவனுட்
பொருமாறன் கோவையைப் போக்கிய யோகி பொருணையென
வருமாறன் கோவையம் போற்றுநா வீறனென் வாய்மைபுனை
தருமாறன் கோவையந் தண்டமிழ் வாணர்க்குத் தந்தனனே. (௪

கச்சிட் டரும்பு களைவென்ற கொங்கையர் காமனென
வெச்சிட் டரும்புகழ் வேணுகோ பால னெனுமறிஞன்
மெச்சிட் டரும்புக ளிம்மாறன் கோவையை மேன்மைபெற
அச்சிட் டரும்புகர் தீர்ந்தவர்க் கிந்திசை யார்ந்தனனே. (௫)

பெங்களூர் சென்றல்கலேஜ் தமிழ்ப்பிரதம பண்டிதரும்
மதுரைத்தமிழ்ச்சங்கப் புலவர்களிலொருவரும் ஆகிய
ஸ்ரீமான். தி-கோ-நாராயணசாமிபிள்ளையவர்கள்
செய்தருளிய

கட்டளைக்கலித்துறை.

சீலத்த னாழ்வார் திருநக ரிக்கண் டிருந்தவந்தோன்
காலப் புயல்வேங் கடத்துறை வான்கவி ராயனென்னும்
வாலப் பிரம சரிய விரதத்தன் வண்டமிழா
லேலப் புகன்றனன் மாறனற் கோவை யிதுவியப்பே. (க)

இக்கோவைப் பாமெனச் சொற்பொரு ளின்ப மியைந்தொளிரு
மக்கோவை யைக்கை லிகிதத் தெழுந்த வரிலகற்றி
மிக்கோகை பெற்றுற வச்சிற் பதித்து விளங்கவைத்தான்
மெய்க்கோவை மாநகர் சார்பூளை மேட்டுறை விற்பனனே. (உ)

மகிழ்மாறன் மாற்குத் திருவிருத் தம்புகன் மாண்புணர்ந்த
திகழ்வேங் கடத்துறை வான்கருத் துகித்துத் தேர்ந்துணர்ந்தோன்
புகழ்வேணு கோபால சாமி தமிழின் புலமைமிக்கோன்
மகிழ்முத்து நாயுடு பெற்ற குமார வரோதயனே. (௩)

செங்கல்பட்டுதாசில்தார் அவர்களும்,

மதுரைத்தமிழ்ச்சங்கப் புலவர்களிலொருவரும் ஆகிய,

ஸ்ரீமான். ஸ்ரீ. வை. கள்ளப்பிரான்பிள்ளையவர்கள்

செய்தருளிய

[illegible]கட்டளைக்கலித்துறை.

[illegible]ழ மார்பன் சிதைவறு செல்வன் சிறுமனிதர்
[illegible]மிழ் யாக்கைக் கடல்கடந் துய்யக் கவறலும்யா
வருமகிழ்ந் தேத்தி வழிபடச் சோலை வளர்குருகூர்
வருமகிழ் மாறன் மணமலர்த் தாண்மனம் வைத்தவனே. (௧)

நான்மறை நான்காம் வருணத்தவர்க்கு நலமிலதாம்
வான்குறை தீர்தர மாதருமோதி மயக்கமறுத்
தூன்பொறை நீங்க வுபரிட தப்பொரு ளொண்டமிழாந்
[illegible]றை யாகத் திருவாய் மொழிசெப்புந் திவ்வியனே. (௨)

அன்னவன் பாதத் தணிவுறக் கோவை யகமகிழ்ந்து
சொன்னவன் மாணி துறந்தவ ளும்வேங் கடத்துறைவான்
றென்னவன் நேசத் திலகம தாங்குரு கூர்ச்செனித்தோன்
மன்னவன் மைந்தன் மலரடி தோயு மனத்தினனே. (௩)

ஏடுறு மந்நூ லெவர்க்கும பயன்றந் திலகுறவே
பீடுறு மச்சிட் டளித்தன னுள்ளம் பெரிதுவந்து
நாடுறு செந்தமிழ் நாவலர் போற்றி நலங்கொள்புனை
மேடுறு நம்வேணு கோபால சாமியாம் வித்தகனே. (௪)

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

சிறப்புப்பாயிரம்.

ஆழ்வார் திருநகரி,

ஸ்ரீமான். உறங்காவில்லிதாஸர்

செய்தருளியது.

சீலப் பிரமத் திருஞான முத்திரைச் செண்பகமெய்க்
கோலப் பிரபல மாமாறன் கோவையைக் கோத்தளித்
வாலப் பிரம சரிய விராம மகாவிரதன்
சாலப் பிரச மலர்ச்சே வடியென் றலைக்கொள்வனே.

ஆழ்வார் திருநகரி,

ஸ்ரீமான். இளையபெருமாள்தாஸர்

செய்தருளியது.

மாவைக்கு மார்பனுக் கோரா யிரங்கவி மாலைசொன்ன
தேவைக் குருகைப் பிரானைப் புகழ்ந்த செழுந்தமிழோ
நாவைக்குஞ் சீர்வேங்கடத்துறை வான்கவி நாதன்சொன்ன
கோவைக்கு முன்வேலி மேற்சொவை யாம்பிற கோவைகளே.

ஆழ்வார் திருநகரி,

ஸ்ரீமான். இராமாயணம் திருவேங்கடதாஸர்

செய்தருளியது.

சீரோங்கு மாண்டொரெண் ணூற்றுத்தொண் ணூற்றிற் றிருக்குருகூர்
நாரோங்கு செந்தமிழ் நம்மாழ்வார் கோவையை நாவலர்முன்
வாரோங்கு ஞானத் திகழ்வேங் கடத்துறை வாண்கவிஞ
னேரோங்கு மாதிப் பிரான்கோ யிலிலரங் கேற்றினனே.

ஸ்ரீ

முகவுரை.

திருவழுதிவளநாட்டிலே திருக்குருகூரிலே வேளாளர்வருணத்திலே வம்சபரம்பரையாகத் திருமாலடிக்கே தொண்டுபூண்டொழுகுங் காரியாருடைய மனைவியாகிய உடையநங்கையம்மையார் திருவயிற்றினின்றும் திருமாலினது அமிசமும் சேனைமுதலியாருடைய அமிசமுமாக ஒரு குமாரர் திருவவதரித்தனர். பிறந்தபொழுதேதொடங்கி, கண்திறத்தல் அழுதல் அம்மமுண்ணல் மலம்விடல் முதலிய வியாபாரம் ஒன்றுமின்றியும் திருமேனிவாட்டமில்லாமல் தேஜசுடன் வளர்ந்துவருகின்ற அதிசயத்தைத் தாய்தந்தையர்கண்டு அந்தத்திருநகரியில் எழுந்தருளியிருக்கும் பொலிந்துநின்றபிரானைச் சேவிக்கச் செய்வித்து அவரது இயற்கை உலகநடைக்கு மாறாக இருந்தபடியால் மாறன் என்று திருநாமஞ் சாத்தினார்கள். இவர் பதினாறுகலைகளும் நிரம்பிய சந்திரன்போலப் பதினாறுபருவம்நிரம்பித் திருவனந்தாழ்வானது அமிசமாக அங்கு அவதரித்திருந்த உறங்காப்புளி நிழலிலே பதுமாசனங்கொண்டு பரமாத்மாவைத் தியானித்துக்கொண்டு ஞானமுத்திரைக் கையராய் வீற்றிருந்தகாலத்தில், மதுரகவியாழ்வார் இவரது வைபவத்தைக் கேட்டு இவர்முன்னிலையிற் சென்று “செத்தத்தின் வயிற்றில் சிறியதுபிறந்தால் எத்தைத்தின்று எங்கேகிடக்கும்” என்றுவினவ இவர் “அத்தைத்தின்று அங்கேகிடக்கு”மென்று திருப்பவளச் சோதி வாய் திறந்து விடையருளிச்செய்தார். அதுகேட்டு மதுரகவிகள் மிக மகிழ்ந்து மாறன்திருவடிகளிலே ஆசிரயித்து அடியேனுக்குத் தத்வ ஹித புருஷார்த்தங்களை விளக்கியருள வேண்டும் என்று பிரார்த்தித்தார். இவ்வாழ்வாரும் இருக்கு எசுர் அதர்வணம் என்னும் மூன்று வேதங்களின் சாரார்த்தத்தைத் திருவிருத்தம் திருவாசிரியம் பெரிய திருவந்தாதி என்னும் மூன்றுபிரபந்தங்களாகவும், சாமவேதத்தின் சாரார்த்தத்தைத் திருவாய்மொழி என்னும் பிரபந்தமாகவும் அருளிச்செய்து அவற்றை மதுரகவிகளுக்கு உபதேசித்துத் தமது வாழ்நாளெல்லாம் பிறிதொன்றிற் சிந்தைசெய்யாது ஸ்ரீமந்நாராயணனையே சிந்தித்துக்கொண்டு உலகநடையாட்டம் சற்றுந்தொடாது முப்பத்தைந்து திருநக்ஷத்திரம் வாழ்ந்

திருந்து வானவரெதிர்கொள்ள வைகுந்தமாநகர்புகுந்து மாமணி மண்டபத்தில் அந்தமில்பேரின்பத்து அடியரோடு அமர்ந்திருந்தனர்.

இப்படி ஒப்புயர்வில்லாத வைபவாதிசயத்தை யுடைய இவ்வாழ்வார் விஷயமாகச் செய்யப்பட்ட மாறன்கோவை யென்னும் இந்நூலின் ஆசிரியராகிய ஸ்ரீமான் வாலப்பிரமசரிய ராமவிரதரான-வேங்கடத்துறைவான் கவிராயர் இற்றைக்குச் சற்றேறக்குறைய ௨௨0-வருடங்களுக்குமுன்பு திருவழுதிவளநாட்டிலே செம்பொன்மாடத்திருக்குருகூரில் "வேதந்தமிழ்செய்த மாறன் சடகோபன் திருவவதாரஞ்செய்த வேளாளர் குலத்திற் கருவிலே திருவுடையராய்ப் பிறந்து நற்குணங்களுடன் வளரவளர்ந்து இளமையிலேயே நல்லாசிரியர்பால் தொல்காப்பியமுதலிய அரிய பெரிய இலக்கணநூல்களும், சங்கத்தமிழிலக்கியங்களும் திருக்குறளும் ஸ்ரீமத்கம்பராமாயணமும் இன்னும் அவர்காலத்து வழங்கிய மற்றைத்தமிழ்நூல்களும் ஐயந்திரிபறக் கற்றுத்தேர்ந்து மாரனார்வரி வெஞ்சிலைக்காட்செயும் பாரினோர் விரும்பும் விஷய சுகானுபவத்திலிச்சையற்று, பிரமசரிய விரதம் நன்குகடைப் பிடித்து, "ஆதியிலத்தைத்தின் றங்கேகிடக்குமென் றம்பவளச் சோதியின் முத்தொளிசெய்தருண் மாறன்" திருவடிகளிலும், "கற்பாரிராமபிரானையல்லான் மற்றுங்கற்பரோ" என்றபடி ஸ்ரீராமபிரான்திருவடிகளிலும் அசஞ்சலமானஞானபக்தி வைராக்ய நிஷ்டராய் மறந்தும் புறந்தொழாதவராய், "ஆத்தானன் குலவா சொற்குருகூரி லருவினையை, நீத்தானுக்காக நின்புட்பாஞ்சலி" யென்று இவர்தாமே யிந்நூலிற் பாடியபடி, ஸ்ரீமத். உ-வே, ஆத்தான் என்னும் ஸதாசார்யர் திருவடிகளில் ஆச்ரயித்துப் பஞ்ச சம்ஸ்காரமும்பெற்று நாலாயிரதிவ்யப்ரபந்தங்களும் அவற்றின் வியாக்கியானங்களும் ஸ்ரீமத் வைஷ்ணவ ஸத்ஸம்ப்ரதாயக்ரந்தங்களும் அந்த ஆசாரியன் ஸந்நிதியில் கேட்டுத்தெளிந்து ப்ரபந்நானுஷ்டானசீலராய் வாலப்பிரமசரிய ராமவிரதரென்னும் சிறப்புத்திருநாமமும் பெற்றனர்.

உயர்வற வுயர்நலமுடையவனும் அயர்வறுமமரர்க ளதிபதியான ஸ்ரீமந்நாராயணனை, அகப்பொருளிலக்கண நெறியால் நாயக நாயகிபாவமாக மயர்வறமதிநல மருளப்பெற்ற நம்மாழ்வாரனுபவித்தபடியே இந்நூலாசிரியரும் ஆழ்வாரைத் தாமும் அவ்வாறு

அனுபவிக்கக்கருதி * மாறனகப்பொருளையும் அதற்கிலக்கியமாகிய † திருப்பதிக்கோவையையும் பெரும்பாலுந்தழுவி, சொன்னோக்கும் பொருணோக்குந் தொடைநோக்கு நடைநோக்குந் துறையினோக்கோ, டெந்நோக்குங்காண் விலக்கியமாகிய இந்நூலைப்பாடி ஆதிநாதன் ஸந்நிதியில் கொல்லமாண்டு ௲௯௭-ல் அரங்கேற்றி ஆழ்வாருக்குத் திருமஞ்சனகைங்கர்யமும் நடத்திக்கொண்டு விளங்கியிருந்தனர்.

செந்தாமரையன் புரோகிதனாகச்செம் பொன்னிறைவெண்
டந்தா வளத்தன் பணிகேட்க ஞானத் தமிழ்க்குருகூர்
வந்தார் திருமஞ் சனகாலஞ் சேவித்து வாழியென்பார்
பந்தா வருட்டிரு வைப்பெற்ற தாதையும் பேதையுமே—என்றும்

தேரீரென் னுள்ளங் குருகூர்ச்சொல் வீறன் றிருமஞ்சன
ஈர வாடையுண் டார்நாவுக் கேமற்ற நீரினிதோ—என்றும்

திருமஞ்சனகால விசேஷத்தையும், ஈரவாடைத்தீர்த்தத்தின் விசேஷத்தையும் வியந்துபுகழ்ந்து பாடியிருப்பதனாலும் இவர் திருமஞ்சனகைங்கர்யம் நடத்திவந்தனரென்பது இக்கைங்கர்யத்துக்காகப் பாஞ்சாலங்குறிச்சி ம-ள-ள-ஸ்ரீ, பாளையக்காரரவர்களால் ஏற்பட்ட மானியங்களாலும் பிரசாதங்களாலும் தெரிகின்றது. மற்றும் இவரது விசேஷமான சரிதத்தைப்பற்றியும் இவரியற்றிய வேறுநூல்களைப்பற்றியும் விசாரித்ததில் இதற்குமேல் ஒன்றுந்தெரிந்திலது.

தன்மை முன்னிலை படர்க்கை அல்வழி வேற்றுமை வினைத்தொகை அகத்திணையியல் களவியல் வரைவியல் கற்பியல் ஒழிபியல் வஞ்சிக்கடையுரிச்சீர் எழுத்து சொல் காரிகை உரை அலங்காரம், என்று இலக்கணநூலில் வழங்குஞ்சொற்களும் நூல்களின் பெயர்களும், திவ்யப்ரபந்தங்களின் பெயர்களும்

---

* இது ஆழ்வார் திருநகரியில் முந்நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னிருந்த ஸ்ரீமான் திருக்குருகைப்பெருமாள் கவிராயரவர்களாற் செய்தருளியது.

† இது ஆழ்வார்திருநகரியில் முந்நூறுவருடங்களுக்கு முன்னிருந்த ஸ்ரீமான் தாயவலந்தீர்த்த திருமேனி இரத்தினகவிராயரவர்களாற் செய்தருளியது.

சிலேடைப்பொருள்படப் பாடிச்சேர்த்திருப்பதையும், சொற்செறிவு பொருட்பொலிவு வெளிப்படைப்பொருள் உள்ளுறைபொருள் தொனிப்பொருள் கற்பனையலங்காரம் பக்திரசமான தோத்திரங்கள் புராணேதிகாசங்களின் பழங்கதைகள் பழமொழிகள் முதலிய சிறப்புகளும் ஆழ்ந்த கருத்துடன் அமைந்து விளங்குவதையும் கல்விகேள்விகளிற் சிறந்தபெரியோர்கள் ஆராய்ந்து மிக்க மகிழ்ச்சியுற்று ஆனந்தம் அடையற்பாலனவாம்.

இந்நூல், மணிகளை ஓரினமாக ஒழுங்குபடக்கோப்பது போல, சிங்காரரசத்தையுட்கொண்டதான அகப்பொருட்கிளவித் துறைகளை ஒழுங்குபடக்கோத்து நிற்றலாற் கோவையெனப் பெயர் பெற்றது.

செந்தமிழிலக்கணங்களைந்தனுள் மூன்றாவதான பொருளிலக்கணம் அகம், புறம் என இருதிறத்தனவாகும், இந்தக்கோவை ஈண்டு அகப்பொருளிலக்கணத்தின் பாலதாம். அகமாவது ஒத்த பண்பும் ஒத்தநலனும் ஒத்த அன்பும் உள்ள பதினாறாட்டைப் பருவத்தனாகிய தலைமகனும் பன்னீராட்டைப் பருவத்தாளாய தலைமகளும், தம்முட்கூடுகின்றபோது பிறந்து அக்கூட்டத்தின்பின் அவ்விருவராலும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய் எப்பொழுதும் உள்ளத்துணர்வாலேயே அனுபவிக்கப்படும் இன்பமாம். அகத்தேநிகழ்கின்ற இன்பத்திற்கு அகமென்பதோராகுபெயர். இது, களவியல் கற்பியல் என்னும் இரண்டு கைகோளாற் கூறப்படும்.

களவியலாவது, *"அறம் பொருளின்பமென்பவற்று ளைந்திணைக்கட், சிறந்த நன்களவெனச் செப்பியகூட்ட, மறைவெளிப்படுத்திய மன்றலெட்டனுட், பொறைமலி யாழோர் புணர்ச்சியதாகும்" என்றபடி வேதத்தில் விதிக்கப்பட்ட எண்வகை மன்றலுளைந்தாவதாய காந்தருவ மன்றலின் முறையால், தலைமகனும் தலைமகளும், கொடுப்போரும் அடுப்போரும் இன்றிப் பான்மை வகையால் ஒருபொழிலகத்துத் தாமே தனியிடத் தெதிர்ப்பட்டுத் தம்முணர்வினரன்றி வேட்கைமிகுதலிற் புணர்தலாற் களவியலென்று பெயர்பெறும். களவென்பது, தருமநெறியன்றேயெனின், களவிற் றீங்குதருவதாய், நிரயத்துக்கேது [வாய்ச்செய்யத்தகாத உலகத்

* மாறனகப்பொருள் களவியல்.

துகிலும் எனைக்களவு போலாது, மேன்மக்களாற் "புகழப்பட்டு ஞானஒழுக்கத்தோடு ஒத்தவியல்பிற்றாய்த் துறக்க வீடுகளைப் பெறத்தருஞ் சிறப்புடைய நன்மைதருங் களவென்பதாம். எவ்வாறெனின் ஒருபெண்டாட்டி தமரொடு கலாய்த்து நஞ்சுண்டு சாவலென்னுங் கருத்தினளாய் விடங் கூட்டி வைத்து விலக்குவாரில்லாதபோது உண்பலென்று நின்றவிடத்து அருளுடையா னொருவன் கண்டு இவளிதனைப் பருகி இறந்துபடாமைக் கொண்டுபோயுகுப்பலென்று அவளைக்காணாமே கொண்டுபோயுகுத்திட்டான்; அவளும் சுனைநீக்கத்துக்கண் விடமுண்டு சாவான் சென்றாள்; அவள் அது காணாளாய்ச் சாக்காடு நீங்கினாள்; அவன் அக்களவினால் அவளை உய்யக்கொண்டமையால் நன்மை பயக்குங் களவாதல் காண்க.

கற்பியலாவது *"கற்பெனப்படுவது கற்பின்வழுவாது, தற்கொண்டானையுந் தன்னையும்பேணி, யில்லறத்தொழுகு மில்லறக் கிழத்தியு, நல்லறத் தவர்மகிழ் நன்மாண்பதனொடு, மகிழ்ச்சியுமூடலு மூடலுணர்த்தலு, மிகழ்ச்சியில் பிரிவுடன்பிறவுமியன்று, புகழ்ச்சியினெய்தியிற் பொருந்துவதாகும்" என்றபடி கொண்டானிற் சிறந்ததெய்வ மின்றெனவும் அவனை இன்னவாறே வழிபடுக வெனவும் இருமுதுகுரவரானும் அந்தணர்திறத்தும் சான்றோர் தேத்தும் ஐயர்பாங்கினும் அமரர்சுட்டியும் ஒழுகுமொழுக்கமும் தலைமகளானுங் கற்பித்தவாறொழுகுதலும் இனித் தலைமகனும் ஓரையும் நாளுந்தீதென்றதனைத் துறந்தொழுகினாற்போல ஒழுகாது ஒத்தினுங்கரணத்தினும் யாத்த சிறப்பிலக்கணங்களைக் கற்பித்துக் கொண்டு கூடலூடல்பிரிவுடன்படுதல் வந்துழிமகிழ்தல் முதலியவற்றானின்புற்று இல்லறத்தினின்றொழுகுதலாற் கற்பியலெனப் பெயர் பெறும். இவற்றின் விரிவிலக்கணங்களெல்லாம் பொருளிலக்கண நூல்களிற்கண்டுணர்க.

பலபிரதிருபங்களைக்கொண்டு மஹாவித்வான்கள் பரிசீலனஞ் செய்து அச்சிடக்கூடிய இந்நூலைச் சிற்றறிவுடைய சிறியேன் பரிசோதித்து அச்சிடுதற்கு அருகனல்லேனாயினும் ஸ்ரீவைஷ்ணவ வித்வான்கள்செய்த செந்தமிழ்நூல்களெல்லாம் அச்சுவெளிவந்த அனந்த வருடங்களாகப் பதிப்பாரின்றி ஏடுகளிலிருந்தே சிலமாதல் கண்டு சில நூல்களைப் பதிப்பிக்கக்கருதிய அவாவினால் நூற்

* மாறனகப்பொருள் கற்பியல்.

திருபது வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட பழைய எட்டுப்பிரதி ஒன்றைத் துணைக்கொண்டு அச்சிற்பதிப்பிக்கலானேன். அடியேன் புல்லறிவிற்குப்புலப்படாத சுத்தபாடங்களை யாரேனும் எடுத்துக் காட்டுவாராயின் அவர்திறத்து எஞ்ஞான்றும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்நூலினிடையில் வீடுற்ற ஒன்றிரண்டு செய்யுட்களையும் எழுதித்தெரிவித்து வேறுசில எட்டுப்பிரதிகளையும் உதவிபுரிந்த ஆழ்வார் திருநகரி எஸ் - பி - ஜி - ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் உ. வே. அப்பு-சடகோபராமாநுஜாசாரியஸ்வாமிகளுக்கு அனந்தமான தண்டன்சமர்ப்பிக்கின்றேன்.

இந்நூலைச் சென்னையில் அச்சிட்டுவருகையில் பரிசோதித்துத்தந்த மஹாவித்வான் ஸ்ரீமான். கா-இராமசாமிநாயுடவர்களுக்கு மிக்க வந்தனஞ் செலுத்துகிறேன்.

இந்தக் கோவையைப்போலவே இன்னும் யான்பதிப்பிக்க எண்ணிய திருவரங்கக்கோவை-திருவேங்கடக்கோவை-கச்சிக்கோவை-அழகர்கோவை முதலிய ஒவ்வொன்றையும் எண்ணியவண்ணம் நிறைவேற்றுதற்பொருட்டுத் தமிழபிமானமுள்ளோரனைவோரும் எட்டுப் பிரதியுதவிபுரிந்து ஆதரிப்பார்களாயின் அச்சிட்டு முடிந்தபின்பு அவரது எட்டுப்பிரதியுடன் அச்சுப்பிரதியும் பெறவிடுப்பதுமன்றி அவர்செய்த பேருதவியைப் பெரிதும்புகழ்ந்து நன்றியறிதலோடு மிகுந்தவந்தனஞ் செலுத்துங் கடப்பாடுடையேனாயிருக்கின்றேன்.

இங்ஙனம்

தாஸன்

மு. வேணுகோபாலசாமி நாயுடு,

பூளைமேடு, கோயம்புத்தூர்.

ஸ்ரீ






ஸ்ரீமதேராமாநுஜாயநம:

மாறன் கோவை.

காப்பு.

தண்கோவை வாய்வில்லி புத்தூர்த் தலைவி தலைவனை
ரெண்சோவைப் பாடல்செய் செந்தமிழ் மாறர்க் கிலங்கும்பொன்
வண்கோவை மேகலை யார்மரு டீர்ந்த மதுரகவி
யொண்கோவை வாழ்த்தி யகப்பொருட் கோவை யுரைசெய்வனே.

நூல்.

களவியல்.

கைக்கிளை.

காட்சி.

சீர்கொண்ட தாமரை வான்முகங் காவி நெடுந்தடங்கண்
கார்கொண்ட பாசிலையம் பால்வள்ளை காதிணை கஞ்சமுகை
வார்கொண்ட கொங்கை யெனக்கோல மாதர் வடிவநிறை
யேர்கொண்ட மாறன் குருகூர்த்தண் பொய்கை யெழில்கொண்டதே.

ஐயம்.

பூமேவு வாச மகிழலங் காரப் புயப்புனிதர்
தாமேவு தென்குரு கூர்நில மோசங் கணித்துறைசூழ்
கோமேவு சங்கத் திரைக்கட லோதமிழ்க் கோலவெற்போ
மாமேவு மாசனப் போதோ பதியிம் மதிநுதற்கே. (உ)

துணிவு.

அலருங் குவியுங் குவளைமைக் காவில்வண் டார்க்குங்கஞ்ச
மலருஞ் செகதலத் தேவரு மால்மகிழ் மாறர்க்கன்பாய்ப்
பலரும் பரவுங் குருகூரிம் மாதரைப் பார்க்கிலெண்ணி
யலருந் துணைநெஞ்ச மேநம்மில் வேறல்ல ரோருயிரே. (௩)

இதுவுமது.

செயலா யிலங்கு மணிமேக லைப்பல்குற் றேருங்கண்டார்
மயலாக வல்லி படர்கின்ற வோங்கலும் வாய்ந்தனவாற்
புயலாருஞ் சோலைக் குருகூரின் மாறன் பொருப்பிலிவ்
ருயலாவ தென்னுநெஞ் சேயிய லாரிடை யுள்ளுவரே. (௪)

இது தலைவன் தலைவியை வியந்தலெனினு மமையும்; திருச்சிற்றம்பலக் கோவையும் தொல்காப்பிய நச்சினார்க் கினியருரையுங் காண்க.

குறிப்பறிதல்.

கொடியார்நல் லாரென்னு மாதர்தொல் பேரிக் கொடியிடையார்
வடியார் கருங்கண் விளக்கிய வாமயங் கேன்மயங்காப்
படியா ரணத்தமிழ் செய்தான் குருகைப் பராங்குசன்றன்
னடியாரல் லார்செயு நீர்மையுந் தீமையு மாற்றிலனே. (௫)

இதுவுமது.

எண்ணாத தெண்ணி வருந்தனெஞ் சேவண் டிரைக்குமலர்த்
தண்ணார் வகுளப் பிரான்குரு கூர்நின்ற தண்பொற் கொம்பின்
கண்ணா கியமலர்ப் பூங்கொடி மீதுற்ற காரணத்தாற்
பண்ணா ரிதழ்ச்செழுந் தேனமக் கேயின்று பாலிக்குமே. (௬)

இயற்கைப்புணர்ச்சி.

இரந்துபின்னிற்றல்.

பருவச் சிலைக்குனித் துண்கண்க ளாமம்பு பூங்குழைமேற்
சருவப் பொரவென் மனங்காய மானது தாமமகி
ழுருவப் பிரான்குரு கூரனை யீரென லுட்கொண்டின்ப
மருவச் சுவைமருந் தென்றருள் வீர்கனி வாய்மலர்ந்தே. (௭)

முன்னிலையாக்கல்.

சுனையாட லூச லினையாடல் பந்தொடு தொட்டெறியம்
மனையாட லம்விட்டு வாளாநின் றீர்சென்ம மாயவினை

விளையாடல் கொண்ட பிரான்குரு கூரிலெய் தாப்படர்க்கை
விளையாடுந் தன்மையென் முன்னிலை யாக விளம்புமின்னே. (அ)

மெய்தொட்டுப்பயிறல்.

யார்மேல்லைவப் போமிடை யாய்ந்தெய்த் தறுபழி யென்றுசொங்கை
வார்மேல்லைவத் தக்சொண்டு விம்மிய வாமதா ரத்தமிழ்மா
ஞர்மேல்லைவத் தான்குரு கூர்வண்டு காளிவ ரோதிவிடீர்
பார்மேல்லைவக் கும்மிள நீர்தேரை,யேயுண்ணப் பட்டதென்றே.

பொய்பாராட்டல்.

விண்ணும் புவியுந் தொழுங்குரு கூர்த்தமிழ் வீறன்வெற்பிற்
பண்ணும் குழலும் பழகுஞ்சொல் லாய்பறப் பாரும்வெறி
நண்ணும் புலம்பு மறுகாலை யுங்கொண்டு நையும்வண்டுன்
கண்ணுங் குழலுங்கண் டேகிறந் தோற்றவக் காலந்தொட்டே. ()

இடம்பெற்றுத்தழாஅல்.

தாழ்கின்ற வேங்கைச் சினைமேற் கதிக்கொடி தாம்படர்ந்து
சூழ்கின்ற பூவுன் மணவறை யாயின தூயவர்கள்
வாழ்கின்ற மாறன் குருகூர் வரைவயி ரம்பிருளைப்
போழ்கின்ற திவ்விட மேயிட நாமிவர்ப் புல்லுதற்கே. (கக)

வழிபாடுமறுத்தல்.

பாயே புளியெனக் கொண்டான் குருகைப் பனிவரைவாய்
நீயே யுறுதுணை யாயடைந் தேனின்னை யன்றியப்பாற்
போயே யொதுங்கிடக் காணேன் கடன்மல்லைப் பூதப்பிரான்
றுயேயென் றுணையுங் காப்பாயிவ் வெற்பர் தமக்கொளித்தே. (கஉ)

இடையூறுகிளத்தல்.

ஓவத்தன் பாதம் பராவும்வி சாகத்த னென்குருகூர்
மாணத் திருவவ தாரஞ்செய் தீர்வன்ச மர்செய்யுமால்
பூணக் கருத்தறி விக்குமென் றேவென் புலம்புமுகங்
காணத் தகாதென்ன வோபுதைத் தீர்மலர்க் கண்கைகொண்டே.

இதுவுமது.

குலைமீ தலைசயுங் கமுகா டவிக்குரு கூரன்விண்ணோர்
தலைமீ தணிந்தபொற் றுன்மாறன் மால்வரைத் தையனல்லீர்
மலைமீ தலர்கின்ற காந்தளம் போது மலைதெரிய
வலைமீ தெழுங்கட லெல்லா மறைத்த ததிசயமே. (கச)

நீடுநினைந்திரங்கல்.

தாளோ சிறிதுமில் லாநெஞ்ச மேதஞ்ச மேதுசொலுங்
கோளோட வென்றெமை யாண்டருண் மாறன் குருகையினை
வாளோ டிகலுங் கருங்கட்செவ் வாய்மட மங்கையெந்த
நாளோ கலவி நலந்தரு நாளுள்ள நாணம்விட்டே. (௧௫)

மறுத்தெதிர்கோடல்.

விரையார் மலர்பொரு வின்று ணிறைவெள் ளருவிவெள்ளி
வரையா ரெதிர்நின்ற வாறுள தேல்வள ராசைவெள்ளக்
கரையா வியபொரு வின்று ணிறையுங் கமழிலஞ்சி
நிரையார் புயன்குரு கூர்வரை யாரெதிர் நிற்பதுண்டே. (௧௬)

வறிதுநகைதோற்றல்.

இகத்தே பழவினை யெல்லாந் தொலைத்தெம்மை யாண்டுகொள்வான்
செகத்தே யவதரிக் குங்குரு கூரன் சிலம்பிலன்ப
ரகத்தே பெரிது நிலாநகை தோற்ற வவிர்மதிபோன்
முகத்தே சிறிது நிலாநகை தோற்று முகிணகையே. (௧௭)

முறுவற்குறிப்புணர்தல்.

பண்டகாட்டு மாதர் நகைத்தள வேமுன் பரந்ததுன்பங்
கிடைகாட்டு மென்னு முலகமன் றேவண்டு கிண்டுமகிழ்த்
தொடைகாட்டு மார்பன் குருகூர்ப் பொதியச் சுரும்பிலின்ப
நடைகாட் டியதெனக் கென்றுமிம் மாதர் நகைத்தளவே. (௧௮)

மொழிபெற விரும்பலும் வரும்.

திருச்சிற்றம்பலக்கோவையும் திருப்பதிக்கோவையுங் கண்டுணர்க.

ஆதியி லத்தைத்தின் றங்கே கிடக்குமென் றம்பவளச்
சோதியின் முத்தொளி செய்தார் குருகைச் சுரும்பினுண்ணூற்
பாதியி லாயிரத் தோர்கூற் றிடையினெம் பாவையன்பா
யோதிய கோவை யுரையா லகப்பொரு ளோர்வதென்றே. (௧௯)

முயங்குதலுறுத்தல்.

விண்ணூடு வந்துட னேமறை யாநின்ற மின்னுருவ
மண்ணூடு வந்துகைப் பட்டதன் றேமலர் மங்கைநங்கை
கண்ணா டொளிரு மணிமகிழ் மாறன் கவின்குருகூர்ப்
பண்ணா டமுதொழு குஞ்சொல்லி யான்பெற்ற பான்மையதே. (௨௰)

இதுவுமது.

உள்ளாசை வாசம் புறத்தினுந் தோன்ற வொளிர்மலர்வாய்
விள்ளாமு னுண்கட் டவிழ்ந்தத னாலெம்மை வெம்பிறவி
நள்ளா தருளுநம் மாழ்வார் குருகையி னுங்கலவிக்
கள்ளார நாடுஞ் சுரும்பாய் விரும்புதங் கன்னியையே. (௨௧)

கலவியின் மகிழ்தல்.

கலக்காமன் மாயையை வென்றான் குருகைப்பொற் காரிகைநே
ரிலக்காம னல்லவர்ச் சேர்ந்தன நாமினி யேர்கொண்டவிட்
புலக்காமன் வாழ்வு மிதுபோது நம்மைப் பொருதலைத்த
சலக்காமன் றாழ்வு முயன்றாற் பெறுவந் தடையின்றியே. (௨௨)

புகழ்தல்.

இழைகாணுஞ் சிற்றிடை நங்கைசொற் பால னெழிற்குருகூர்க்
குழைகாணுங் கண்ணியைக் கூடுமுன் னேமயல் கொண்டநெஞ்சின்
பிழைகாணு மும்மை நிகராய்ச்சொன் னேன்புனல் பெற்றிருண்ட
மழைகா ணுமக்கிவண் மைக்குழல் போல மணமுமின்றே. (௨௩)

இதுவுமது.

நிலங்கொண்ட லென்னப் பொலிந்துநின் றாரை யிணைந்தமுன்னாள்
வலங்கொண் டிடத்திருந் தார்குரு கூர்வரை மேவுமிருட்
குலங்கொண்ட கோதை மிடற்றுக்குத் தோற்றுக் குவிந்துமுகச்
சலங்கொண் டலைதருஞ் சஞ்சலஞ் சேருஞ் சலஞ்சலமே. (௨௪)

வன்புறை.

அணிந்துழி நாணியதுணர்ந்து தெளிவித்தல்.

ஆடிய தாயபொற் பாவையுந் தாமு மவனியுள்ளோர்
நாடிய வேலையின் வேறுபெண் ணார்நறை யார்வகுளஞ்
சூடிய மார்பன் குருகூரொன் கையணி சூழ்கின்றநின்
சேடியர் கையணி யேவருந் தேலென் திருந்திழையே. (௨௫)

பெருநயப்புரைத்தல்.

புனங்காணுங் சேசரத் தாரான் குருகைப் பொருப்பிற்கதி
ரினங்காணும் போது நிலாக்காணும் போது மிணைமுலையாய்
முனங்காணும் பூவு மலர்பூவு மாதர் முலைமுகம்போ
லனங்காள் சுரும்பினங் காளுள வோகண்ட வம்புயத்தே. (௨௬)

தெய்வத்திறம்பேசல்.

வானிற் கலந்தொளிர் மின்னையும் பூவின் மணத்தையும்பைந்
தேனிற் கலந்த சுவையையும் போற்றெய்வஞ் சேர்த்தெம்மைக்
கானிற் கலந்த வருளா பரணன் கவின்குருகூர்
யானிற் கலந்த நலம்பிரிப் பாரெவ ரேந்திழையே. (உஎ)

பிரியேனென்றல்.

கன்மாதை நந்தி யிடந்துறந் தாலுங் கமலமலர்ப்
பொன்மாதை மாய னுரந்துறந் தாலும் புராணமறைச்
சொன்மாதை வேதன்செவ் வாய்துறந் தாலுந் துறத்தல்செய்யே
னென்மா தவன்குரு கூர்மாது நின்னை நனவினுமே. (உஅ)

பிரிந்துவருகென்றல்.

காதோடி மீளுநின் கண்மலர் போலக் கடிதகன்றிப்
போதோடி மீள வருகுவன் யான்புன்மை யாஞ்சமய
வாதோட வென்ற பிரான்குரு கூரன் மணிவரைசூழ்
சூதோடுங் கிள்ளை யினத்தோடு மாடுக தூமொழியே. (உகூ)

இடமணித்தென்றல்.

முந்தும் பரம்பொருள் வேறென்று பாடித்தன் மொய்ம்படையோ
[illegible] கரந்த பிரான்குரு கூரனை யீரகிலுஞ்
சந்தும் புணர்ந்தவெஞ் சாரலுள் ளார்வித்துத் தப்பியப்பாற்
சிந்துந் தினைமுளைக் கும்முங்கள் சாரற் றினைப்புனத்தே. (௩0)

இதுவுமது.

பொன்னகர் நீங்கியெங் கோன்மகிழ் மாறன் புகழ்க்குருகூர்
நன்னகர் வாழ வருந்திரு வேநண் ணிடமணித்தா
முன்னகர் வாவியின் முப்புடைக் காய்விழு மோதையினு
லென்னகர் வாவி யகன்றுயி னீங்கு மிரங்கலையே. (௩க)

இருபதமும் வேண்டலும் வரும்.

நெடியான் சரணஞ் சரணமென் றேகினை வாயிறைஞ்சு
முடியான் குருகைப் பதிமட மான்முள ரிப்பதங்காள்
கொடியா னுணுகிடைப் பூங்கொம்பை மீண்டுங் கொணர்தல்கொம்பி
னடியா னெனவுங்கள் பேரடைந் தேனுக் கருள்வரமே. (௩உ)

தெளிவு.

பொய்யாத செஞ்சொற் குருகூரின் மாறன் பொருப்பருளை
மெய்யாத லேயன்றி வேறுத லன்றிந்த மேதினியோ
ரெய்யா மனத்துக் கெதிர்மன மேகரி யென்குவர்நா
ளையா துடன்வரு வாரற வாய்வர நன்னெஞ்சமே. (௧௩)

பிரிவுழி மகிழ்ச்சி.

செல்லுங்கிழத்திசெலவுகண் டுளத்தொடுசொல்லல்.

காணா மரபின தாருயி ரென்றுமுன் கட்டுரைத்தார்
நாணார்கொல் லோவிங்ஙன் வந்துகண் டாலின்று நம்முயிர்பொற்
பூணார் தனைக்குன்றும் பின்பார்த்த கண்ணும்புன் மூரலுமாய்ச்
சேணார் திருப்புளி யார்குரு கூர்வெற்பிற் செல்கின்றதே. (௧௪)

இதுவுமது.

பாதை மருவு மொருகா லெமக்கருள் பண்ணவல்லிக்
காதை மருவு மொருகாற் கமலக் கயல்கமலப்
போதை மருவு மகிழ்வாச மாறன் புகழ்க்குருகூர்ப்
பேதை மருவு மிருகாலுஞ் செய்யும் பிரிவினையே. (௧௫)

பாகனொடுசொல்லல்.

வெள்ளைநந் தாழிகைக் கொண்டானைப் போற்றிய வீறனங்கை
பிள்ளைகொண் டார்மகிழ்த் தாரான் பெருங்குரு கூர்வலவா
வள்ளையுந் தாவு மடித்தா மரைமுன்னும் வாவுமொரு
கிள்ளைசெந் தாமரை மேலாக் கியலிரு கெண்டையுமே. (௧௬)

பிரிவுழிக் கலங்கல்.

ஆயவெள்ளம் வழிபடக்கண்டிது மாயமோ வென்றல்.

பணிவார் பலர்புகழ் வார்பல ரேவற் பணியர்பல
ரணிவார் பலர்புத்தி சொல்வார் பலரென வாயமின்றார்
தணிவார்க ளாக வுயர்ந்தார்நம் மாறன் தமிழ்க்குருகூர்
துணிவார் மனங்கன வோகன வாயினுந் தன்னரிதே. (௧௭)

வாயில்பெற்றுய்தல்.

மேவிய வாயமு மாறன் குருகையின் னாளுஞ்சென்று
ளேவிய வேவற் படியே பணிசெயு மிங்கிவளெம்
மாவியன் னாட்குயிர் போன்று ளிவளை யவளுடைய
சாவியங் கண்களுந் தாமே தமக்கென்று காட்டினவே. (௧௮)

பண்புபாராட்டல்.

இடைபோல மின்னு நுடங்காது காதி லெறிகருங்கட்
கடைபோல வாளியென் மார்புரு வாதிந்தக் காரிகைதன்
னடைபோல வன்ன நடைமேலென் னுதிரு நானிலஞ்சூ
ழுடைபோலுங் கண்ணங்கை பெற்றான் குருகை யுயர்வெற்பிலே.

பயந்தோர்ப்பழிச்சல்.

செந்தா மரையன் புரோகித னாகச்செம் பொன்னிறைவெண்
டந்தா வளத்தன் பணிகேட்க ஞானத் தமிழ்க்குருகூர்
வந்தார்-திருமஞ் சனகாலஞ் சேவித்து வாழியென்பாற்
பிந்தா வருட்டிரு வைப்பெற்ற தாதையும் பேதையுமே. (௪௧)

கண்படைபெறாதுகங்குனோதல்.

தான்வர் காலந் தொலைந்துமுன் போற்றணி யாழித்திண்டேர்
வான்வர் காலம் வருவதென் றோமகிழ் மாலைப்புய
ஞானவ ரோதயன் றென்குரு காபுரி நாட்டமுத
பானவ் ராவல் குலைச்சேர்ந்தென் னாட்கண் படைகொள்வதே. ()

இதுவுமது.

தண்ணார் மகிழ்ப்பெரு மான்குரு கூரினுட் டானுங்கண்ட
பெண்ணா ரமுதைப் பிரிந்தது வேபிழை யாயெண்ணியென்
கண்ணார் நிமியும் பிரிந்தன ளேகண் ணிமையொடிமை
நண்ணாது நீண்ட திராவழிந் தான்கொ னளினத்தனே. (௪௨)

இடந்தலைப்பாடு.

தந்ததெய்வந்தருமெனச்சேறல்.

ஆடா வரவத்தை யுண்ணாத தென்செய் தடர்ந்திருண்டு
கூடாத மாலை நிகர்சோலை வாயெழு சூரியன்போற்
கோடாத விவ்வண் குருகா புரிமலர்க் கோதையைநாந்
தேடாது முன்றந்த தெய்வந் தருமெனத் தேறுநெஞ்சே. (௪௫)

முந்துறக்காண்டல்.

கரையன் றிகருழல் சேலன் றிலைவிழி செய்யதண்டா
மரையன் றிருமுகங் கோடன் *றிலைதனம் வாய்ந்தமுத்த
நிரையன் றிலைநகை யாழ்வார் குருகைநன் னீர்ச்சுனையன்
றரையன் றிநாளென்னக் கண்டவம் மாத ருருமுற்றமே. ()

---

* இதுகளம் என்றும் பாடம்.

முயங்கல்.

சேமித்து முன்வைத்த கிட்டா வரும்பொருள் சேமித்தவர்
காமித்துப் பின்னாருங் கைக்கொண்ட தாமகிழ்க் கண்ணிப்பிரா
னேமித் தடக்கைப் பிரானுக்கன் பாகிம லன்குருகூர்
நாமித் தடம்பொழில் வாயிவர் காம நலம்பெற்றதே. (௪௫)

புகழ்தல்.

ஆறுங் குளனுங் கழனியுங் காவு மணிதெருவு
மீறுங் குருகைப் பதிமகிழ்ப் பாவலன் வெற்பிலென்மெய்
தேறும் படியுண்ண வுண்ணப்பெண் ணேதெவிட் டாதசெந்தே
னூறுங் குமுதமுண் டானுமுன் வாயை யுவமிப்பனே. (௪௬)

ஆயத்துய்த்தல்.

தேன்கண்ட நாண்மலர்ப் பூந்தழை கொய்து சிலம்பெதிர்கூய்க்
கான்கண்ட தண்சுனை நீர்குடைந் தேமெய் கமழிலஞ்சிக்
கோன்கொண்ட சொற்குரு கூர்மட வாயெழில் கொண்டுநென்னல்
யான்கண்ட வாறுன தாயமுங் காண வெழுந்தருளே. (௪௭)

பாங்கற்கூட்டம்.

தலைவன் பாங்கனைச்சார்தல்.

பெற்ற மணியை யகன்றோர் மயக்கம்பெற் றான்மயங்கார்
மற்ற மணியையன் னார்காணிற் காட்டுவர் வாட்கண்வெம்போர்
கற்ற மணிசெய்த மோகத்தைத் தீர்க்கநங் காரிதர
வுற்ற மணிதென் குருகூரிற் பாங்க னொருவனுண்டே. (௪௮)

பாங்கனையுற்றதுவினாதல்.

தெளியாறுண் ணூலுனக் கும்முள தோதென் குருகைத்திருப்
புளியார் தியானமுந் தித்திக்கு மேதிரை பொங்கியறுண்
டுளியார் கலிபொடி யானுலுந் தேறுந் துணிவுடையா
யெளியாரைப் போல முகம்வாடி யென்கொ லிளைக்கின்றதே. (௪௯)

தலைவனுற்றதுரைத்தல்.

அடக்க வடக்க வடங்கா தவாவுள் ளறிவழிந்து
நடக்கவு நாணி யொளித்தே னுனக்குநன் மாந்தருமால்
கடக்க மதிசொல்லு நானே யொருத்தி கடைக்கணெறி
படக்கவன் றேன்மகிழ்த் தாரான் குருகைப் பதிநண்பனே. (௫௦)

பாங்கன்கழறல்.

மடியா மலைநிலைத் தாங்கியும் பூரித்தும் வாட்டஞ்சற்றும்
பிடியா வுயர்தடந் தோளண்ண லேபிழையாதபத்தி
யடியார் தமக்கருளாழ்வார் குருகை யணிந்தமென்பூங்
கொடியா ரெழில்கண்டு வாடத் தகாதுட் குழைதரவே. (௫௧)

கழற்றெதிர்மறுத்தல்.

தண்டார் வகுளப் பிரான்குரு கூரென் றகைநமதிறை
கொண்டார் நகையுங் குமுதச்செவ் வாயுங் குவளைக்கண்ணும்
வண்டார் குழலு முச்சோதி யுந்தன வள்ளமுங்கண்
கண்டாற்சொல் வாய்சொல்லி னுஞ்சொல் லாது கருத்திதுவே.

இதுவுமது.

அரும்பைக்கண் டாலன்ன மென்னகை நங்கைக் கமுதமென்னெஞ்
சிரும்பைக்கண் டாக்குழைப் பான்குரு கூர்நம்ப வேந்துமலர்ச்
சுரும்பைக்கண் டாலன்ன காரிரு ளோதி சுமந்துவந்த
சரும்பைக்கண் டாலிந்த வேம்பான வார்த்தை கழறலையே. (௫௩)

கிழவோர்ப்பழித்தல்.

இடியைப் பொருகுரன் மாவைக் கொலுஞ்சிங்க வேறிளமென்
பிடியைத் தனித்துக்கண் டஞ்சலு மாம்பெரு நான்மறையின்
முடியைத் தமிழ்செய்த வாழ்வார் குருகை முளரிக்கைப்பொற்
றொடியைக்கண் டேநின் புயமேரு வாடத் தளங்கினையே. (௫௪)

கிழவோன் வேட்கைதாங்கற் கருமைசாற்றல்.

தேனார் கடல்புகுந் தண்டார் மதித்துமத் தேனுண்ணவா
வானார்தம் வாய்ப்பெய்த வேப்பிலைச் சாறொக்கு மாடளிகுழ்
கானார் வகுளப் பிரான்குரு காபுரிக் கன்னலின்சொன்
மானாரை வேட்ட லெனநீ யுரைத்தவிவ் வாசகமே. (௫௫)

பாங்கன் றன்மனத்தழுங்கல்.

திடமே தருந்தமிழ்க் கோமான் குருகைச் சிலம்பனிலைக்
குடமே தனந்திரை யேகுழற் கஃதொரு கொம்புக்குவெவ்
விடமே நயன மமுதே யுருவமின் னேமருங்குல்
படமே கடிதட மென்னுமென் னுமினிப் பண்ணுவதே. (௫௬)

தலைவனைடழுங்கல்.

நாடு மிலக்குற்று நில்லா யுதமென நான்சொலுஞ்சொல்
வாடு முனைக்கணை னெய்யையும் போலு மலர்வகுளந்

சூடும்பிரான்குரு கூர்நாட வானந் தொடர்புன்னையின்மேல்
மூடுங் கலமுமுண் டோதேறு நீயுன் முயற்சிதொண்டே. (௫௭)

ஆண்டகை பாங்கனை யவணேயென்றலும் வரும்.

கன்றால் விளங்கனி கொண்டானைத் தேர்ந்துளங் காய்வினையை
வென்றான் குருகைப் பிரான்வரை வாய்விரை வாய்பொழிலிற்
சென்றுலென் பூவையைக் காண்பாய்நன் பாவங்குச் சென்றுகண்டா
யென்று மிரங்குவை யாருலென்னை நீயிங் கிகழ்ந்ததற்கே. (௫௮)

எவ்விடத் தெவ்வியற்றென்றல்.

இடத்தா ளளந்த தலமோ மழைவண்ணனத் தென்னதவலத்
தடத்தா ளளந்த தலமோவித் தாளிணை தாளொன்றெண்ணுந்
திடத்தா ளடியார்க் கருண்மகிழ் மாறன் திருக்குருகூர்
கடத்தாளக் கொங்கை யிடமிய லேது நாயகியே. (௫௯)

இவ்விடத் திவ்வியற் றென்றல்.

கரும்புங் கதலியு மாலுஞ்செங் கோலைக் கனியும்புட்கள்
விரும்புங் கமுகுங் கமுகிளம் பாளையு மெய்யுணர்வாய்
வரும்புங் கவர்புக ழாழ்வார் குருகையெம் மானிடங்கோங்
கரும்பும் பொருந்துநன் பாவிவை போலு மவயவமே. (௬௦)

இறைவனைத் தேற்றல்.

பிரமாபண் ணர்ச்சனை யென்னுதி வாக்குப் பெறுங்குருகா
புரமா தவன்மகிழ் மாறன்வெற் பாபொலி வாலுநெடுந்
திரமாம் வடிவினுஞ் சார்நிறத் தானுஞ் செழிக்குமிந்தி
வரமாம் விழிப்பொன்னைக் காண்பேன் வருந்தல் வருந்தனையே. ()

குறிவழிச்சேறல்.

அன்று ரணந்தமிழ் செய்தான் குருகை யடர்ந்தகுயி
னின்றூர் பொழிலிடை நிற்குங்கொல் லோநிரை வண்டுமின்சொற்
குன்றுத கிள்ளையு மன்னமும் பூவையுங் கூண்டுசுற்ற
மன்றுர் மலர்த்தொடை யான்சொன்ன கோல மடமயிலே. (௬௨)

பாங்கன் றலைவியைக்காண்டல்.

துவளேத மாமிடை மின்னே யிலங்குஞ் சொருபமின்னே
திவளேழை வாண்முகந் தாமரை யேசெங்கண் டாமரையே
யெவளேயென் றண்ணலெம் மாழ்வார் குருகை யிறைவன்சொன்ன
வவளே யிவளிவ் வனமே யவன்சொன்ன வவ்வனமே. (௬௩)

காட்டியகடவுளைக் கண்ணுற்றிறைஞ்சல்.

சிந்திப் பதுந்தெரி சிப்பதுந் தோத்திரஞ் செய்வதுமுன்
வந்திப் பதுமன்னைக் கூட்டி மனத்து மகிழுமன்பர்
புந்திப் பதுமநகம் மாழ்வார் குருகைப்பொற் பூவையைநாஞ்
சந்திப் பதுஞ்செய்த தெய்வத்துக் கேபண்ணத் தக்கனவே. (கூச)

இகழ்ந்ததற் கிரங்கல்.

திருமாலை யேத்தும் பிரான்மகிழ் மாறன் திருக்குருகூர்ப்
பெருமால் வரைமலர்ச் சோலையின் வாய்முன்னும் பின்னும்வில்லுங்
கருமா முகிலு நடக்கவு மாமின்னைக் கண்டுருகு
மொருமா னவன்மதி யைப்பழித் தேனென் னுணர்வின்மையே.

தலைவனை வியத்தல்.

ஒருபா லிருளொரு பாலம் புலியொரு பாற்சிங்கமா
மிருபான் மதகரி யாகவெப் பாலு மிகலரங்கை
தருபா லகன்குரு கூர்மட மானின்ற தாரைதப்பி
வருபால னேயெண்ணி லாண்பான்முன் னுந்திட மானவனே. ()

தலைவியை வியத்தல்.

மாலே யவன்திருத் தானே யிவளொன்ன வாய்ந்தவழ
காலே யிவளவ னுக்கே யுரியவ ளாரணத்தைப்
போலே செழுந்தமிழ் செய்தான் குருகைப் பொலங்கொடிக
சேலே யிறையவ னுண்ணீர் தெளியத் திரிதருமே. (கூஎ)

தலைவன் பாங்கனை நினைத்தலும் வரும்.

வழிமாறி வேறுசென் றுளேனென் சொல்வழி யேசென்றுதேன்
மொழிமாறு மொய்குழற் கண்டன னேமொய் குழலைக்கண்டு
விழிமாறி வைத்திங்ஙன் மீண்டன னேதமிழ் வேதச்செந்தேன்
பொழிமாறன் றென்குரு கூர்வாழென் னுருயிர் போனண்பனே. ()

தலைவன்றனக்குத் தலைவிநிலைகூறல்.

மதமான் மழைமுகின் மாலென்றி யானின்னை வாழ்த்தியது
மிதமா மடப்பிடிப் பைந்தோகை பொன்னென் றிலங்கிழையை
விதமாக நீசொன் னதுமெய்ம்மை யாய்த்தமிழ் வித்தகனற்
புதமார் குருகைச் சிலம்பாகண் டேன்சொன்ன பூவையையே. ()

அடையாளங் கூறலும் வரும்.

கையார் கழங்கிந் புடைத்தது பூண்முலை காற்கள்பட்டு
கையாத வூசலைப் போலாடுந் தாழ்குழை நான்மறைபோன்

மெய்யான செந்தமி ழாழ்வார் குருகை விமலர்வெற்பி
லையா வவள்கை நகங்கிளி வாயடை யாளமெய்யே. (௭௦)

தலைவன்சேறல்.

இடிநின்ற நாதக் குரல்வேழ நீங்க வினைவிழைவாம்
பிடிநின்று சோலையுட் டேடுவ போன்முகில் பின்னிப்பொன்னின்
கொடிநின்ற மாடக் குருகூர்ப் பராங்குசன் கோலவெற்பில்
வடிநின்ற கண்ணிநின் றானின்ற தாகுமென் மன்னுயிரே. (௭௧)

தலைவியைக்காண்டல்.

மானுங் கடுவும் வடுவுங் கடலுமொள் வாளும்வண்டு
மீனுஞ் சரமும் பொருவுங்கண் ணாளேவில் வேளைவென்ற
கோனும்ப ரும்புகழ் பாமாறன் வாழுங் குருகைத்தெய்வந்
தானுந்தந் இன்று தருவானைக் கொண்டுந் தரச்செய்ததே. (௭௨)

கலவியின்மகிழ்தல்.

காமேவு தேனைத் தமக்காந் துணைப்புறங் காக்கவைத்துத்
தாமேபின் னுஞ்சென்று துய்ப்பார்க்கொப் பாயினந் தண்ணிலஞ்சித்
தேமேவு மார்பன் குருகூர்ப் புலவன் செழுஞ்சிலம்பில்
யாமேயிம் முற்றிழை முற்று முலையின்ப மெய்தினின்றே. (௭௩)

புகழ்தல்.

சற்றறி வார்துணை யுள்ளே கருதமிக் காரிகைமெய்
யுற்றறி வாயு மொருகாலத் தையுறு மொண்மகிழ்த்தார்
பற்றறி வாளன் குருகூ ரிவர்நுதற் பார்வைத்தரஞ்
சற்றறி வானவ்வி வில்லம்பென் றோடத் தகாததன்றே. (௭௪)

[illegible]ொடுவருகெனப்பகர்தல்.

அணையே யனையெனச் சங்கினு முத்தந்தருஞ் சாற்றருகாம்
பணையே பணைகுரு கூர்மகிழ் மாலைப் பரமன்பொருப்
பிணையே யிணைக்கொங்கை யாயின்ன நாயின்ப மெய்தவுயிர்த்
துணையே துணைவா நீவரு வாயிந்தச் சோலையிலே. (௭௫)

பாங்கிற்கூட்டல்.

காணா தொருநொடி நீங்கினு மென்போற் கருத்தயரு
நாணார் சிலைநுத லாயத்தை மேவுமெய்ஞ் ஞானமெல்லா
நீணான் மறைத்தமி ழான்குரு கூர்வெற்பி னின்றுணையும்
பூணார் வனமுலை யாயதி யாதிப் புணர்ச்சியையே. (௭௬)

பாங்கிமதியுடன்பாடு.

ஐயுறல்.

முன்னேயி லாத மனமும் பொலிவு முளைமதியைக்
கொன்னே தொழிர்மையுஞ் சிற்றூணும் வஞ்சக் குறிப்புந்தனி
பின்னே நடப்பது மெப்போது மோரிட மேவலுமிங்
கென்னே வருளைப் பிரான்குரு கூர்வஞ்சிக் கெய்தினவே. (எஎ)

தனித்தனியையமும்வரும். கண்ணுஞ் சேயரிபரந்தன்று என்பது முதலான ஏழுபாட்டும் நோக்கியறிக.

நாற்றங்கண்டையுறல்.

இற்றைப் பகன்முன்பு நாம்பூ சினதன்றி யேதிலதா
மற்றைக் கலவையு மெய்தோன்று மால்பல வானவர்க்கு
மொற்றைப் புளிப்புல வோன்குரு கூரிலென் னொண்டொடிதன்
கற்றைக் குழலிங்ஙன் கிட்டாத போதுங் கமழ்கின்றதே. (எஅ)

தோற்றங்கண்டையுறல்.

பார்க்கின்ற பார்வை மடந்தீர்ந்து சேந்தது பாவைநுதல்
வேர்க்கின் றதுதனம் பொன்னாய்ப் பாந்தமெய் யன்பர்துன்பந்
தீர்க்கின்ற மாறன் குருகூர்ச்செந் தேனைப்பைந் தேன்விரும்பிப்
போர்க்கின்ற கோதைக் கிருதோளு நீண்டு புளகித்தவே. (எகூ)

ஒழுக்கங்கண்டையுறல்.

பற்றுங் கழங்குமம் மானையுஞ் சூதும் பயில்சிற்றிலுங்
கொற்றுங் கிளியுமுன் போலவெண் ணுண்மடங் கொண்டுபண்டு
சிற்றுஞ் சொல்வுமில் லாண்மகிழ் மாறன் திருக்குருகூர்
முற்றும் பிறையுந் தொழாளென்ன கா[illegible] மெ[illegible]குழலே. (அ0)

உண்டிகண்டையுறல்.

பாலுங் கனியுஞ்செந் தேனும்வெண் [illegible]னியும் பாகுமன்பு
சாலும் பிறவுமுன் போல்விரும் பாள்வெண் டளவரும்பு
போலும் பதமுங் கடிதுண்கி லாளொ[illegible]கொல் புள்ளுமெய்யுங்
கோலும் பொருவுங்கண் ணணங்கை பாலன் குருகைமின்னே. ()

செய்வினைமறைப்புக்கண்டையுறல்.

உள்ளத்தொன் றெண்ணித் தனியேசெய் தாலு முடன்பிறிதோர்
கள்ளத்தி னுன்மறைப் பாளென்னைக் காணினுங் கஞ்சமலர்ப்
பள்ளத் தடம்புடை சூழ்குரு கூர்மகிழ்ப் பாவலவன்
வெள்ளக் கறங்கரு விக்கிரி யாட்கென்கொல் வேறெண்ணமே. ()

செலவுகண்டையுறல்.

கனியே யெனுமொழி யார்தமக் கேவல்கள் காட்டித்தனக்
கினியேனும் வேறிடஞ்சேர்வேலை பார்த்திரு தாட்சிலம்பு
தொனியேசெய் யாது குருகூரின் மாறன் சுரும்பிவ்வ
டனியேசெல் கின்றதென் னேபின்னும் வாள்விழி தாவவிட்டே.

பயில்வுகண்டையுறல்.

சுற்றிச்சென் றாலுஞ்செவ் வாகச்சென் றாலுஞ் சுருங்கிடையார்
பற்றிச்சென் றார்மறை யச்சென்று நிற்பதென் பத்திசித்தி
முற்றிச்சென் றார்பிரி யாக்குரு கூர்முனி வன்கிரிநா
னெற்றிச்சென் றாலன்றித் தானேசெல் லாதவ னோரிடத்தே. ()

பிறைதொழுகென்றல்.

மாலுக்கு மைத்துனன் வேதா வினுக்கு மகன்மகன்வெங்
காலுக்குக் காலன் சகளன்கண் டாய்கமழ் கல்விமறை
நாலுக்குஞ் செய்த பிரான்குரு கூரின்மன் னுலகவி
வேலுக்கொப் பாம்விழி யாய்தொழ வேதகும் வெண்பிறையே.

சுனைவியந்துரைத்தல்.

மையிட்ட. கண்ணுக்கு மஞ்சளிட் டேயுன் மதுரச்செந்தேன்
பெய்யிட்ட வாயிதழ் பால்காரி மாறப் பிரான்குருகூர்
மெய்யிட்ட வேர்தந்த தார்முல்லை கூந்தன் மிசைவைத்ததோ
பொய்யிட்ட நுண்ணிடை யாய்நீயின் றாடிய பூஞ்சுனையே. (௮௬)

சுனைநயந்துரைத்தல்.

அங்கோல நீல மலர்கோவை யங்கனி யாக்கியந்தச்
செங்கோவை யங்கனி வெண்முல்லைப் போதெனச் செய்துமுல்லைப்
பைங்கோதை கொன்றையிற் சூட்டுமென் றன்மடப் பாவைமகிழ்
நங்கோ னெழிற்குரு கூர்கானந் தோய்வனந் நற்சுனையே. (௮௭)

தகையணங்குறுத்தல்.

முடியே தொடுத்தடி யீறு வயவ முற்றுமிந்தப்
படியேயென் பேதைக்கு மென்றாலும் வெள்ளைப் பவளமுநின்
வடியேய்செஞ் சேலுநம் மாழ்வார் குருகை வரையணங்காங்
கொடியே யவட்கில்லை கண்டே படர்கவக் கொம்பினையே. ()

நடுங்கநாட்டம்.

வாட்டானை கொண்டொரு மன்னனின் றானை மலைந்ததுவெண்
கோட்டானை மாறன் குருகைநல் லாயவன் கோபிக்கவக்

நாட்டானை கோடுகை போயது மேயது காண்பிடியாய்
நாட்டானை யென்னவுங் கூடாத வூர்ப்பன்றி நாமமெய்யே. (௮௯)

இரவுவலியுறுத்தல்.

வலைபடுங் கிள்ளை யிலைம்போந் திடற்றம் வசமடைந்து
சிலைபடுங் கிள்ளையிற் கொள்பவர் போல நிரைவளைமுத்
தலைபடும் பொய்கைக் குருகூரன் மாறனணிவரையிற்
சிலைபடு நன்னுத லாலேயிம் மாதரைச் சேர்துமின்றே. (௯0)

ஊர்வினாதல்.

முறையூர் சருணைத்தென் கோளூரன் போற்று முனிவரன்வெள்
ளறையூ ரெழிற்குரு கூர்வரை வாயமூர் தூர்பலநீ
றுறையூ ரெதுசொல்லு நாகூர் மணிமிடற் றேறுகைவண்டேர்
நறையூ ரளகச்செங் குன்றூர் வனமுலை நல்லவரே. (௯௧)

பேர்வினாதல்.

அருநான் மறைத்தமி ழாற்பதி னூற்றெட்டி லாயிரமென்
டருநா மனைப்புகழ்ந் தான்குரு கூர்வரைத் தையனல்லீர்
திருநாம முங்கட்கு வேறுள தேனுஞ் செகத்துவழங்
கொருநாமஞ் சொல்லுமப் பேரா லறிவனும் மூரையுமே. (௯௨)

கெடுதிவினாதல்.

எங்கிய நாற்கொம்பு வெள்ளானை யஞ்ச விருகொம்பிடைத்
தூங்கிய கையொரு காரானை நெற்றியிற் சோரியம்பு
தாங்கிய முக்கொம்பு செவ்வானைப் போல்வது தண்ணளியா,
லோங்கிய மாறன் குருகூரன் வீரிங்க ணோடியதே. (௯௩)

மனம்வினாவல்.

கனம்வந்த பூங்குழ லீருங்கள் சோலையைக் காண்டலுநான்
றினம்வந்து மீளு நெறியயர்த் தேன்செந்நெற் செய்தொறும்வெள்
ளனம்வந்து லாவுங் குருகூரன் மாறனணிவரையென்
மனம்வந் ததுகண்ட துண்டாகிற் சொல்லுமின் வாய்மலர்ந்தே.

வழிவினாவலும்வரும்.

இவ்வழி யெப்பதி யூடே புகுமும் பிடத்தருகோ
மெவ்வழி தானு மறிகின்றி லேனறை யுண்டுவண்டு
செவ்வழி பாடு மகிழ்மாறன் றென்குரு கூர்க்குச்செல்லு
மவ்வழி யேசெல்வ னல்வழி யாக வரிவையரே. (௯௫)

இடைவினாவலும்வரும்.

மலையோ வெனமுலை தேரோ வெனவல்குல் வாய்ந்தவிடை
யிலையோவுண் டோவறி கின்றில னாலொன் றியம்புமுண்மைக்
கலையோர் பரவுநம் மாழ்வார் குருகையின் காமனின்ற
நிலையோதுஞ் சோதி மறைத்தது வோநடு நேர்ந்ததையே. (௯௬)

மொழியாமை வினாவலும்வரும்.

தானம் பிடித்தகைம் மாவோ டியவழி சாற்றுவது
மூனம் பிடித்திவன் கொல்வான் சொலவுமொண் ணாதுபிறி
தீனம் பிடிக்கும்பொய் சொன்னாலும் பாறுமென் றேமடவீர்
மோனம் பிடித்ததெம் மாழ்வார் குருகை முதுவரைக்கே. (௯௭)

இவையெல்லா மொழிந்தது வினாவிலடங்கும்.

யாரேயிவர் மனத்தெண்ணம் யாதெனத் தேர்தல்.

பேர்கேட்பர் மாதங்கம் வந்ததுண் டோவென்பர் பின்னுமுன்னு
மூர்கேட்பர் தாங்கலை யொன்று வினாவுவ ரொண்டுளவக்
கார்கேட்க முத்தமிழ் செய்தான் குருகையிக் காவலவர்
யார்கேட்ப தேதுசொன் னாவல ராம்படி யெய்தினரே. (௯௮)

எண்ணந்தெளிதல்.

ஊரை வினாவலும் பேரை வினாவலு மோங்குமதக்
காரை வினாவலு மொன்றேயொன் றல்வழி காட்டுநம்மால்
சீரை வினாவித் தமிழ்செய்த வன்றென் குருகையிவ
ளேரை வினாவ லிவரெண்ணம் வேற்றுமை யின்றிதற்கே. (௯௯)

கையுறையேந்திவருதல்.

நண்டுகிண் டும்பழ னக்குரு கூரன்றென் னான்மறைத்தே
னுண்டுகிண் டுந்தமிழ்ப் பாவுணர்ந் தோன்றடத் தோய்ந்தறுகால்
வண்டுகிண் டுங்குழ லார்தந்த காதலம் மால்வரவாழ்
விண்டுகிண் டுந்தெவிட் டாவின்பஞ் சேர்தற்கு வேலையிதே. (௧௦௦)

எதிர்மொழிகொடுத்தல்.

திருகலை வேலை நிலஞ்சூழ் வடகலை தென்கலையா
மிருகலை கற்றவர் தேறுஞ்சொன் மாற னெழிற்குருகூர்
வருகலை பற்பல கண்டோன் குருதி வழிவடிவத்
தொருகலை யாய்வரக் காணேமென் னெண்கலை யுத்தமரே. (௧௦௧)

இறைவனை நகுதல்.

பாகாய செந்தமிழ்க் கோமான் குருகைப் பனிவரைப்பைந்
தோகா யதிசயங் கண்டனை யோவிவர் தோளென்றெய்த
மாகாய முந்தட மும்மில்லை வாளியு மாவுயிர்போ
லாகாய மாயின வாலறி யாவகை யாருக்குமே. (கoஉ)

மதியினவரவர் மனக்கருத்துணர்தல்.

மன்கணென் கண்ணை யியல்பாக நோக்கி மருத்திளமான்
மென்கணுற் றென்கண் விளையாடு மாற்றமிழ் வேதஞ்செய்த
தன்க ணருள்விரித் தான்குரு கூரனுந் தையலுமிங்
கென்கண் ணினரய லாயின ருவின் றிவளுக்குமே. (கoங)

பாங்கியிற்கூட்டம்.

தலைவனுட்கோள்சாற்றல்.

மறையோன்வெள் ளன்னமும் வானோர்பொற் காவு மவுலிவைத்த
நறையோன்கைம் மானுந் தாவும்வல் லேன்பெரு நாவலருக்
கிறையோன் குருகையன் சீர்கீர் பணித்ததெப் போதுஞ்செய்யு
முறையோ னெனும்புகழ் நான்பெற வாட்சொன் றுமோனம்விட்டே

பாங்கி குலமுறை கிளத்தல்.

தொல்காப் பியம்பல நன்னூற் புராணஞ் சுருதியுமா
மொல்காப் புலமைமன் னூட்டிறை ரீகுரு கூர்மகிழ்த்தா
ரல்காப் புயன்சிலம் போடெதிர் கூவலு மானைகளைப்
பல்காற் பிணிப்பது மேயெங்கள் கேள்வியும் பாடுமுமே. (கoரு)

தலைவன் றலைவிதன்னையுயர்த்தல்.

மறைக்குல மானவர்க் கெல்லா முயர்ந்த வசிட்டன் றன்மைப்
பறைக்குல மாதைப் புணர்ந்திலனோ சங்கம் பங்கயஞ்சேர்
அறைக்குலஞ் சூழ்குரு கூர்மகிழ் மாறன் சுரும்பிற்குறக்
குறைக்குல மென்பதென் னிசைற சேர்குலக் கொம்பினையே. ()

பாங்கி யறியாள்போன்று வினாதல்.

வடுவின் படிவமுஞ் சேலின் பிறழ்ச்சியும் வாரியெழு
நடுவின் கொடுமையு மொன்றாக்கி யன்னகண் ணார்சுருதி
கொடுவின் றமிழ்செய்த வன்குரு கூரிற்பல் கோடியம்பு
தொடுவின் றுதன்மட வாரெவ ளாலுள்ளஞ் சோர்ந்தனையே. ()

இறையோ னிறைவி தன்மை யியம்பல்.

தன்னைப் பணிக்கணிற் பார்ப்பதல் லாற்பிறர் தம்மையெல்லாம்
பின்னைப் பணியவு மெண்ணு வழகிற் பெரியண்மற்றப்
பொன்னைப் பணிகொண்ட மாறனூர்க் கிளையள் பொலிந்துநின்ற
மன்னைப் பணியுநம் மாழ்வார் குருகையென் மன்னுயிரே. (க0அ)

பாங்கி தலைவி யருமை சாற்றல்.

விரதம் பலசெய்தெஞ் சுற்றம் பலதொழ வேந்தனுக்கு
வரதம் பலதரும் தெய்வம் பலவருண் மான்மறையின்
சரதம் பலசெய்த செந்தமிழ் மாறன் றமிழ்க்குருகூர்
சிரதம் பலவொக்குஞ் சொல்லாளை யெண்ண லெளியளன்றே.

தலைவன் இன்றியமையாமை யியம்பல்.

பெறும்படி மாதவ நீங்கள்செய் தீர்மடப் பேதையைமெய்
யுறும்படி மாதவ நான்செய்த தாக வுரைத்தமிழூர்
தொழும்படி கீர்த்திக் குருகூரின் மாறன் சுரும்பிலொளி
சுறும்படி வத்திரு [illegible] லுதனே. (கக0)

பாங்கி நின்குறை நீயே சென்றுரையென்றல்.

தன்குறை தான்முயன் றேதீர்க்க வாண்மை தருமுயற்சி
யின்குறை யாயினுந் தன்னாற் பிறர்வருந் தார்வருந்தா
தென்குறை தீர்க்குநம் மாழ்வார் குருகை யிறைவவன்னாட்
டுன்குறை நான்சொல்ல வஞ்சுவ னீசென் றுணர்த்துகவே. (ககக)

பாங்கியை யிறைவன் பழித்தல்.

பண்பகங் கொண்ட பழநான் மறைப்பொருள் பண்டிரந்தே
யுண்பகங் கொண்டவர்க் கன்புறு மாற னுயர்குருகூர்ச்
சண்பகங் கொண்டல மந்தவன் டாயினன் சார்புறுநின்
னண்பகங் கொண்ட குறையுனக் கியானு நவின்றபின்னே. (ககஉ)

பாங்கி பேதைமையூட்டல்.

காதிட்ட பைங்கத லிக்குலை சாயத்தன் பூகச்செங்காய்
கூதிட்ட சோலைக் குருகைபி ரானலன் கோலவெற்பின்
மாதிட்ட தெவ்வர்ப் புறக்கண்டு நீண்ட வடிக்கணைசெஞ்
சேதிட்ட குங்குமக் கொங்கையன் னான்செய்யுஞ் செய்கையதே.

காதலன் றலைவி மூதறிவுடைமை மொழிதல்.

தனிவந்த நாட்கடைக் கண்ணாலன் பாம்புத்தி தந்தயலோர்
தொனிவந்த போதினி லென்னாளொன் னுசையுந் தாயமகிழ்

முனிவந்த தென்குரு கூரான் முதுக்குறை யாளென்றந்தக்
கனிவந்த சொல்லி யறிவின்கண் ணேறு கழித்தனையே. (௧௧௪)

பாங்கி முன்னுறுபுணர்ச்சி முறையுறக்கூறல்.

சேலே விழியனை யாளனை யாளெனிற் றென்குருகூர்
மாலே யெனவந்த மாறன்வெற் பாவண்ண வெண்ணெய்செங்கை
மேலே யுடையவர் நெய்க்கழு வார்கொல் விரும்பிமுன்பு
போலே புணர்ந்தரு ளின்னமு நீசொன்ன பொன்னினையே. (௧௧௫)

இதுவுமது.

மாடத் திருக்குரு கூரிற் பிறந்து மணிவண்ணனைப்
பாடந் திருக்குரு கூரில்வந் தான்வெற்ப பாவையன்பாய்
நீடத் திருவுள மென்றுமுன் போல நிகழுலகோர்
தேடத் தகாதொக் கலைமென் மகவைத் தெருவெங்குமே. (௧௧௬)

தன்னிலை தலைவன்சாற்றல்.

சீதா பதியுமச் சீதையு [illegible] திருமேனியே
யுதா ருறவெனி னும்பிறர் கூட்டினர் முத்தமிழால்
வாதா னவனைவென் றன்குரு கூரன் வரையின்வரக்
கோதாயுன் னுலன்றிக் கூடா தெனக்கவட் கூடுவதே. ([illegible])

பாங்கி யுலகியலுரைத்தல்.

உள்கற்ற முந்தரு மென்கற்ற மும்பிற ருங்களிகூர்
நன்கூற்ற முமெச்சு நன்னுளி லேமகிழ் நாவலவ
னென்சுற்ற மாட்சொன் டருண்மாறன் வெற்பி லிலங்கிழையாள்
மின்சுற்று மெய்தொடு வாய்மீ யுலகியல் மெய்ப்படவே. (௧௧௮)

தலைவன் மறுத்தல்.

விடந்தீர்க்கு மந்திரங் கற்றோர் விடந்தலை மேற்கொண்டவ
ரிடந்தீர்க்க நாணன்மை பார்ப்பர்கொல் லோதன் னிடத்தெரியாற்
சடந்தீர்க்கு மாறன் குருகூர்ப்பொற் கொம்பு தழைதரவே
திடந்தீர்க்குங் கொங்கையணைந்தபின் னேமணஞ் செய்திடுமே.

பாங்கியஞ்சியச்சுறுத்தல்.

கறுத்தது வானஞ் சிவந்தது மேற்குக் கதிரவன்றே
யிறக்கதத் தத்தின் மறவேடவ் வேடரில் வாறறிந்தால்
வெறுத்தது செயவ ரவர்புனங் காப்புறும் வேளையென்னைச்
செறுத்தது மாறன் குருகைவெற் பாபுறஞ் செல்லொல்லலையே. ()

தலைவன் கையுறைவியத்தல்.

பத்திர மாமொளிர் பொற்றக டாகுஞ்சம் பன்னமுமாஞ்
சித்திர மேனியி லேதழை யென்னவுஞ் செய்யுநொய்ய
வித்திர வாகவென் கையடை மாற னெழிற்குருகூ
ரத்திர மன்ன விழிமாதின் கையடை யாக்குமின்னே. (௧௨௧)

பாங்கி கையுறைமறுத்தல்.

நாடும் பொழுதிது வெற்பா குருகை நகர்ச்சிறைவண்
டாடுங் குழனங்கை யார்பிள்ளை மாணிக்க மாகிலிசை
பாடுந் திருக்கையின் முத்திரை காட்டும் படலைமகிழ்
சூடுந் தலைக்கண் டவர்க்குமெய்ஞ் ஞானத்தைத் தூண்டிடுமே. ()

ஆற்றுநெஞ்சினோ டவன்புலந்துரைத்தல்.

கொய்யாத முன்னுற்ற சொம்புவிட் டேசெம்பொற் கொம்புவடு
வய்யாத கொம்டென்றென் னுலே யுறவெண்ணி வந்துதமிழ்
பொய்யாத மாறன் குருகூர்மின் மெய்யுறப் புண்ணியங்கள்
செய்யாத வென்கைப்பட் டேதழை யானதுஞ் சேர்ந்திலதே. ()

பாங்கியாற்றுவித்தகற்றல்.

பயிலுந் தமிழ்க்குரு கூர்மாறன் வெற்ப பலருநன்றாய்த்
துயிலுந் துணையுந் துயிலா தினியது சொல்லியம்பு
மயிலும் பொருவுங்கண் ணுனக்குன் காத லறைந்துகடல்
வெயிலும்ப ராமுன்னங் கையுறை வாங்குவன் மெய்யிதுவே. ()

மடலே பொருளெனமதித்தல்.

தொடலான தார்மகிழ்க் கோமான் குருகைச் சுரும்பிலிணை
யடலான வேல்விழி யார்கைக்கொ டாவிடி லாசைநெடுங்
கடலான சோகச் சுழியூ டகப்பட்ட காமுகர்தா
மடலான தோணிகொண் டேநீந்திச் சேர்வர் மணக்கரைக்கே.

பாங்கிக்குலகின்மேல் வைத்துரைத்தல்.

முன்னோன் றிருக்கொடி யேற்றத்தி னன்முயங் காதொழிந்தாற்
பின்னோன் மழைக்குடை வீழ்ந்தொழி வார்நங்கை பெற்றசெல்வ
மன்னோன் குருகைத் தெரிவாய் மடந்தைய ராசைகொண்டா
ரென்னோன்புஞ் செய்து வசுதேவன் பெற்ற விருவரிலே. (௧௨௬)

அதனைத்தன்மேல் வைத்துச்சாற்றல்.

இன்றுசு கொண்டிரப் பேறுன்னை நாளையுன் னேந்திழையைக்
குன்றுத சித்திரத் தேயேற்றி மாறன் குருகையம்பொன்

மன்றூர் மடலூற வித்தார மாமது ரம்பிறக்க
நன்றாகப் பாடுவ னூற்கவி ராசனு நானெனவே. (௧௨௭)

பாங்கி தலைமகளவயவத் தருமைசாற்றல்.

சென்றே தனித்தெழு தத்துணிந் தாலுந் திருவழகொவ்
வொன்றே யறிவை யழிக்குமன் றேயுள் ளறிவழிந்து
நின்றே யெழுதநன் றாய்வாய்க்கு மோகிரம் பாவழகை
யன்றேநம் மாறன் குருகூர்வெற் பாபுவி யையுறுமே. (௧௨௮)

இதுவுமது.

விருப்பாக நீதனி யன்னகை வெண்ணினு மிக்கதிண்டோண்
மருப்பாய் வருளப் பிரான்குரு கூர்த்திரு மாலையுற்ற
திருப்பாவை சந்த விருத்தம்பல் லாண்டுறத் தீட்டிடினும்
பொருப்பா வரிதத் திருவாய் மொழியைப் பொறிப்பதுவே. ()

இதுவுமது.

மாதான வன்னமும் பன்மணி மாலையும் மற்றுமுள்ள
பாதாதி கேசமுந் தீட்டுவை யாகையின் பள்ளுமடல்
வேதாக மஞ்சொன்ன வாழ்வார் குருகைவெற் பாவிவளுக்
கேதா துலாவுஞ் சிறுகாதை யுங்கண்டு டெழுதுவையே. (௧௩௦)

தலைமகன்றன்னைத் தானேபுகழ்தல்.

கொடைத்தா னவனைச் சிறையில்வைத் தானைக் குறித்ததமிழ்த்
தொடைத்தானன் னவலன் றென்குரு கூருங்க டோகைநடை
யிடைத்தானஞ் சேர்வன வெல்லாம் வரைவ னிவளைமுன்பு
படைத்தான் மெய்ம்மாறிப் பிறந்தானென் றேயென்னைப் பாரெ
ன்னைவே. (௧௩௧)

எழுதி முன்னிரங்கலும்வரும்.

மின்போலு மெய்க்கொடி யாலின்று வேறொரு வேடங்கொண்ட
வென்போலு வாய்க்குப் படஞ்சேர் பிழைபொறுத் தேன்பொழைடாற
றன்போலச் செவ்விய தண்ணளி மாறன் றமிழ்க்குருகூர்ப்
பொன்போலு வார்வரைப் பித்தா தலைவிடப் போகடித்தே. ()

எழுதியிரங்கலும்வரும்.

வெல்லும் படிகட் கணையையெய் வார்திரு மேனியன்பாய்ப்
புல்லும் படியெண்ணி யேதளர் வேலைப் புளியினிழற்
செல்லும் படிநடை கற்றான் குருகையுட் சித்திரந்தான்
சொல்லும் படிக்கு வருந்தென்று மோனந் தொடர்ந்ததுவே. ()

பாங்கி அருளியல் கிளத்தல்.

விளிவாய்க் கரும்பிள்ளை செந்தலை யன்றில்வெள் ளாங்குருகு
களிவாய்ப்பத் தூங்குங் குருவியெல் லாமுட்டை கட்டழியத்
தெளிவாய்ச்சொன் னீதினைத் தான்மகிழ் மாறன் றிருக்குருகூ
ரளிவாய்த்த தார்கண்ண தோமட லேற லரிதனக்கே. (௧௬௪)

கொண்டு நிலைகூறல்.

முழுதியல் பாவலர் கோமான் குருகையென் மொய்குழலிப்
பொழுதியல் பாமுன் குறைமறுத் தாற்பொருப் பாவிருப்பம்
பழுதிய லாதினிச் செய்வதற் காப்பின் படத்தலைக்கே
யெழுதிய வாறன்றி யேமுடி யாதென்ப தெண்ணுகவே. (௧௬௫)

தலைவியிளமைத்தன்மை பாங்கிதலைவற்குணர்த்தல்.

பரிக்கின்ற முத்தமி ழாலே பரமனைப் பாடியுள்ளே
தெரிக்கின்ற முத்தன் குருகைவெற் பாசிற்றில் செய்துமுற்றி
லரிக்கின்ற முத்தின் றொருகைபிற் றெற்று மணங்கினன்கை
விரிக்கின்ற முத்தமு நாளுக்கு நாட்டொகை வேறுறுமே. (௧௬௬)

தலைவன்றலைவி வருத்தியவண்ணமுரைத்தல்.

திருப்பாற் கடலிற் பிறந்தவன் றேசெங்கண் மாலுரத்தில்
விருப்பாற் பொருந்திய தாரதி யார்மெல்லி யாலுதர
நெருப்பாற் சடங்தொலைத் தான்குரு கூர்நெடுங் கட்கடையான்
மருப்பாற் படுகுழ லாளென தாவி மயக்கினளே. (௧௬௭)

பாங்கிதலைமகள் செவ்வியருமை செப்பல்.

புனையா ரணிய மணிகளும் பாவையும் பூவையுந்தா
னினையா னினைதன்மற் றென்றாய்கின் றுடன் விளைவதவி
யெனையாளு மாறன் குருகூ ருறையு மிறைவவன்ன
மனையா ளனையவட் செவ்வாறி யானின் றறிவிப்பதே. (௧௬௮)

தலைவன் செவ்வியெளிமைசெப்பல்.

பூரிக்குந் தோள்கண் முகங்களி கூரும் புளகமுலை
பாரிக்குஞ் செங்கனி வாய்மூரல் காட்டுமிப் பார்புரக்கும்
[illegible]க்கு மைந்தன் குருகூர்ச் சிலம்பிலென் காதலுக்க
[illegible]கு நீசொல்லி யுள்ளத்துள் ளேமெல்ள நாணுறுமே. ()

என்னைமறைத்தபி னெளிதெனகருதல்.

ஈரையா மிலக்கணத் தொன்று முதாரணங் காணினுமெய்
யுரையாலல் லாது மனந்தெளி யாதரு ளோங்குருகைமுத்
திரையார் குருகைவெற் பாவிய லாதொன் றுஞ் செய்யக்கொங்கை
வரையாள் பொருந்திடு மாறென்னை நீக்கண் மறைத்திடினே. ()

அந்நகை பொருஅதவன்புலம்பல்.

மெய்யிற் பிணிபிடித் தார்க்காயுள் வேதியர் மீறும்படி
கையிற் கபட மருந்திந்த தேயொக்குங் கைதையங்கான்
செய்யிற் செறிந்த குருகூர்ப் புலவன் சிலம்பின் மின்னு
னையிற் பழியென் றிரங்சா வுனது நகைமொழியே. (சசக)

அவளை தேற்றல்;

நானே யறிவ னவளெண்ணம் யாவையும் நாண்மலர்ப்பூந்
தேனே புணருமென் சிந்தையெல் லாந்திரு மால்வகுளக்
கோனே யெனுங்குரு கூர்ச்சிலம் பாமுகந் தோடலடி
யேனே யினிநிறை வேற்றுகின் றேனுன தெண்ணத்தையே. ()

பாங்கி கையுறைபேற்றல்.

சந்தத் தடம்பொழில் சூழ்குரு கூர்மகிழ்த் தாமன்வெற்பி
லந்தத் துறுமத வேளனை யாயரு ளும்முனக்கு
முந்தத் தரிக்கும் படிதிரு மேனிமுன் னேயுறவா
மிந்தத் தழைவிதி யூழினுந் தான்வலி தென்கின்றதே. (கசாரு)

கிழவோனுற்றல்:

கழைவாங்கி நாணறப் போர்செயுங் காமன்மைக் காவிற்செந்தேன்
மழைவாங்கி நீரொடும் பெய்குரு கூர்மகிழ் மாறன்வெற்பிற்
குழைவாங்கும் வேற்கட் டொடிவாங்கச் செய்யவிற் சொம்பரென்கைத்
தழைவங்க லாலினிப் பூவாங்கி யெய்யுந் தருக்கிலனே. (கசச)

இறைவிக்கிறைவன் குறைபுதிவுறுத்தல்.

மாவா ரணத்தமிழ்ப் பாவார் குருகை மணியணிவார்
மேவார மாமுலை யேவார்கண் ணுயொரு வேள்வருடிக்
காவார் நறைவிரி பூவார் தழைபல கைதருவார்
போவாரிங் கேவரு வாரொரு வாரென் புகல்வதுவே. ([illegible])

அறியாள்போன்று குறியாள்கூறல்.

நாவா யிரத்தர வப்புளி யான்மகிழ் நம்பிதன்சொற்
பாவா யிரமும் புகன்றபின் னேயொன் பதின்மர்சொன்ன
மூவா யிரமும் புகலென்று நாத முனிதொழுதான்
கோவா யிரத்தற்குந் தான்குறை தீர்த்த குருகைமின்னே. (கசசு)

பாங்கியிறையோற் கண்டமைபகர்தல்.

வேல்கண்டு நீல்கண்டு சேல்கண்டெய் கோல்கண்டு வேரியறு
கால்கண் டயன்கண்ட கண்மட வாயின்று கண்டனன்மும்
பால்கண்ட கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கப் பார்த்துநின்றுன்
மால்கண் டவனைநம் மாழ்வார் குருகை மலர்ப்பொழிற்கே. (கசஎ)

பாங்கியைத்தலைவி மறைத்தல்.

யாரோ வொருவர்வந் தேதோ வருந்துவ ரெம்முடைய
வூரோ டவர்வரக் கேட்டது மில்லை யுயர்பெரிய
தேரோட வூர்ந்தருள் செண்பக மாறன் திருக்குருகூர்க்
காரோதி யாயின்றி தென்னுலென் றோதக் கடவதன்றே. (கசஅ)

பாங்கியென்னை மறைப்பதென்னெனத்தழாஅல்.

நீரூட னுடியின் பாலுட னுண்டு நினைவுமொன்று
யொருடல் போல்வினை யாடிய நீமண வோசைபுனற்
காருடன் விம்முங் குருகூரின் மாறன் கனகிரிவாய்
வாருட னேங்கு முலையாயின் றென்னை மறைப்பதென்னே. ()

பாங்கி கையுறைபுகழ்தல்.

மெல்லிய செய்ய வரிய வெளிய மிகப்பெரிய
வல்லிய தூய் விரைய விழைய வழகுடைய
வல்லிய வாயினு மாறன் குருகை மலர்மகணிற்
புல்லிய போர்தன்றிப் பாங்கு பெறுதன்பர் பூங்கண்ணியே. (சரு௦)

தோழி கிழவோன்றுயர்நிலை கிளத்தல்.

ஒருமா தவனைப் புகழ்மா தவன்குரு கூரிலெந்தப்
பெருமா தவஞ்செய்த தோவென் றிரங்கினர் பேடைமைநீர்
வருமா தரமுண் டகமூலம் வூரய்க்கொண்டு வாயுறுத்தி
யருமா தடஞ்சிறை யாற்போர்க்கு மன்னத்தை யன்பர்கண்டே. ()

மறுத்தற்கருமைமாட்டல்.

தொடுக்குந் துணர்மகிழ்த் தாரான் குருகைச் சுரும்பரென்னை
யடுக்குந் தொழுமணங் கேயடி யேனறி வேகொண்டுசேட்

படுக்கும் படைத்து மொழிவதெல் லாம்பகர்ந் தேன்றடுத்து
விடுக்கும் படிசென்றுங் காணே னினியந்த வெற்பரையே. (௧௫௨)

தலைவன்குறிப்பு வேறாக நெறிப்படக்கூறல்.

ஒளியாவெண் ணூற்ற தமமெய்யந் தாதிபு முன்வண்ணமும்
வெளியாகி லார்கொடை நேராரென் றூர்தமிழ் வீறர்திருப்
புளியார் குருகைச் சிலம்பருன் னுசைப் புலம்பர்மனக்
களியார் கருத்தறி யேன்களிப் பார்செங் கயற்கண்ணியே. (௧௫௩)

இதுவுமது.

பரசன் சொருப மெடுப்பது வோமலை பாய்ந்துகடன்
முரசன் சொருப மெடுப்பது வோமுன் னயோத்தியிலே
யரசன் சொருப மெடுத்தானைப் போற்றி யணிந்தமகிழ்ப்
பிரசன் சொருபம் புகழ்க்குரு கூரன்பர் பேரெண்ணமே. (௧௫௪)

தோழிதலைவியைமுனிதல்.

தேன்வேண்டுஞ் சொல்லுன் னுயிரனை யார்க்கிதஞ் செய்யவவர்
யான்வேண் டுவதொன் றருள்புரி வாய்தண் ணிலஞ்சிப்புயக்
கோன்வேண் டியதமிழ்த் தென்குரு கூரன்பர் கொள்கைசொல்லல்
மான்வேண் டிணைக்கண்மின் னேகன வாக மறப்பதுவே. (௧௫௫)

தலைவிதோழியைமுனிதல்.

எறிய வேற்றனும் போற்றும் பிரானிமை யோரமுத
முறிய ஆற்றந் தமிழ்க்குரு கூர்ப்பர னேஞ்சலிலெற்
சிறிய சீற்றத்துக் கென்சொல்லு வேனுன் செயலன்றிச்
சிறிய சீற்றுக் கடந்ததுண் டோபைங் கிளிமொழியே. (௧௫௬)

கையுறையேற்றல்.

நாவலர் வம்பல ரோடயல் கூடிமெய்ந் நாணகல
வேவலர் தூற்றினு மேந்திழை யாயிரு நாற்றிசையும்
பாவல ரேத்தும் பிரான்குரு கூரன் பனிவரைவாழ்
காவலர் தந்த தழைநீ தரத்தகுங் கைக்கொள்ளவே. (௧௫௭)

வரையுமிறைவி கையுறையேற்றமை பாங்கியிறைவற்குணர்த்தல்.

தேர்போன்ற வல்குற்கு மேகலை போன்றது செங்கைவிழிக்
கோர்போன்ற வாளிமை போன்றதெம் மாற னெழிற்குருகூர்
கார்போன்ற கோதைக்குத் தார்போன்ற தையவுன் கையுறைமான்
போர்போன்ற கொங்கைக்கு வார்போன்ற தாரமும் போன்றதுவே.

குறியிடங்கூறல்.

தேனுந் தருமுண்ணப் பூவுந் தருமணஞ் செய்ததழை
தானுந் தருந்தவி சேயாய் வெளியுந் தருநடுவே
யீனுந் தருவின் சினைசூழு மாறனெழிற் குருகூர்
மானுந் தருக்கொடை யாய்நாங்க ளாடு மலர்ப்பொழிலே. (கருக)

குறியிடத்திறைவியைக் கொண்டுசேறல்.

படங்கா னிறையன்னங் கிள்ளையுன் பாற்கற்கும் பாடமின்று
முடங்காது மென்னடை மென்மொழி காட்ட முருகலர்ந்த
தடங்காவு சூழ்குரு கூர்மகிழ் மாறன் றமிழ்ச்சிலம்பில்
விடங்காவி யொத்த விழியமு தேபுன மேவுதுமே. (கசுo)

குறியிடத்துய்த்து நீங்கல்.

தென்பூவை வண்ணனை யேத்திய மாறன் றிருக்குருகூ
ரென்பூவை யேயனை யாய்நில்லு நீயிங்க ணங்ஙன்வந்தாற்
றன்பூவை வென்றனை யென்றேயுன் காலைத் தளைப்படுத்து
நன்பூவை நான்கொணர் கேனலர் பூம்பொய்கை நண்ணலையே. ()

இடத்தெதிர்ப்படுதல்.

நீங்காத பாங்கிபு மாயமுந் தீர்ந்தொளி நின்றமின்போற்
றேங்காவி லென்னுயிர் சேர்வந்த தானங்கை செய்தரும
மாங்காத லன்குரு கூர்வரை வாயம்பு யத்தரும்பு
நாங்காதல் கூர மலர்காவி யுங்கொண்டு நன்பகலே. (கசுஉ)

புணர்ச்சியின் மகிழ்தல்.

தேனே யிறைவகு ளத்தார் குருகைச் சிலம்பிலிணை
மானே யனைய விழிமட வாளிவள் வானமுது
தானே யமுதைத் தனியே பருகுஞ் சதக்கிருது
நானே யமுதருண் மாமாது தோழியர் நாயகமே. (கசுரு)

புகழ்தல்.

பேரறி வாளர் தொழுங்குரு கூர்ப்பற்ப பீடன்வெற்பி
லோரறி வார்தலி னுணறி யூமனுற் றேயறிவாம்
வாரறி பூண்முலை வாண்முகச் சோதி வனப்புமிக்க
சீரறி யாதெதி ராயல ராயது செங்கஞ்சமே. (கசுச)

தலைமகன்றலைமகளை யாயுத்துய்த்தல்.

ஈரஞ்செய் யந்தக் கரணத்தி னுளைமுன் னெய்திப்பின்பு
வாரஞ்செய் வோரிடைச் செல்குரு கூர்மகிழ் மாறன்வரை

யாரஞ்செய் மேரு வுறவாஞ்சை யோகை யருளுமுப
காரஞ்செய் பக்கக் குழையூடு தாவுங் கயற்கண்ணியே. (கசுரு)

பாங்கி கையுறைகாட்டல்.

கொங்கைக்குத் தோற்று முகையாகுங் கட்டுக் குலைந்தலர்ந்துன்
செங்கைக்குத் தோற்றசெந் தாமரை பார்த்தருள் சேயென்னவே
நங்கைக்குத் தோற்றுநம் மாழ்வார் குருகைநண் ணுமடவார்
சங்கைக்குத் தோற்று மிடையாய்தெண் ணீரரண் சார்ந்ததுவே.

பாங்கிதலைவியைப் பாங்கிற்கூட்டல்.

காட்சி யுனைக்கணந் தீர்ந்தாலு மையங் கருதிச்சுற்று
மாட்சிமின் னுருந் தணிவான் குறிப்பு மறிவர்செல்லோ
மாட்சிகுன் றுநம் மாழ்வார் குருகைமலர் கொய்துபின்
மீட்சி புரிகைக் கிளையார் நினைக்கின்ற வேளையிதே. (கசுஎ)

தலைவற் கோம்படைசாற்றல்.

நன்றி மறப்பது நன்றன்று நன்றல் லதனையென்ன
மின்றி மறப்பது நன்றென்ப ராலிணை வார்குழைமேற்
றுன்று மறத்தொழில் கூர்விழி யாட்சொன்ன சூழ்ச்சிநன்மை
யொன்று மறக்கலெம் மாழ்வார் குருகை யுயர்வெற்பனே. (கசுஅ)

விருந்து விலக்கல்.

திருவிருந் தாவன மாமால் விதுரன் சிறுமனைக்கோர்
பெருவிருந் தான்மகிழ்ந் தான்மகிழ் மாலைப் பிரான்குருகூர்
வருவிருந் தாமன்ன னேநீயு மின்றெங்கள் வார்பொழிலி
லொருவிருந் தாக விருவிருந் தானன்மை யுண்டுனக்கே. (கசுகூ)

விருந்திறை விரும்பல்.

செங்கைக் கருங்கட் சிறுவெண் ணகைப்பெருஞ் செம்பொன்மலைக்
கொங்கைப் பசுங்கிளிச் சொன்மட வாய்குரு கூருடைய
நங்கைக்கு மைந்தன் வரைவா யெனக்கெந்த நாளுமுங்க
ளங்கைத் தலந்தொடி லாரா விடமுந்தெள் ளாரமுதே. (கஎ0)

ஒருசார் பகற்குறி.

கிழத்தி மாலையம்பொழுதுகண்டிரங்கல்.

உந்திய சேமணி வேய்ங்குழ லோசையை யுட்கிச்சிவல்
முந்திய கூட்டுறு பேட்டினைச் சேர முயலநங்கை
சந்ததி வாழ்குரு கூரிலென் கண்ணிகர் தண்மழைபோல்
வந்தது மாலை யினிப்பூவில் வீழுமென் வண்டினமே. (கஎக)

பாங்கி புலம்பல்.

செய்யோன் குருகை மகிழ்மாறன் போலொளிர் செங்கதிராங்
கையோ யிவள்சொன்ன குற்றமென் னோநண்பர் கையகல
வையோ நினக்குள்ள மித்திர நாம மழித்தெங்களால்
வெய்யோ னெனும்பெயர் நீமறை வாகி விளக்கினையே. (௧௭௨)

தலைவனீடத் தலைவிவருந்தல்.

மின்னார் நலத்தையும் வேந்தர்செல் வத்தையும் மேவியென்றுந்
துன்னார் பெருரென்ப நாரறியா ரென்னைச் சூழ்ந்தவன்ன
மன்னு ரகன்றனர் வாராமுன் மாற னணிக்குருகூ
ரென்னு ருயிர்நண்பர் வந்தா ரிலையிதற் கென்செய்வனே. (௧௭௩)

புலம்பறேற்றல்.

மலைமங்கை நீங்கியுற் றன்மழு வோனை மதன்பொருமுன்
கலைமங்கை நீங்கியுற் றன்மல ரோனைக் கரிகிரிவா
யலைமங்கை நீங்கியுற் றல்வன மாலையுள் ளன்பரைவார்
முலைமங்கை நீங்கி யுறுவாய் குருகை முனிவெற்பிலே. (௧௭௪)

தலைவி முன்னிலைப்புறமொழிமொழிதல்.

ஈனுமைப் பார்ப்பை நினையாமை யாற்பிரிந் தேகுழிச்சா
யானுமை யல்லலல் லாமலுன் போவதி யுமையவர்
நோனுமை யாயுரைப் போர்மகிழ் மாறனைமெய்ந் நாற்குருகூர்க்
கானுமை வார்குழ லார்காமங் காவலர் கைவிடினே. (௧௭௫)

இன்னுயிர்ப் பாங்கியோடுவத்தல்.

கண்டாற் குளிருந்தங் கண்களென் பாரென் கவின்சொலவாய்
விண்டாற்செவ் வாயமு தாறுமென் பார்மெய் யுறவணைத்துக்
கொண்டாற் சுகானந்த மாவேனென் பார்குரு கூர்வகுளத்
தண்டார்ப் புயன்சிலம் பார்கள்வர் போலத் தணந்தனரே. (௧௭௬)

பாங்கி கழறல்.

பொறிதற் குணத்தமி ழாழ்வார் குருகைப் பொருப்பன் முற்றும்
பிறிதற்குக் காரண நாரிற் செறிவது பெண்கொடியிற்
செறிதற்குக் காரண முன்மா லறிதல் செகத்திலெம்மோ
யறிதற்குக் காரண நீயின்னன் வாடி யயர்கின்றதே. (௧௭௭)

நீங்கற்கருமை தலைவிநினைந்திரங்கல்.

வனையு முடியுமெய்ப் பாதியும் வைத்த வனமணியல்
புனையு முரத்துங் கரத்தும்வைத் தானும் புகழமனை

[illegible]யு மெழிற்குரு கூர்மாறன் வெற்பி லிறைபவர்தாம்
நிலைவில்லைத் தாரில்லை யேநெஞ்சி னுன்னைவைத்த நேயத்தனே. ()

தலைவிக்கவன்வரல் பாங்கிசாற்றல்.

அரும்பிப் புடைத்தழைக் கொண்டிள இப்பாக் தாகமெல்லாம்
விரும்பிச்செம் மாந்த புளகக்கொங் காய்தமிழ் வேதன்சென்மப்
பெரும்பித் தினையொழித் தான்குரு கூரெம் பிரான்வரைவாய்த்
திரும்பிச் சிலம்பர்வந் தார்சிலம் பாகின்ற தேர்மணியே. (கஎக)

சிறைப்புறமாகச் செறிப்பறிவுறுத்தல்.

சந்த மனையொண் கல்லோர்க் கருளுஞ் சரணமா
விந்த மனைய பிரான்குரு கூர்த்தமிழ் வீறன்வெற்பி
லந்த மனையகை யாய்சுனி யாரலி னோக்கினதா
[illegible] மனையுற வாமின்று நீர்ந்துன் விளையடியே. (கஎ[illegible])

தோழிதலைமகற்கு முன்னிலைப்புறமொழி மொழிந்தறிவுறுத்தல்.

விண்ணினை மறைக்குஞ் சிறையன்றிற் காளன்பர் விண்ணுடனே
மண்ணினை யளந்த வளையபுகழ் மாறன் வருகுருகூர்ப்
பண்ணினை வளர்த்த கழுகனை யார்நட்புப் பற்றினுநீர்
பெண்ணினை புகழுற வீரமற வீரோங்கள் பொன்னையுமே. ([illegible])

பாங்கிதலைமகனை முன்னின் றுணர்த்தல்.

[illegible] கனிபுலிய வேனலும் பூந்தண் விளைத்துஞ்செ[illegible]
[illegible] பிருதிய [illegible] மூர்த்தி ராதரசென
[illegible] மெழிற்குரு கூர்வரை வாயித்தக் காளிவந்தன்
செய்ய மலரடி கன்று தெனமயிற செறிக்கின்றதே. ([illegible])

பாங்கிமுன்னின் றுணர்த்தி யோம்படைசாற்றல்.

[illegible] குருகூரல் வாக்கலை [illegible]
[illegible] மெய்ம்மை யருண்மாறன் வெற்பிற் பிறருறவு
[illegible] பேதை [illegible] வோங்கருள்னை
மறந்தாலு நீமற வேண்மற வேலன்னை மன்னவுனே. ([illegible])

இறைவன்றன் சம்பொருள் [illegible] சொற்றிரிளத்தல்.

[illegible] யன் [illegible] தாலிற் புருவதனை
[illegible] பதிந்தில் மேமன மேமொய் இனைமுதிர்ந்த
[illegible] இடையிடை [illegible] வோதினை பெய்துவித்த
வென்னேன்றம் மாறன் [illegible] ருயின் றிரங்குவதே. ([illegible])

பகற்குறியிடையீடு.

இறைவனைப்பாங்கி குறிவரல்விலக்கல்.

மீனலை வாவிக் குருகூர்ப் பராங்குசன் வெற்பவிக்கண்
டேனலை சொல்லி பொருட்டா லினிவரல் செய்யமுதக்
கூனலை யுற்றமெய் கொண்டசை வாகிக் குழைந்தவினை
யேனலைப் போலச் சிவந்தாளெம் மன்னையிரு கண்ணுமே. ([illegible])

இறைவியைப்பாங்கி குறிவரல்விலக்கல்.

சூட்டிய தார்மகிழ்க் கோமான் குருகைச் சுரும்பிலன்னை
காட்டிய சீற்றத்திற் கண்சிவந் தாள்கடும் போர்வயவர்
வேட்டிய வாள்விழி யாய்நாங் கிளியைத் தினைநகரா
கோட்டிய தினை தானேறு கமையுமின் றோட்டிவமே. ([illegible])

இறைமகளாடிடநோக்கியழிதல்.

ஆறுஞ் சுனையுந் தினையும் புனமு மருங்கவன்கொண்
டேறும் பரணும் பொதும்பரு மூசலும் யார்க்குமுத்திப்
பேறுந் தரும்புல வோன்குரு கூரன் பிறங்கலின்பாங்
கேறும் படியுமுன் டோநம்ப ரால்வந்து சேர்ந்தன்றியே. ([illegible])

ஆடிடம்விடுத்துக்கொண்டகறல்.

வாராய் கிளைப்பர னேகுரு கூர்மகிழ் மாறன்நமி
ரோராய் சிலம்பர்கள் நாரிருக் கார்சென்ற தெய்வமெமை
யூரப் பொருந்த மயர்க்கயல் பாக்க ளழுதமைக்க
வாராய நினைந்த வழியடை யாள நெறிசொல்லவமே. ([illegible])

நெடுந்தகைகுறிவழிநீடுசென்றிரங்கல்.

தெருள்கின்ற செந்தமிழ்க் கோமான் குருகையென் சிந்தையப்போ
திருள்கின்ற தெல்லிரு ளிம்மலர்க் காவிதற் கும்விளக்கா
மருள்கின்ற வண்ணமின் குறிஞ்சி யேயுள்ள தல்லதென்ப
மருள்கின்ற தண்ணிடை யாளிடை யேறு மனக்கொண்டதே. ([illegible])

தலைவன் வறுங்களங்கண்டு மதிமயங்கல்.

அருந்து மதுரக் கனிசா மலர்க்குழ லாதியகொண்
டருந்து மருந்தெனல் போற்றென்ற கின்றில யார்க்கும்புத்தி
திருந்து மியற்றமி ழாழ்வார் குருகைச் சிலம்பின்மின்னார்
பொருந்துமப் போது பொலிவான சோலையிப் போதிதுமே. ([illegible])

மதிமுகம் வாமுமூர்நோக்கிமதிமயங்கல்.

எத்தனை நாழிகை செல்லுங் கொல்லோவழி யெவ்வழியோ
இத்தனை யாதவர் சேரூர்க்குத் தாளெழச் செல்கிலகைந்
நத்தனை யேத்துநம் மாழ்வார் குருகைநன் னீர்ப்பொருநை
முத்தனை யார்தெரு மாளிகைதாமு மொழிந்திலரே. (௧௧௧)

இரவுக்குறி.

இறையோ னிருட்குறிவேண்டல்.

தள்ளாதென் கைவந்த தப்பிய மானின் றடமிந்தவு
ருள்ளாய தன்றியப் பாற்போன தன்றிரு ளோங்கிரவி
னள்ளா றறியவல் லார்குரு கூர்மகிழ் நம்பிவெற்பிற்
கள்ளார் மலர்க்குழ லீரிடமேதெங்கள் கண்படைக்கே. (௧௧௨)

தலைவனெறியினதெளிமைகூறல்.

அனஞ்சேர் துவசப் பிரான்குரு கூர னணிவரைமேற்
சனஞ்சே றிராவெளி தாய்வர லாமுங்கள் கன்னிகன
தனஞ்சேர்வ தற்கரி தாயே மயங்கித் தளர்கின்றவென்
மனஞ்சே றிருட்குப் பகல்போலுங் கார்மழை வானிருளே. (௧௧௩)

அவனாட்டணியியல் பாங்கிவினாதல்.

சூடுந் தொடையலும் பூசுஞ்செஞ் சாந்தமுந் தோய்ந்துவிளை
யாடும் புனலு முடிக்குந் தழையு மணிநிழலுங்
கூடும் பலகல னும்மகிழ் மாறன் குருகைநல்லோர்
நாடுந் தமிழ்ச்சிலம் பாவெவை யோவுங்க ணாட்டவர்க்கே. (௧௧௪)

அவ னவனாட்டணியியல்வினாதல்.

தகரக் குழன்மக ரக்குழை மாதர் தமக்களியேன்
பகரப் பயப்பதென் னென்னாட் டணிபணைத் திப்புடைக்குஞ்
சிகரத் தடங்கொங்கை நங்கைசொற் பாலன் றிருக்குருகூர்
நகரத் தணிமிழை யாய்கூறு வாயுங்க ணாட்டணியே. (௧௧௫)

தன்னாட்டணியியல் பாங்கிசாற்றல்.

சாந்துந் தழையு நிழலு மணியலுஞ் சந்தனமு
மேந்துந் துணர்த்த வகுளமு மேயெங்கட் கெய்துகின்றோர்
நீந்தும் படிமதக் கால்சோலைசூழ நெருங்கும் விண்ணோர்
வேந்தும் புகழ்க்குரு கூர்மாறன் மால்வரை வேலவனே. (௧௧௬)

தலைவிக்குத்தலைவன் குறையறிவுறுத்தல்.

மலரான தாமரைத் தேனைப் பகலுண்ட வண்டிரவி
லலரான வாம்பலின் றேனுண்ணு நாட ரருந்தமிழ்ப்பா
வலரா னவர்புக ழாழ்வார் குருகை மணிவரைநீ
கிலரா னவரிர வுன்னிதழ்த் தேனுண்ண வெண்ணினரே. (௧௯௭)

நேராதிறைவி நெஞ்சொடுகிளத்தல்.

மலைநாக நாகத்தை வாயில் விழுங்கி மலைக்குமுழைத்
தலைநா டிருளி னெனதாசை யானன்பர் தண்பொழில்வாய்ச்
சிலைநா ணியநுத லாய்வரு வாரணத் தேமகிழ்த்தார்க்
கலைநா வலன்குரு கூர்மாது நேர்ந்தது கற்பல்லவே. (௧௯௮)

நேரிழைபாங்கியொடு நேர்ந்துரைத்தல்.

பருதி புறந்தரப் பாரெங்கு மூடிய பாயிருளு
மிருதிசை முற்று மறைக்கின்ற யாமத்தி லென்னிடத்தில்
வருதிற மெண்ணின் ரேற்குரு கூர்மகிழ் மாறன்வெற்பிற்
கருதிய தேசெய்வன் பாவாய் பிறிதென்கொல் காரியமே. (௧௯௯)

நேர்ந்தமைபாங்கி நெடுந்தகைக்கியம்பல்.

வன்மாற்றஞ் சொல்லுமுன் மென்மாற்றஞ் சொல்லியென் மாற்றத்
துக்கு
மென்மாற்றஞ் சொல்கையில் வன்மாற்றஞ் சொல்லியுன் மின்மறுக்கும்
புன்மாற்றம் பின்புசொல் லாதே கருத்தைப் பொருத்தினென்பன்
பன்மாற்ற மாறன் குருகைவெற் பாமெச்சும் பாரதியே. (௨௦௦)

குறியிடநிறீஇத் தாய்துயிலறிதல்.

மாங்கனி வீழக் கயல்பாய்ந்த தோமடு வூடுநறு
வோங்கநி வந்திவ ரோதைகொல் லோவொளிர் முத்தநகைத்
தீங்கனி வாய்க்கன்னி யாழ்வார் குருகைச் சிலம்பிலிப்போ
தேங்கி நிறைமலர்க் காவாழ் குயிலை யெழுப்பியதே. (௨0௧)

தலைவன் வரவறிவுறுத்தல்.

தாந்தனுஞ் சங்கனும் வேதனும் வேடனுந் தந்தியும்விண்
வேந்தனு முய்ந்த குருகூர்ப் பராங்குசன் வெற்பிலுன்னுற்
சாந்தநுங் கப்படு மூசியிற் பற்றிய காதலர்பூ
ணேந்தனுங் குங்குழை யாய்மழை யாமத்தி லெய்தினரே. (௨0௨)

குறியிடத்திறைவியைக் கொண்டுசேறல்.

ஆழிக் கணைகொண் டிலங்கா புரஞ்செற் றணையரவின்
பாழிப் பொறைதடிந் தான்புகழ் பாடும் பரன்குருகூர்த்
தாழிக் குவளை மலர்ந்தது நாடித் தரிக்குவம்யாம்
யாழிக்கு நேர்மொழி யாயெழு வாயிந்த யாமத்திலே. (௨௦௩)

குறியிடத்துய்த்து நீங்கல்.

இங்கேநிற் பாயுன் முகமுக மென்னவொண் ணுதலர்ந்த
பங்கேருக மென்ன வேவண்டு வீழும் பருதிநிகர்
செங்கே ழமலன் குருகூர்ப் பொருப்பிற்லைபந் தேன்மிருந்த
வங்கே யணங்குநங் காய்கொணர் வேன்மல ராம்பலமின்னே. ()

இறையோனிட்த் தெதிர்ப்படுதல்.

செய்தொட்ட நீர்க்கஞ்சப் பூக்களெல் லாமென்று செங்கதிராங்
கைதொட்ட போதன்றி வாய்திற வாவிருட் கங்குலின்வாய்ப்
பொய்தொட்ட நுண்ணிடை யாணங்கை பாலன் புகழ்க்குருகூர்
மெய்தொட்ட வார்குழ லீரெங்ங னேயிங்ங னீர்வந்ததே. (௨௦௫)

பெருமகளாற்றின தருமை நினைந்திரங்கல்.

ஆடுந் துறையுஞ் சுனையுங் கராமு மராவும்வழி
மூடுந் தழையுங் கொடியுந்திண் மேடு முதுபயம்புங்
கோடும் பிறவுந் திருமகிழ் மாறன் குருகைவெற்பா
நீடுஞ் சிறுநெறி வாயிர வாயெங்ங னீவந்ததே. (௨௦௬)

புரவலன் றேற்றல்.

விண்ணும் புவியும் விழுங்கிய மாவிருள் வீங்கிரவு
பண்ணும் பயமுமின் றுலயரேன்மெய்ப் பராங்குசனை
யெண்ணுங் குருகை யுனதாமுருவு மிடையு மன்பென்
கண்ணுந் தொறுமெதிர் வந்துவந் தேவழி காட்டுமின்னே. (௨௦௭)

புணர்ச்சியின் மகிழ்தல்.

மெல்லிய மேனியுந் திண்ணயங் கொங்கையும் விண்ணமிர்தாய்ச்
சொல்லிய வூறற் கனிவாயுந் தோளொடு தோணெருங்கப்
புல்லிய காமமு மாறன் குருகையிற் பூவைமைக்கா
ரெல்லியில் வந்தது நண்புற வாவெண்ணு மென்னுளமே. (௨௦௮)

புகழ்தல்.

கணித்தா ரணத்தைத் தமிழாக்கி மெய்ப்பொருள் கண்ணனென்றே
குணித்தார் திருக்குரு கூர்வரை வாய்மலர்க் கோதைகண்போ

லணித்தா யமைசிற மேபெற்ற காமனவ் வக்கரத்தாற்
பணித்தா லல்லாது தெறுமோவிக் காவிப் பனிமலரே (௨௦௧)

இறைமகளிறைவனை வரவுவிலக்கல்.

விளியா ருருமு வழிதொறும் வீழும் விளரிபயி
லளியார் பொழிலில் வயமா வழங்கு மலைசுருட்டுந்
தெளியாறு நீத்தளி யேன்பொருட் டால்வர றென்குருகூ
ரெளியார்க் கிரங்குநம் மாழ்வார் வெற்பாவிவ் விரவிடையே. ()

இறைவியை யில்வழிவிடுத்தல்.

இத்துணைப் போது மளியேனுக் காயிர விற்குவளை
மைத்துணை போதென்ன வின்மலர் வகுளப் பிரான்குருகூர்க்
கைத்துணைக் காந்தளும் மோரையயு முமுன் கடிமனைபோ
யத்துணைத் தோழி யொடுங்குவிப் பீர்கண் ணரவிந்தமே. (௨௧௧)

பாங்கி கையுறைகாட்டல்.

காரார் குழலியுன் கண்ணுக்குத் தோற்றுக் களிவண்டுக
ணோரான தோற்றத் துறவாகு மீதென்று நீலங்கண்ணீர்
சோரா வுதைக்கின் றதுநோக்கி நீக்கித் தொடுத்தநறுந்
தீரா யணிகுரு கூர்மாறன் வெற்பிலுன் சூழ்குழற்கே. (௨௧௨)

இற்கொண்டேகல்.

உரைவகைய் தமிழ்க்குரு கூர்மாறன் வெற்பி லுணர்வறுநித்
திரைவாய்நற் றுய்சண் விழித்தாலு மன்னித் திரைபுரியாய்
தரைவாயும் வைகறை நீதுயில் கூரினுஞ் சங்கைசெய்யும்
விரைவாய் மலர்த்திரு வேவிரை வாய்மனை மேவுதமே. (௨௧௩)

பிற்சென்றிறைவனை வரவுவிலக்கல்.

எண்ணுந் தமிழ்க்குரு கூர்மாறன் வெற்பி லிறைவவெம்போய்
கண்ணுஞ்செவ் வாயுங் குவளையு மாம்பலுங் கன்னியன்பு
பண்ணும் பெருந்திரு மாளிகை தாமரை பார்க்கிலலர்
நண்ணுங் குவியும் வெறிதாக வாரலிந் நள்ளிரவே. (௨௧௪)

பெருமகன் மயங்கல்.

மிடியிட்ட நெஞ்சர் மிடிதீர நாடொறும் வேண்டினவர்
படியிட் டதனை விலக்குதல் போன்றது பல்சுருதி
வடியிட்ட செஞ்சொற் பிரான்குரு கூர்மட வாய்முன்புநங்
கொடியிட்ட நண்புக் கிடையூறு நீயின் குறித்ததுவே. (௨௧௫)

தோழி தலைமகடுயர் கிளந்துவிடுத்தல்.

என்னுவி யுய்வது மென்னுவி யன்ன வினியகண்பா
மின்னுவி யுய்வது மின்னுவி யேயென்ன வேண்டுமன்னே
தன்னுவி யுய்வதுஞ் சண்பக மாறன் றமிழ்க்குருகூர்
மன்னுவுன் னூர்புகுந் தானீ யொலிக்குமுன் வாய்க்கொம்பினே.

திருமகட் புணர்ந்தவன்சேறல்.

சேல்கண்ட கண்ணி யெளிதாயென் னூர்வயிற் செல்வனிருப்
பால்கண்ட வீசன் குளத்துக்கு மேற்கண்ட வாறுகண்ட
கால்கண்ட யோகப் பிரான்குரு கூருங்கள் கன்னிகையும்
பால்கண்ட வெண்கண்ணுக் கெல்லா விருளும் பகலொக்குமே. ()

இரவுக்குறியிடையீடு.

இறைவிக்கிறைவன் வரவறிவுறுத்தல்.

தேங்கிய தேங்கம லாசன மாறன் றிருக்குருகூ
ரோங்கிய வோங்கன் முலைமட வாயிர வூடுமழை
வாங்கிய வாங்கமெ யெல்லா மலைத்து மலைத்தகைவாய்த்
தாங்கிய தூங்சல்கண் டேங்காத தேதிது தூக்குதமே. (௨௧௮)

இறைவிதான் குறிமருண்டமையும்வரும்.

துயிலாதெல் லாருந் துயில்வது பார்த்துச் சுரும்பர்குறி
பயிலாகு மென்றெண்ணி வந்தோமந் தோபதம் பற்றினவர்க்
கெயிலாகு மாறன் குருகூரன் வாவி யிடைக்கயல்கண்
மயிலாடுஞ் சோலையி லேபாய வீழ்ந்தது மாங்கனியே. (௨௧௯)

தான்குறிமருண்டமை தலைவிபாங்கிக்கியம்பல்.

முன்னே குறிவயிற் சென்றேனின் றேனெளிர் முத்தநகைப்
பொன்னேநம் மோயுண ராமுன்வந் தேன்புய லோடொளிரு
மின்னே யிடைநங்கை பெற்றுன் குருகை விரிபொழில்வா
யென்னேயெப் போது மிரங்காத புட்க ளிரங்குவதே. (௨௨௦)

பாங்கிதலைவன் றீங்கெடுத்தியம்பல்.

பையது வான புளியார் குருகைப் பதிமுத்திரைக்
கையர் சிலம்பித் பொலங்கொடி யேயுன் கருத்திலன்பார்
மெய்ய ரெனத்தமை யெண்ணலெல் லாம்வெறி தாகமிக்க
பொய்ய ரெனத்தங் குறிபிழைத் தாரப் புரவலரே. (௨௨௧)

தலைமகன் புலந்துபோதல்.

கம்பூர் தெரிவை யிடையாங் கொடியு நகிலுமென்னுங்
கொம்புந் தழுவுகென் றேகூட்டிப் போக்கு குருகைமகிழ்
பம்பும் புயன்கிரி வாயிடை யாமத்தி ருண்டபொழில்வாய்
வெம்புங் கொடியையுங் கொம்பையுஞ் சேர்த்தனன் வெவ்வி
யே. (௨௨௨)

வறுங்களந்தலைவிகண்டிரங்கல்,

வாரா திருந்தன னென்றேயென் பான்மனத் தாபமன்பர்
கூரா மலசெய்த றதோமற் றதோகுரு கூர்வகுளத்
தாரா ரெழிற்கிரி வாயுறங் காச்சஞ் சரீகவெம்பேய்
போராடு நள்ளிருள் வாய்சொன்முன் சென்றதும் போந்ததுமே. ()

அலர்க்குறி.

அம்புயல் போலப் பொலிந்துநின் றூர்பொன் னடிபரவி
யம்புயல் கண்கொண் டிருந்தான் குருகை யணிவரைவா
யம்புய மென்முலை யொன்றுகச் சேர்த்தரு ளன்பர்தம
தம்புய மென்முலை யொன்றுகச் சேர்த்தி யணைந்திலரே. (௨௨௪)

தன்றுணைக்கியம்பல்.

விருந்தாய் வருபுள்ளுங் காற்று மலைக்க வெருண்டபுள்ளு
மருந்தார் கனியு மெழுவதும் வீழ்வதும் வண்புளிக்கி
ழிருந்தார் குருகையின் னேயாங் கவர்குறி யென்றுசென்றியான்
பெருந்தாப முற்றதெல் லாமன்பர் காணிய பெற்றிலமே. ()

தலைமகளவலம் பாங்கிதணித்தல்.

குன்றூர் புயத்தன்பர் பொய்யா திரவிற் குறியில்வந்து
சென்றூர்தம் மாநகர்க் குண்மைகண் டேன்சென்ம நோயையெல் [லாம்
வென்றூர் புகழ்குரு கூர்மகிழ் மாறன் வியன்கிரிவாய்க்
கன்றூர் மலர்க்கரத் தாய்கோவை காவியங் காட்டியதே. (௨௨௬)

இறைவன்மேற்பாங்கி குறிபிழைப்பேற்றல்.

வீடாத நான்மறை யானெடு மால்புகழ் மெய்ம்மையல்லாற்
பாடாத மாறன் குருகைவெற் பாமடப் பாவைநென்ன
ஓடா தவளொடும் பொய்யுரைத் தேயெம தூர்மறந்தாய்
வாடா தவள்வர வேதோ வழியுன் வளநகர்க்கே. (௨௨௭)

இறைவிமேலிறைவன் குறிபிழைப்பேற்றல்.

பிரியாதென் னெஞ்சி லிருந்தாலுங் கண்ணிலப் பெண்ணழகு
தெரியாத போது தெரியா தெனக்கென்ன செய்கையுமா
லரியாதி மூலமென் றுன்குருகூர னணிவரைவாய்
வரியார் தடங்கணல் லாண்மறந் தாலு மறந்திலனே. (உஉஅ)

தலைமகள் குறிமருண்டமை தலைமகற்குணர்த்தல்.

தொனிக்கின்ற பூங்க டொனியா தசைவின்றிச் சூழவையஞ்
செனிக்கின்ற நெஞ்சினர் கண்டுயில் சோதித்தூத் தேர்ந்தநல்லோர்க்
கினிக்கின்ற சொற்புல வோன்குரு கூர்ப்புனத் தெ[illegible]கிக்கண்கள்
பனிக்கின்ற நீரொடும் வெற்பாபின் மீண்டதென் பைங்கிளியே. ()

அவன்மொழிக்கொடுமை சென்றவளுக்கியம்பல்.

எல்லாரு மேத்தநம் மாழ்வார் குருகை யிலங்கிழைநீ
யல்லாது வேறு தமக்குயி ரேதென்ப ரன்பர்நென்னற்
செல்லா திரவு புலர்ந்தபின் னாரிற்சென் றேனென்றவர்
சொல்லாத சூளுரைத் தாரடி யேன்மனந் துண்ணென்றதே.(உ௩0)

என்பிழைப்பன்றென் றிறைவிநோதல்.

முருகா லிசைவண் டுலாமகிழ்த் தார்முனி வன்குருகூர்
குருகாலும் பொய்கை வளைமுத்த மீனுங் குருக்கத்தியூ
டொருகாலு மன்பரைக் கண்டே னிலைப்புள் ளுணர்த்தவெழுந்
திருகாலு நோவ நடந்தெய்த்து மீண்டன னேந்திழையே. (உ௩௧)

அல்லகுறி வருந்தொழிற் கருமை (தாய்துஞ்சாமை).

மின்னென்ற சிற்றிடை யாயன்னை தானென்னை மேவியதன்
கண்ணென்ற நற்குண்மை காட்டின ளான்முலைக் கண்சொரிபா
லுண்ணென்ற போதுமுண் ணாதான் குருகையென் னோர்கண்பனி
நண்ணென்ற வுள்ளத்தென் போலுறங் காதவ ளாட்டமுமே.(உ௩உ)

நாய்துஞ்சாமை.

காரிக்கு வாகன மொன்றன்று வீடுறக் காட்டினையாங்
காரிக்கு மற்றிது வும்முயிர் போய்முத்தி காணச்செய்தாற்
காரிக்கு வாலிரு ளன்பர்வன் பால்வந்து கைகலப்பார்
காரிக்கு மைந்தன் குருகூர்த் தடந்துறைக் காரிகையே. (உ௩௩)

ஊர்துஞ்சாமை.

உறங்காத் திருப்புளி யும்மூருந் தாமுடை யாரென்றுல
கறங்[illegible]த்த தென்குரு கூரர்க்குச் சொல்லு மவற்றுறங்காத்

திறங்காத் தமைபுளி யேயென்ப தென்னத் திருநகரு
முறங்காத் தமாத்திரு ளூடலி னொலொலி யோய்ந்ததுமே. (௨௩௪)

காவலர் கடுகுதல்.

காவலர் தேன்சொரி தென்குரு கூர கமழ்நறைநீவ்
காவலர் பூமகிழ் மாலைப் பிரான்வெற்பிற் காவலருங்
காவல ராயெம்மை மேவாது நீங்கக் கடுந்துடிக்கைக்
காவலர் வீதியுற் றூர்கண்டக் காலோடுங் காவலரே. (௨௩௫)

நிலவு வெளிப்படுதல்.

இன்பு மிருளு மறைவாக நண்பரை யெண்ணுமென
தன்பு மயலும் விரிகின்ற வாலடி யார்வழுவுந்
துன்பு மொழித்தரு ளாழ்வார் குருகைச் சுரும்பிலலர்
வன்பு நிலவு மெழவே யெழுந்த மதிவரவே. (௨௩௬)

கூகைகுழறல்.

முருகூர் வகுளப் பிரான்சட கோப முனியுதித்த
குருகூ ரெனச்சொல்லக் கற்றவக் கூகைக் குரல்பயிலா
திருகூ ரயில்விழி யாய்நாஞ்செய் பாவ மிரவிடைநம்
முருகூர் வனத்திலிக் கூகை குழறு மடாதனவே. (௨௩௭)

கோழிகுரல்காட்டல்.

மாவாதி மூல மெனவருண் மாலென்ன வந்தமகிழ்த்
தேவாதி தேவன் குருகூ ரிறையவ தேரொடுமெய்
யேவாத செங்கதிர் கண்டாற் பருதியென் றுட்கருதிக்
கூவா வடைக்குங்கொல் லோகுர லானவை கோழிகளே.. (௨௩௮)

வரைதல் வேட்கை.

பாங்கி யிறைவினைப் பருவரல்வினவல்.

கைத்தாய் சிவந்தன ளோபெற்ற தாயுட் கறுத்ததுண்டோ
மொய்த்தாய முன்னைப் பணிந்தில தோழுத் திரைதரித்த
மெய்த்தா மரைக்கரத் தான்குரு கூர்த்தமிழ் வீறன்வெற்பி
லெத்தானுன் மெய்பசர் தாய்வெளுப் பாகிய வின்னகையே.(௨௩௯)

அருமறைசெவிலியறிந்தமைகூறல்.

செகம்பார்க்குஞ் செந்தமி ழாழ்வார் குருகைச் சிலம்பரென்
றகம்பார்த்த நண்பிற் புணர்ந்தபின் னேகுறி யாய்ந்திடவேன்
முகம்பார்த்த போது தலைதாழ்ந்து நாண முதிரவென்னா
னகம்பார்த்த தாலன்னை பின்னே யறிந்தன ணங்களவே. (௨௪0)

தலைமகன் வருந்தொழிற்கருமைசாற்றல்.

வெவ்வாயு நாயுமிவ் வூருந் துயிலினும் வேறொருவ
ரோவ்வாத காவல ரோர்பால் மறையினு மொண்மதியை
மைவான மூடினுங் கூகையுங் கோழியும் வாயடையா
வெவ்வாறு மாறன் குருகூரி லன்பர்வந் தெய்துவதே. (உசக)

தலைமகனூர்க்குச்செல்ல வொருப்படுத்தல்.

மைக்கா ரனைய மதமாவு மம்மத மாவனைய
வக்காரு மார்க்குந் தடங்கிரி வாய்நமக் கன்புமுன்பு
மிக்கா ரெனவந் தணைந்தகன் றூர்பதி மேவுதுங்கா
கைக்காரி மைந்தன் குருகா புரிவரைக் காரிகையே. (உசஉ)

பாங்கியிறைவனைப்பழித்துரைத்தல்.

நல்லார்க்குத் தீய குணம்பொருந் தாதெந்த நாளுநல்லா
ரல்லர்க்கு நல்ல குணம்பொருந் தாதந்த ரங்கவரு
ளில்லார்க்கு நாம்புத்தி யென்னசொன் னாலுமென் னுகும்பொழிற்
செல்லார்க்குந் தென்குரு கூர்மாறன் மால்வரைச் சேயிழையே. ()

இயற்படமொழிதல்.

பிறக்கும் பொழுதுமுன் னேபெரு ஞானம் பிறக்கவந்து
சிறக்கும் புலவன் குருகைநல் லாய்தனஞ் சேந்தனமாய்
நிறக்கும் படியும் விடியா விரவும் நெடுந்தலைதான்
மறக்கும் படிசெய்த வாமோ தவாதவென் வல்வினையே. (உசா)

கனவுநலிபுரைத்தல்.

தீராத வேகப் பெருமூச்சுஞ் சோகமுஞ் சேர்ந்தண்ணமே
பேராத வாய்ப்புலம் பும்பெரி தாமனம் பின்னயர
வாராத நித்திரை வந்தே குருகையில் மாறன்வெற்பில்
வீரா மரரைக்கண் டேபுண ராமுன் விழித்தனனே. (உசரு)

கவினழிபுரைத்தல்.

முன்னாட்கண் டார்கள்பின் னாளிற்கண் டாலுநம் மோயுடனுன்
னென்னாட்கொப் பாமிவ ளாரோ வெனவின வத்தினமுந்
தொன்னாட் கவினழி பேகுரு கூர்மகிழ்த் தோன்றல்வெற்பி
லின்னாட் பொருப்பனு நீயுமெண் ணாததுமென்வினையே. (உசசு)

தன்றுயர் தலைவற்குணர்த்தல் வேண்டல்.

எறிகின்ற வேல்விழிக் கண்மட வாயென தின்னலின்னே
யறிகின்ற வண்ணஞ்சொல் கின்றவ ரார்களை யத்திதத்தி

மறிகின்ற தெண்டிரைச் சங்கார வாரிக்கும் வாவியெங்குஞ்
செறிகின்ற தென்குரு கூர்மகிழ் மாறன் சிலம்பருக்கே. (உசஎ)

அன்புறல்பாங்கி சொல்லெனச்சொல்லல்.

ஞானப் பிரானின்ற வாதிப் பிரான்பத நாடுஞ்சிந்தை
மோனப் பிரான்குரு கூர்வரை வாய்மலர் மொய்குழலா
யீனப் பிராந்தி யினைவையெல் லாமுனக் கேற்றபடி
மானப் பிரானனை யாருக்கு நீசொல்ல வல்லதுவே. (உசஅ)

அலர்பார்த்துற்றவச்சக்கிளவி.

கோடாத வாண்முகத் தாய்மகிழ் மாறன் குருகைநல்லாய்
சூடாத துமணம் வீசா ததுசுரும் பும்விரும்பி
மூடா ததுவெடி யாதது பின்முகி ழாததுதான்
வாடாத தோரலர் வந்தாலெவ் வாறுய்வன் மன்னுயிரே. (உசக)

ஆறுபார்த்துற்றவச்சக்கிளவி.

கயமாலை நாடிமைக் காரிருளூ டுமின் காட்டக்கண்டு
வயமா வுடன்பிடிக் குங்கங்குல் வாய்விழி வான்றுணையாய்ப்
பயமான வென்னெஞ்ச மென்னைவிட் டேநறை பாய்வகுளப்
புயமா தவன்குரு கூர்ப்பொருப் பார்பின்பு போனதுவே. (உருo)

காமமிக்க கழிபடர்கிளவி.

நரையே றியதமிழ்க் கோமான் குருகைவெண் சங்குமுகக்
கரையே கரைகரைக் குந்திரை யேதிரை காட்டியமென்
னுரையே நுரையுடைக் கூங்கய லேகய லுங்குஞ்சுரு
நிரையே நிரைவளை சோர்தல்சொல் லீரென் னிருபருக்கே. (உருக)

தன்னுட் கையாறெய்திடுகிளவி.

பழியே புரைக்கினுந் தன்னடி யாரைப் பரமபத
வழியே செலுத்துநம் மாழ்வார் குருகை வரையிலென்போற்
சுழியே பரப்பிக் கரைவா யொதுங்கிச் சுருண்டுவிழுங்
கழியேயுன் கேள்வரு முன்சேர்ந்து தீர்ந்தவன் கண்ணினரே. ()

நெறிவிலக்குவித்தல்.

இருளுங் ககனமு மல்லூர் துணைக்கொண் டிரவிகடன்
மருளும் படியமிழ்த் திக்கொண்டு நின்றன மாரிகுரு
கொருளும் படிபெய்யு மாறுன வாற்றி லுருதிரைபாய்
தெருளுந் தமிழ்க்குரு கூர்மாறன் வெற்பரைச் சேயிழையே. ()

குறிவிலக்குவித்தல்.

ளாக்குந் தமிழ்ப்பெரு மான்குரு கூரன் சுரும்பினில்வார்
வீக்குங் கழல்வெற்பர் யாமத் தருவண்ணம் வேண்டினம
ராக்குந் தினையை யழிக்குங் கிளியை யகற்றிநின்று
சாக்குந் தொழிலெமக் கானதென் பாய்மலர்க் காரிகையே. (உருச)

வெறிவிலக்குவித்தல்.

சைம்மாவைக் கோட்டின்கண் முன்னாட் குறைத்தெம்மைக் காத்த
வெற்பர்
தம்மா தரஞ் செய்த நோயையென் னுமலெந் தாமரெல்லா
மிம்மான் மறியது கண்டத்தைத் தாம்வெட்ட வெண்ணுகின்றார்
செம்மா தவன்குரு கூர்மட வாயது தீர்த்தருளே. (உருரு)

ஏறுதழுவலும்வரும்.

கண்டார்க ளேங்சப்பின் கேட்டார் பிரமிக்கக் கண்டபடி
விண்டார் குழற வசுங்கார மாய்வெள்ளி வெற்பொத்ததாய்
கொண்டார் விடைக்கொம்பு தேறற்சென் றேதறித் தார்வகுளத்
தண்டா ரிறைவன் குருகூர்மின் னேயென் றனக்கொம்புமே. ()

பிறவிலக்குவித்தல்.

சரம்பிடிக் கும்படை விட்டேமெய்ஞ் ஞானங் கனிமுத்திரா
கரம்பிடித் தார்குரு கூர்மட வாய்நந் தமர்க்கயலா
ரூரம்பிடிக் குந்நிதி யீந்தேயென் பால்வரை வோதல்முன்னே
சுரம்பிடித் தார்க்கதன் மேலாம் பிணியெனச் சோர்வித்ததே. ()

குரவரை வரைவெதிர்கொள்ளுவித்தல்.

கதிக்கு மகத்திணை யின்னிய லாமெங் களவியலே
மதிக்கு மிறைவர் வரைவியல் கூறியெம் மாறனையே
துதிக்கு மெழிற்குரு கூர்வாழுங் கற்பியல் சூழ்வதெமர்
விதிக்கு மொழிபியல் செய்யா தெதிர்கொள்ள வேண்டுமின்னே. ()

வரைவுகடாதல்.

வினவிய செவிலிக்கு மறைத்தமைவிளம்பல்.

கனுவுந் திருமுகம் வாட்டம்பெற் றேதயி னுட்டம்பெற்றார்
கனுவும் புலம்பு றுவதென் னென்று கலாபமும்பொன்
மனுவுந் திகழங்கு லெம்மோய் குருகையுண் மாறன்வெற்பா
வினுவும் பொழுதினுய்ந் தேன்தற் கேற்ற விடைகொடுத்தே. ()

அலரறிவுறுத்தல்.

ஓவாத காந்தி யிதழெள்ளின் பூவை யுறக்கொடியார்
தீவாத கோவைமுன் னேமுல்லை பூப்பத்தண் டார்வகுளத்
தேவாதி தேவன் குருகூர்வெற் பாசெம்பொன் வள்ளையெய்த
பூவா லருன்பொருட் டாலேயென் வஞ்சிக்குப் பூத்ததுவே. (௨௯௦)

தாயறிவுறுத்தல்.

பண்பாடு நாத முனிகளி கூறப் பகர்சுருதி
வண்பாட னுவலன் றென்குரு கூரன் வரவைக்கங்குற்
சண்பாடு நீத்துள மேம்பா டுறுமடக் கன்னிமனப்
புண்பாடு நீக்கிய மெய்ப்பாடு தாய்க்குப் புகன்றதுவே. (௨௯௧)

வெறியச்சுறுத்தல்.

சோரா மருந்திலு மந்திரந் தாலுமின் சோகமிந்நாட்
டீராமை யாற்றெய்வத் தாலாங் குறையெனறு நீரவுண்மை
யோராதெம் மாறன் குருகூரின் வேலர்க் கொருப்படவே
நேரா வணங்கினின் முர்தந்தை தாயரு நேயருமே. (௨௯௨)

பிறர்வரைவுணர்த்தல்.

அன்னையர் தன்னையர் பின்னையர் யாரு மயலவர்க்கெம்
பொன்னை மணஞ்செய்யச் சம்மதித் தாரந்தப் பொன்னுக்கன்பர்
நின்னை யறிந்திலர் நீயு மறிந்திலை நேமியங்கைப்
பின்னை மணாளனுக் கன்பன் குருகைப் பிறர்வரைவே. (௨௯௩)

வரைவெதிர்வுணர்த்தல்.

குலத்தி னிலத்திற் றிருவி னுருவினெங் கோதைக்கொத்த
நலத்தி னிறைந்த மணவாள னென்று நாடுகின்றார்
புலத்தி னிறைகுரு கூர்மகிழ் மாறன் பொருப்பவெம்மோர்த்
தலத்தினின் பேர்சொல்லி னெல்லாருஞ் செய்குவர் சம்மதமே. ()

வரையுநாளுணர்த்தல்.

சேரு மதிளு மணிமாட மும்பொற் சிகரமும்வான்
சாரு மெழிற்குரு கூர்மகிழ் மாறன் றமிழ்ச்சிலம்பா
ஆரு மதியைப் பொருந்திய நாற்கினை யோங்குசுணி
யாரும் பலர்முகத் தந்தாரிக் காண்மண மாவதென்றே. (௨௯௫)

தலைமகளறிவு தலைமகற் குணர்த்தல்.

முத்தே நிகர்த்த குறுநகை யாளை முதுக்குறைசோ
சித்தேதன் றன் னுணி மறைத்தா ளெனையுஞ் செகதலத்தி

லெத்தே வரும்புக ழாழ்வார் குருகை யிறையவனான்
பொய்த்தேனு முன்னைப் பழித்தாலுஞ் சற்றும் பொறுக்கிலனே ( )

குறிபெயர்த்திடுதல்.

ஊரு மெறும்பு தினநடந் தாலுங்கல் லுங்குழிந்தெல்
லாரு மறியப் படுவதன் றேவிவ் வடவியிரு
வீருமல் லாது பிறருமுற் றூரினி வேறுவனஞ்
சாரு மெழிற்குரு கூர்மகிழ் மாறன் றமிழ்வெற்பனே. (௨௬௭)

பகல்வருவானை யிரவுவருகென்றல்.

ஒடையும் பண்ணையும் புன்னையு மெய்ந்திர வோதிமந்தான்
பேடையுந் தானும் புணர்மாடம் பார்த்தனள் பேரருவி
கோடையுந் தாழுஞ் சிலம்பா சடாரிக் குருகையின்வா
ராடையும் பூணும் பொலிந்தோங் கியமுலை யாரணங்கே. (௨௬௮)

இரவுவருவானைப் பகல்வருகென்றல்.

ஈரக் கருங்குவ ளைப்போதிப் போதி லிகழ்ந்துமலர்
வாரக் கமல மலர்க்கைகொண் டாள்வட்ட மிட்டதன
பாரத் திருநங்கை பெற்றான் குருகைப் பதிப்பொதியத்
தாரப் புயாசல வேதோ கருத்துன் னணங்கினுக்கே. (௨௬௯)

பகலினுமிரவினும் பயின்றுவருகென்றல்.

வீடா தரிக்குங் குருகூர்ப் பராங்குசன் வெற்பவுன்னைக்
கூடாத போது முகம்வாடு வாளிவள் கூடியக்கால்
வாடா திருப்பளவ் வாடாமை யாலுன் மறைபிறரு
நாடா திருப்ப விருபோதும் போதுக நற்புனத்தே. (௨௭௦)

பகலினுமிரவினு மகலிவணென்றல்.

மதியா மிரவின் வரவெளி சாட்டு மதிமறையுந்
திதியா மிரவி னிருளால் வழிதப்புந் தென்குருகைப்
பதியாளு மாறன் சிலம்பா மறவர் பகல்விரையுன்
சதியாற் சுவடறி வார்வர னீயிரு காலமுமே. (௨௭௧)

உரவோனாடு மூருங்குலனு மரபும்புகழும் வாய்மையுங்கூறல்.

தேரும் பொழுதென்றுந் தூயோர்க ளேயென செய்குவர்விண்
ணோரும் புகழ்மகிழ்க் கோமான் குருகையுன் னாடுமுறை
யூருங் குலனு மரபும் புகழு முயர்ந்தபுகழ்
சாருஞ் சிலம்ப வரையா தெழுதத் தகாதுனக்கே. (௨௭௨)

ஆறுபார்த்துற்றவச்சங்கூறல்.

பாயும் புலிபு மரவூருங் காட்டுப் படுதழலுங்
காயுங் கலுழிப் புனன்மோது மாற்றுக் கயத்துக்கரா
மேயுஞ் சுனைதனி வெஞ்சுர் திரிபுன மேவல்வினைத்
தோயும் புரிசைக் குருகூரின் மாறன் சுரும்பண்ணலே. (உஎ௩)

ஆற்றுத்தன்மையாற்றக்கூறல்.

உள்ளுந் தளருமண் மேற்சோர்ந்து வீழுமை யோவெனவாய்
விள்ளும் புகையும் பெருமூச் செறியும் விழிக்கடைநீர்
துள்ளுந்தண் டார்மகிழ்க் கோமான் குருகைச் சுரும்பசுரும்
பள்ளுங் குழலியை யென்றோ வரைந்திட் டாற்றுவையே. (உஎச)

காவன்மிகவுரைத்தல்.

அரும்பிய கஞ்ச முகமல ராய்நறை யாரவளி
விரும்பிய வேலையின் வெள்ளமிக் கோங்கமுன் மேவும்வண்டு
திரும்பிய பொய்கை வளநாட மாறன் திருக்குருகூர்க்
கரும்பியல் சொல்லி பொருட்டா லினிவரல் கங்குலிலே. (உஎரு)

கனவுநலிபுரைத்தல்.

செழித்த தமிழ்க்குரு கூர்மாறன் வெற்ப திகைக்குமெண்ண
மொழித்த கனவி லுனைக்கண்ட தானுற் றணையுமுன்னே
விழித்த விழியைக் கரைப்பா னழுது விழிக்கநினை
வொழித்த மனத்தைத் துறந்தே யயர்ந்ததென் னொண்டொடியே.

கவினழிபுரைத்தல்.

மாவான செந்தளிர் மேனிபொற் பீர்க்கின் மலர்ப்பருவப்
பூவா னதுமத னீற்றுங் கணைபுனல் பூத்தமுத
லேவா னதுமகிழ்க் கோமான் குருகை யிறைவனுன்னை
மேவாத பேரிய லன்றோ விருளுற்ற வேற்றுமையே. (உஎஎ)

ஒருவழித்தணத்தல்.

தலைவன்றன் பதிக்ககற்சி பாங்கிக்குச்சாற்றல்.

பாட்டாலு மின்சொற் கதையாலுங் கிள்ளை பயிற்றுகிளை
யாட்டாலு முண்மைக் குறியாலுங் கிண்ணத் தருத்துமமு
தூட்டாலு மாறன் குருகைப்பொன் னேயுணர் வாமெடுத்துக்
காட்டாலுந் தேற்றென தூர்போய் வருமட்டுமுன் கன்னியையே. ( )

பாங்கிவிலக்கல்.

ஒருநாட் குறிவயிற் சாரு திருக்கினு முன்னைத் தன்னைப்
பெருநாட் பிரிந்தது போலயர் வாள்பெருந் தேர்நடத்துந்
திருநாட் புலவன் குருகூரிற் சென்று திரும்பியெம்மூர்
வருநாட் டுணையு மனந்தேறு மோவென் மடக்கொடியே. (௨௭௯)

தலைவனீங்கல்வேண்டல்.

விதிசெய லன்பர்க் கொழித்தே கதிதரு வீறன்விண்ணோர்
துதிசெயுந் தென்குரு கூரிடந் தோறுந் துலங்கியுள்ள
வதிசெயங் காணும் விழைவால் வரவரி தாயினுமென்
மதிசெய மாமுக மாம்பொருட் டாலிங்கு வந்தருளே. (௨௮௦)

இதுவுமது.

அரவேய் மருங்குனல் லாயெம தூர்நெடி தல்லவொல்லை
வரவே யுபாய வழியுமுண் டோமகிழ் மாறன்முத்தி
தரவே யெனக்கருள் வான்குரு கூர்புகழ் தண்புட்பகத்
தரவேக மாகதிக் கும்முந்துந் தேரின் றுரகதியே. (௨௮௧)

தலைவிக்குத் தலைவன் செலவுணர்த்தல்.

உருதவண் ணம்மறுத் தேதொழு தார்தம்மை யுன்னைப்பின்னைப்
பெருதவண் ணம்பெறுத் துங்குரு கூர்ப்பற்ப பீடன்வெற்பி
லுருதவண் ணம்முறுத் தற்கேயென் வார்த்தைதம் மோர்சொல்லின்
மருதவண் ணம்மறுத் தேபிரிந் தாரன்பர் வாணுதலே. (௨௮௨)

தலைவி நெஞ்சொடுபுலத்தல்.

இளைக்கும் படிப்பிடி யேனென்று தீர்ந்தன ரென்னையின்னும்
விளைக்குஞ் செயலென் னெனவுண ரேனுள்ளு மெய்யுமுறத்
திளைக்குந் திருவுற றூற்றெண்மர் மௌலியுஞ் சென்றுவிழல்
வளைக்குந் திருப்புளி யார்குரு கூர்வெற்பின் மன்னவனே. (௨௮௩)

காமமிக்ககழிபடர்கிளவி.

அனமேயென் னன்பர் வரத்தாழ்த்த தேதெனக் காகச்சுரும்
பினமேநற் றாதுசென் றுற்பழு தோவிளங் கன்னிப்புன்னை
வனமே வசந்தன் வராமறை யோதூ மகிழ்ப்பரன்சோ
பனமே கமழ்குரு கூரெளி யென்மையல் பார்த்திருமே. (௨௮௪)

கடலொடுபுலம்பலும்வரும்.

சீதைக்குக் கேள்வனச் சீதைதன் பால்வரத் தென்னிலங்கைப்
பாதைக் குணேமுன் னிரந்ததெல் லாம்பைந் துளவுதந்த

கோதைக்குத் தாதை குருகூர்ச் சிலம்பர்க்குக் கூறியென்மால்
வாதைக் கவர்புய மேமருந் தாய்ச்சொல்லு வார்கடலே. (௨௮௫)

கூடல்வளைத்தலும்வரும்.

சுழிக்குஞ் சுழிக்குத் தொண்கவேறு வேறுறச் சோர்வளைபோ
லழிக்குங்கண் ணீர்பல காலுமந் தோவள மாமனத்துஞ்
செழிக்குந் தமிழ்க்குரு கூர்ச்சட கோபன் சிலம்பினிலென்
விழிக்குங் கரத்துக்கு காணென்ன வோவெவ் வினைசெய்ததே. ()

சூளுறவு பொய்யென்றலும் வரும்.

மேவுந் தலைவர் தமைக்கரி யாக்கி விளக்கியசூள்
யாவுந் தெளிந்தும்பொய்த் தாரைத் தெருதெறி வேலெனச்சேல்
வாவுந் தடம்பொரு னைக்குரு கூர்மகிழ் மாறன்வரைத்
தேவுந் தனது முறைதிரிந் தாலென்ன செய்வதுவே. (௨௮௭)

கையறுகிளவியும்வரும்.

இப்பிறப் பூடு பிறந்தே புணர்ந்த விறைவர்வரு
மப்பிறப் பூடும் பிரியா தணைக வடைந்தவருக்
கெப்பிறப் புந்தவிர்ப் பான்மகிழ் மாற னெழிற்குருகூர்
மெய்ப்பிறப் பாமன மேயினை வாயெண்ணம் வேறில்லையே. (௨௮௮)

*இவையெல்லாங் கழிபடர்கிளவியுளடங்கும்.

தலைவியைப் பாங்கியாற்றுவித்தல்.

ஆடியும் பாடியுஞ் சூடியுந் தேடியு மாதரவு
நீடியு நேரிழை யாய்போது போக்குது நீலவண்டு
மூடிய கேசரத் தாரான் குருகை முதிர்சிலம்ப
ரோடிய தேர்வழி யுந்தாருங் கீர்த்தியு முந்தியுமே. (௨௮௯)

தலைவன்வந்தமை பாங்கி தலைவிக்குணர்த்தல்.

தேனூர்பைந் தார்க்குழ லாயினி நீசற்றுந் தேம்பன்மகிழ்க்
கானூர்சொந் தார்தொடை யார்குரு கூருன்னைக் கைகலந்தவ்
வானூர்தந் தாணடை நோவாற்றி டாதுன்னை யாற்றத்தம்மூர்ப்
போனூர்வந் தார்கண மும்பிரிந் தாரில்லை போனவங்கே. (௨௯௦)

வந்தோன்றன்னொடு பாங்கிநேர்ந்துவினவுதல்.

மையோ டரிக்கண்ணி யுந்நீயு மீருடல் வாய்ந்தமூடற்
செய்யோ ருயிரென லாய்ப்பிரிந் தான்மயல் செய்யுமன்பும்
பொய்யோ தமிழ்க்குரு கூர்மகிழ் மாறன் பொருப்பபன்னு
ளையோ பிரிந்திருந் தாயேது வேதுன் னருள்செய்வையே. (௨௯௧)

தலைவன் பாங்கியோடு நேர்ந்துவினாதல்.

தெழிக்கின்ற வாறலை பாய்குரு கூர்மகிழ்ச் செல்வன்வெற்பிற்
பழிக்கின்ற வாறும் பழிக்குமின் னார்முகம் பார்த்தொருபாற்
சுழிக்கின்ற வாறுஞ் சுழியுந்தி யாய்மதன் றொட்டவம்புட்
கிழிக்கின்ற வாறும் பொறுத்ததெவ் வாறுன் கிளிமொழியே. ()

பாங்கிதலைவியை யாற்றுவித்திருந்த வருமைதலைவற்குக்கூறல்.

தணிகாட்டு நீதந்த பூந்தழை காட்டித் தளவரும்ப
ணணிகாட்டு வாய்க்கொடி யாரலர் காட்டி நலிந்தெமர்கண்
பனிகாட்டக் காய்வகை யுங்காட்டி மாறன் பயில்குருகூர்க்
கணிகாட்டக் கொவ்வைச்செவ் வாய்க்கொம்புட் டேறலைக் காட்டி
னனே. (உகங)

வரைபொருட்பிரிவு.

தலைவ னென்பொருட்பிரிவுணர்த் தேந்திழைக்கென்றல்.

சேந்தன மூடர்க்குந் தான்சேவை சாதிப்பத் திண்பெரிய
சேந்தன மூரும் பிரான்குரு கூர்வரைச் செம்பொனன்னாள்
சேர்தனந் தீண்ட முலைவிலை யாய்நுமர் செப்புமுறை
சேந்தனங் கொண்டு வருவேன் சனதனத் தேமொழியே. (உகச)

நின்பொருட் பிரிவுரை நீயவட்கென்றல்.

கல்யாணஞ் செய்ய முலைவிலை யாமெங்கள் கன்னிகைக்குக்
கல்யாண நல்கப் பிரிகின்ற வாறுசொற் கார்க்குயிலுங்
கல்யாணர் வஞ்சிக்கு நீயே புகன்மகிழ்க் கண்ணிப்பிரான்
கல்யாணி யின்றமிழ் தேர்குரு கூர்வரைக் காவலனே. (உகரு)

நீடேனென்றவனீங்கல்.

நம்பிமுன் வைத்த வகப்பொரு ளேகொண்டு நாளைவந்துன்
வெம்பிய காரிகை கைப்பற்று வேனுனை விண்ணமுதா
வம்பியல் வாட்கணன் னாவிடை யாயலங் காரவெள்ளைத்
தம்பியை யேத்துநம் மாழ்வார் குருகைச் சயிலத்திலே. (உகசு)

ஓடரிக்கண்ணிக் கவன்செலவுணர்த்தல்.

முப்பொரு ளாடு முதற்பொரு ளீதென்று முத்தமிழா
லெப்பொரு ளுந்தெரித் தான்குரு கூர்வெற்ப ரேத்துமறை
மெய்ப்பொரு ளின்படி வேட்பான் முலைவிலை வேட்டெமர்சொல்
கைப்பொருள் கொண்டு வரப்பிரிந் தார்மலர்க் காரிகையே. (உகஎ)

பூங்குழை யிரங்கல்.

மஞ்சார் மதிட்குரு கூர்மாறன் மால்வரை மன்னரு
ளஞ்சா மணமறி யாதெமர் தாமிரண் டாமணமென்
னெஞ்சாம லென்னினை ரென்றே யினிப்பிரி யேனென்றவர்
பஞ்சார் மலரடி யாய்பொய்ம்மை கூறப் படித்தனரே. (௨௯௮)

பாங்கி கொடுஞ்சொற் சொல்லல்.

அம்பர் கலவைக் குழம்பா ரணிமுலை யாரம்பது
மிம்ப ரலரு மறைவா மணஞ்செய்ய வெண்ணியன்ப
ரும்பர் மலைகிர் பொன்காட்ட நீங்கின ரொண்மகிழ்த்தா
ரெம்பரன் வாழ்குரு கூர்மா னிதற்கெங்ங னேங்கினையே. (௨௯௯)

தலைவி கொடுஞ்சொற்சொல்லல்.

புரியா தகன்றவர் வர்மமும் யாமமும் புட்களுஞ்சஞ்
சரியாத முள்ளுடைச் சிற்றூழும் வாடுமென் றன்குழவுந்
தெரியா தெனையே கழறுவர் மாறன் றிருக்குருகூர்ப்
பிரியா திருந்த பெருந்தவத் தார்க்கென்கொல் பேசுவனே. (௩00)

வருகுவர் மீண்டெனப் பாங்கிவலித்தல்.

கூண்டே தொழுந்தங் குலத்தொழும் பாரைக் குருகைபன்பு
பூண்டே புரக்குஞ் சடகோபன் செம்பொற் பொருப்பர்சென்ற
வாண்டே புறுத்தன் சிறைநீழல் பேடைமெய் யாகக்கண்டு
மீண்டே வருவரப் பாற்செல்லு மோவவர் மெல்லடியே. (௩0௧)

பருவங்கண்டு பெருமகள்புலம்பல்.

எய்கின்ற வேள்கணை போலேயென் கண்ணு மெழிலியினீர்
பெய்கின்ற வாறங்ங னெண்ணுவ ரோவன் பிணிமுகந்தான்
செய்கின்ற வாட்டமுங் கோகில வாட்டமுந் தேர்ந்துதொண்ட
ருய்கின்ற வாறரு ளாழ்வார் குருகை யுயர்வெற்பரே. (௩0௨)

இருளைவம்பென்றல்.

செவ்வாய் மதிவெள்ளி பொன்னிலை பேரினுந் தேங்குமுதச்
செவ்வாய் மடந்தை மழைபெய்யுங் காண்சிந்தை பேதுறனீ
செவ்வாய் இனையிது கார்கால மன்று செழிக்குமுர
செவ்வாயு மார்க்குங் குருகூரின் மாறன் சிலம்பர்சொல்லே? ()

இறைமகன்மறுத்தல்.

தேரல்ல தென்னு மகலல்கு லாய்செறிந் தோங்குஞ்செந்நெற்
போரல்ல தென்னு முலைநங்கை பாலனைப் போற்றும்விண்ணோ
ரூரல்ல தென்னுந் திருக்குரு கூர்நின் றொலிக்குமிது
காரல்ல தென்பதென் னிந்திர கோபமுங் கண்டுநின்றே. (௱௪)

அவர்தூதாக வந்தடைந்த திப்பொழுதெனத் துணைவிசாற்றல்.

தோராது வாடலென் னியன்பர் தூதிது செல்வரவை
யோராது வேறுசொன் னேன்மகிழ் மாற னுயர்குருகூ
ராராகி லும்பிரிந் தான்மீண்ட தோர்ந்தன் னகமகிழ்வார்
சோரா திடையிற்கண் டார்முந்திக் கூறுந் துணையிதுவே. (௱௫)

பிணைவிழியாற்றல்.

தழைவந்த தண்டலைத் தென்குரு கூர்மகிழ்த் தாமன்வெற்பி
லிழைவந்த நுண்ணிடை போல்வாட னீயெம் மிறையவர்சொற்
பிழைவந்த தென்று கருதென்னெஞ் சேபுனல் பெய்யுமைக்கார்
மழைவந்த தான்மழை வண்மைநங் கேள்வரும் வந்தனரே. (௱௬)

அவனவட்புலம்பல்.

ஏவிய புள்ளுக்கு நீடிய திக்குக்கும் யாத்திரைக்கு
மேவிய நாளுக்கு மேயா மகிழ்வித் தகன்குருகூ
ரோவிய மன்னவ னைப்பிரிந் தேன்சென் றுறுமுனென
தாவியன் னாட்கிடர் வந்ததென் றாலென் னரும்பழியே. (௱௭)

தலைவன் பாகனொடு புலம்பல்.

ஆங்கேமைக் கார்கண்டெந் தேர்பிந் தினதென் றயருமவள்
பாங்கே துயருஞ் சிலதியைப் போலப் படியையெண்ணி
யீங்கே யுலையு மெனைக்கண்டு நீமலை யேல்வலவா
தேங்கே சரத்தன் குருகூர்ச் செலுத்துநின் றேர்கடிதே. (௱௮)

மேகத்தொடு சொல்லல்.

தன்னமுங் கையுங்கை யாருங்கண் ணீருங்கண் கொண்டகொங்கைச்
சொன்னமுந் தாங்கிச்சொன் னேனென்னும் வாக்குச்சொல் வீர
[டையா
லன்னமுஞ் சூழ்நங்கை பெற்றான் குருகை யருண்முகில்கா
னின்னமும் வந்தில ரன்பரென் னுமுன மென்வரவே. (௱௯)

வலம்புரிகேட்டவன் வரவறிவுறுத்தல்.

அங்கை வளைகழ லாதய ராதினி யாரடிசூழ்
கொங்கை வளைமலர்ப் பூங்குழ லாய்தென் குருகைவந்து
கங்கை வளைபதஞ் சூழ்ந்தான் சிலம்பர் கமலமலர்ச்
செங்கை வளைதொனிக் கின்றது கேளுன் செவிகொடுத்தே. (கூ௬௦)

வலம்புரியைக்கிழத்தி வாழ்த்தல்.

வெண்சங்கஞ் செங்கையிற் கொண்டருள் கார்வண்ணன் மெய்ப் [புகழாற்
பண்சங்க முத்தமிழ் செய்தார் குருகைப் பதிப்பொருனைத்
தண்சங் கணித்துறை வாழ்சங்கம் போலத் தழைக்கவென
தெண்சங்கை தீரத் தொனிக்கின்ற கேள்வ ரிறைச்சங்கமே. (கூ௬௧)

தலைவன்வந்துழிப்பாங்கி நினைத்தமைவினுவல்.

யாமுன் றிறந்தெரி கின்றதெவ் வாறென் றியற்புலவர்
தாமுன் புகழ்ந்த குருகூர்ப் பராங்குசன் றண்சிலம்பா
யாமுன் புறமுன் றிருவுளத் தேக்கம் வந்ததுண்டோ
நீமுன்பு நீங்கிய நாட்டொட்டிந் நாள்வரை நேரிழையே. (கூ௬௨)

நினைத்தமைசெப்பல்.

உருக்குங் குதலைச் செழுங்கனி வாயு முபயகுழை
நெருக்குந் தடங்கண்ணும் புன்மு றலுநெறிக் கும்மளகச்
சொருக்குந் திருநுதற் சாபமும் வாண்முகச் சோதியுமா
யிருக்குந் தமிழ்ப்பெரு மான்குரு கூர்புக்கு மெண்ணினனே. ()

ஆற்றுவித்திருந்தவருமைவினுவல்.

கூறுத வேதப் பொருட்கூற்றைச் செந்தமிழ்க் கூறிமுன்பு
மாறுத வெவ்வினை மாற்றிய மாறன் வருகுருகூர்ச்
சீறுத வாண்முகத் தாய்தணி யாக்கடுந் தீயினின்று
மாறுத பொன்னையெவ் வாறேபன் னுளிருந் தாற்றினையே. (கூ௬௪)

ஆற்றுவித்திருந்தவருமைபாங்கிகூறல்.

மெல்லிய வண்ணத் தமிழ்க்கோன் குருகைவெற் பாமுன்புநீ
சொல்லிய வண்ணங் கிளிசொலக் கேட்பித்துந் தோகையன்பாய்ப்
புல்லிய வண்ணம் விளையாடச் செய்தும் பொழுதகன்று
செல்லிய வண்ணங்கள் சாற்றினன் போற்றினன் றேற்றினனே.

வரைவியல்.

வரைவுமலிவு.

காதலன்முலைவிலை விடுத்தமை பாங்கி காதலிக்குணர்த்தல்.

பண்காணுஞ் சொல்லியுன் செந்தனங் காட்டப் பரந்தபொன்னு
மெண்காணு நோவு மறைப்பான் முலைவிலைக் கென்றுநின்று
விண்காணுஞ் சேடப் புளியார் குருகையுண் மேவிநமர்
கண்காண வெற்பர்செங் கைகாட் டியது கனதனமே. (௩௧௬)

காதலி நற்றாயுள்ளமகிழ்ச்சியுள்ளல்.

கற்றவர் கல்வியைக் கண்டே வரிசை கருதிச்செய்யுங்
கொற்றவ ருள்ள மகிழ்வது போலக் குருகைமகிழ்
நற்றவர் பொற்கிரி வாய்முன்பு மான்கலை நாடிநம்பா
லுற்றவர் மன்றல்கண் டாலன்னை தானு முவப்புறுமே. (௩௧௭)

பிறர்மணமுரசு விலக்கலும்வரும்.

காட்டுற மாதங்கங் கண்டஞ்சி ஞானமுன் காத்தவர்நம்
வீட்டுற மாதங்க நங்கேளிர் நேசிக்க வீசினரோ
வீட்டுற மாதங்க மார்பனுக் கன்ப ரெழிற்குருகூர்
நாட்டுற மாதங்க வார்ப்பதென் னேமண நன்முரசே. (௩௧௮)

பாங்கி தமர்வரைவெதிர்வு காதலிக்குணர்த்தல்.

கண்டாருஞ் சொல்லியுன் னாசையி னுன்னைக் காதலித்துத்
தண்டார் தொடுத்த முலைவிலை யேதுந் தழைத்தமகிழ்
வண்டா ரிறைவன் குருகூர்ப்பொன் னாசை மருவெமர்கைக்
கொண்டார் மணந்தினிக் கொண்டார்கண் டாயுனைக் கொண்கருமே.

தலைமகளுவகையாற்று துளத்தொடுகிளத்தல்.

ஆரூர் தணிவுசெய் யச்சமுந் தீர வநங்கனையும்
போருந் தவிர்ந்து விடவே வகுளப் புயன்குருகை
யூரும் பிறவு நமைநன்மை பேசமுன் னுற்றதன்பர்
தீரும் படியினி யுய்திற மேமணஞ் செய்திறமே. (௩௨௦)

பாங்கிதலைவனைவாழ்த்தல்.

சேலே யனையகட் பூவையைச் சேர்த்து திருப்புணர்ந்த
மாலே யெனவென்றும் வாழிய நீகனி வாய்மொழியின்
பாலே நிகர்நங்கை பெற்றான் குருகைப் பதியிலுன்னைப்
போலே தழைக்கவென் வஞ்சிக்கு நீமுன் புனைமுல்லையே. (௩௨௧)

தலைவிமணம்பொருட்டாக வணங்கைப்பராநிலைகாட்டல்.

குவிக்கின்ற கையுங் குவியாத வைம்புலக் கோளடங்க
வலிக்கின்ற நெஞ்சுந் துதிக்கின்ற வாயு மயில்விழியுற்
பவிக்கின்ற முத்தமு மாய்த்தெய்வம் வாழ்த்துமென் பாவைபுனி
கவிக்கின்ற நீழலி னன்குரு கூரினென் னகப்பற்றவே. (௩௨௨)

பராநிலைகண்டதலைவன்மகிழ்தல்.

கலையு முடலு மொடுக்கி வணங்கிக் கரியகுழற்
றலையு நிலையுங்கை கண்ணுமொன் றாக்கித்தன் றுய்தருபான்
மலையுமுன் னன்வளர்ந் தான்குரு கூர்வரை முந்துதெய்வ
நிலையு மறிந்த தொழக்கற்ற வாறெங்ங னேரிழையே. (௩௨௩)

அறத்தொடுநிற்றல்.

கையறுதோழி கண்ணீர்துடைத்தல்.

மையணி கண்ணுக்கு முத்தணி யாக்கினை மாந்தளிர்போன்
மெய்யணி குன்றப் பசலையைக் காட்டினை விட்டுவின்முன்
கையணி யாய்த்தொழு மாழ்வார் குருகைக் கனவரைவாய்
நெய்யணி வார்குழ லாய்கூறு வாயுன் னினைவெனக்கே. (௩௨௪)

தலைவிகலுழ்தற்காரணங்கூறல்.

தான்காட்டக் கண்டவென் னெஞ்சகந் தேடித் தணந்ததற்கோ
யான்காட்ட வொல்லை முயல்கென்ன வோவெண்ணி னூர்க்குமுத்தி
வான்காட்டு மாறன் குருகூர்ச் சிலம்பர் வரவிரும்பிக்
கான்காட்டும் பூங்குழ லாயென்கண் மாரியைக் காட்டினவே. ()

தலைவன்றெய்வங்காட்டித்தெளிப்பத் தெளிந்தமையெய்தக்கூறல்.

நாடும் பதியுநம் மூர்க்கணித் தாமென்று நாளுமென்னைக்
கூடும் படியுந் தவறாத தென்று குருகைமகிழ்
சூடும் புயாசல வெற்பரென் னையத் தொலைத்திடவே
நீடுங் கடவுண்முன் னேசூளுற் றாரென்கொ லீங்கினமே. (௩௨௬)

இறைவி தலைமகனிகந்தமைகூறல்.

தேனுண்டு தேனுறங் கும்மகிழ் மாலிகைத் தேசிகனெங்
கோனுண் டெனத்தன்னைச் சேர்ந்தார்க் கருள்குரு கூரன்வெற்பில்
வானுண்ட காவின் மணந்தவன் றார்மறந் தார்க்கரிதான்
மீனுண்டு வாழ்குரு கண்டுரை யாதுகொன் மெய்யுறவே. (௩௨௭)

பாங்கிதலைவனை யியற்பழித்துரைத்தல்.

அளிக்குங் கரும்புயன் மைம்மாரி கண்டபைந் தோகைநின்று
களிக்குங் களிர்க்குந் தருவுமென் னேமகிழ்க் கண்ணிபரி
மளிக்கும் புயப்பெரு மான்குரு கூர்வரை வஞ்சியுன்னைத்
தெளிக்குந் தலையளி போர்த்தா விலங்குஞ் சிலம்பிடையே.(௯௨௮)

தலைவியியற்படமொழிதல்.

தாயா ருருசவு மொன்றுஞ்சொல் லாதயன் றந்தையையே
வாயார வாழ்த்தும் பிரான்குரு கூர்க்கை மருந்தானன்று
நோயாருண் டாலெனச் சேர்ந்தசன் றூர்குண நோக்கினின்று
தியாரென் றூனு மவரேநல் லாரிங்கென் சிந்தனைக்கே. (௯௨௯)

தெய்வம் பொறைகொளச் செல்குவமென்றல்.

வெறுக்கும் படிதொண்டர் செய்தாலுந் தண்ணளி விட்டலைய
வொறுக்கும் படிநினை யாப்புல வோன்குரு கூர்ச்சிலம்பர்
சறுக்கும் படியுண்மை பொய்த்தாரென் றேசரு தாதெய்வம்
பொறுக்கும் படிதொழு வோமெழு வோமலர்ப் பூங்கொடியே.()

இல்வயிற்செறித்தமை சொல்லல்.

தெளிக்கின்ற நால்கைக்கொண் டந்நூலை யாய்தக்க சிரியரை
யொளிக்கின் றவரென்ன வேயன்ன மேயடைந் தோர்க்குமுத்தி
யளிக்கின்ற மாறன் குருகூர்ச் சிலம்பிலெம் மன்னையென்னை
விளிக்கின் றனளொரு காலொரு கான்மூன்றின் மேவினுமே. ()

கனையிருளவன்வரக்கண்டமைகூறல்.

திண்டாள வார்முலை யாய்நேற்று வேங்கைச் சினையுளெம்மோய்
கண்டாள்வெஞ் சூரென்றுட் கொண்டாள்மண் கால்படக் கள்ள
[ளென்று
விண்டா ளதிர்ந்தவர் வாராமுன் போனவர் மென்சுவடா
மொண்டா லியன்மகிழ்த் தாரான் குருகையின் றோர்ந்தனளே. ()

செவிலி தலைமகள் வேற்றுமைகண்டு பாங்கியைவினாதல்.

அஞ்சங் கொடியெனக் கொண்டான் குருகை யணிவரைவாய்
வஞ்சந் தவிர்ந்தவென் னாருயிர்ப் பாவை வனப்பழிந்து
நெஞ்சங் கலங்கி யுரைதடு மாற நெடியவிழிக்
கஞ்சந் தரளஞ் சிறப்பதென் னேமென்சொற் காரிகையே.(௯௩௩)

வெறிவிலக்கல்.

சுகரை முதலிய மாதவர் வாழ்த்தித் தொழுங்குருகை
நகரை யருளுநம் மாழ்வார்வெற் பூடொரு நாட்டம்பண்டு
புகரை யிழக்கச்செய் தான்றுள வோபிணி போக்கச்செவ்வே
டகரை நுகர விடுமோமின் சோகமுந் தாகமுமே. (௬௬௪

வெறிவிலக்கியவழிவினாதல்.

சதித்த விளமுலை யாள்பிணி தீரக் கருதித்தென்பா
லுதித்த பருதிக் குருகூரிற் பேதைய ருள்ளொருநீ
மதித்தவிவ் வேலையிற் செவ்வேலை நாலை வழிபடநாம்
விதித்த தொழிய விலக்கிய வீதென்கொன் மேற்கொண்டதே. ()

பூத்தருபுணர்ச்சியாலறத்தொடுநிற்றல்.

கற்று முருகு நிகராமொ ராண்டகை கல்லும்புல்லு
முற்று முருகு மழநடை யான்முத் திரைக்கையெங்கோன்
பற்று முருகு நிறைதரு கூர்மடப் பாவைகுழற்
சுற்று முருகு மலர்மாலை நீட்டினன் சூட்டினனே. (௬௬௬)

புனறருபுணர்ச்சியாலறத்தொடுநிற்றல்.

பாரிடைத் தோன்றி மறைந்தவ ளாம்பண்டு போலில்லந்தா
னீரிடைப் போயின ளென்றெண்ண வேபடி நீர்ச்சுழிக்கீழ்ச்
சேரிடைக் கண்டிவள் கைபிடித் தேகரை சேரச்செய்தா
னூரிடைக் காண்பதெம் மாழ்வார் குருகை யவன்கவினே. (௬௬௭)

களிறுதருபுணர்ச்சியாலறத்தொடுநிற்றல்.

குருகை வகுளப் பிரான்கிரி வாயுண்பொற் கொம்பைவெம்பி
வருகை யறிந்தொரு வேன்மன்னர் கோன்மரு மத்தபயர்
சருகையொன் றுன்முலைக் கொம்பாகம் பாயத் தழீஇமதமா
வொருகையுங் கொண்டிரண் டுங்குலைறத் தான்மற் றொருகைகொ
[ண்டே. (௬௬௮)

இதுவுமது.

என்னையு நீங்குஞ் சிறுபோ தொருகரி யேய்ந்துகொம்பு
தன்னையும் வெல்லு மெழுந்தாலென் றெண்ணித் தனத்தையுமுன்
பின்னையுஞ் சீறி யெதிர்த்தலுங் காத்தனன் வீரன் றொண்டர்க்
கன்னையும் போலுங் குருகூரன் வெற்பிலொ ராண்டகையே. ()

இதுவுமது.

டிதழைக் கும்புன நாம்விளை யாடுமக் காலத்துத்தன்
டிதழைக் குந்நடை வென்றுளொன் றேபின் றொடர்தலுமா
டிதழைக் குந்தமி ழாழ்வார் குருகைவெற் பானுன்வஞ்சிக்
டிதழைக் கக்குறைத் தான்வேல்கைக் கொண்டிணைக் கொம்பினையே.

தலைமகள் வேற்றுமைகண்டு நற்றாய்செவிலியை வினாதல்.

செழுங்காந்த ளங்கைக் குரவார் குழற்சிறு முல்லைமுகை
யொழுங்காங் குறுநகைச் செந்தா மரைமுகந் தோடரிமைக்
கொழுங்காவி யங்கண் மடப்பாவை மாறன் குருகைவெற்பி
லழுங்கா வுளங்கவல் காரணங் கூறென தாரணங்கே. (௯௩௧)

செவிலிநற்றாய்க்கு முன்னிலைமொழியா லறத்தொடுநிற்றல்.

வரும்பாவை மென்பிடி யானடை யோடுண்கண் மான்விரும்பி
விரும்பாத வந்நடைக் கைமானும் மானும் வினாவிநட்பாய்ச்
சுரும்பார் வகுளப் பிரான்குரு கூரிலுன் றோகைகொங்கை
யரும்பா முனம்விரித் தான்காம நோயையொ ராடவனே. (௯௪௨)

நற்றாயறத்தொடு நிற்றலும்வரும்.

உருவும் பிறப்புங் குடிமையு மாண்மையு முண்ணிறையுந்
திருவும் பிராயமு ஞானமு மூழன்புஞ் சீருளு
மருவுந் தலைவர்நம் மாழ்வார் குருகையுள் வஞ்சிதன்னைப்
பொருவுந் திறத்தி னிறைந்தவர்க் காக்குமெம் பூவையையே. ()

உடன்போக்கு.

பாங்கிதலைவற்குடன்போக்குணர்த்தல்.

இருபொன் மலையை நிகரா முலைவிலைக் கெந்தையர்தா
மொருபொன் மலைதர வேபொருந் தார்குரு கூர்வகுளந்
தருபொன் மலையிணைப் போற்புயத் தான்வெற்ப தாமரைமேல்
வருபொன் மலைவிலுன் னூர்கொடு போய்ச்செய் மணவினையே. ()

தலைமகன் மறுத்தல்.

சுனக்குங் குமமுலை யாய்வன்மை யாற்பல கானடந்தே
யெனக்குஞ் செலநெஞ்ச மஞ்சுமந் தோமெல் லியற்குயிரா
முனக்குந் தெளிவில்லை யோமாறன் வாழ்குரு கூர்மடந்தை
தனக்குஞ் சரணம் பொறுக்குங்கொல் லோசெந் தழற்சுரமே. ()

பாங்கியுடன்படுத்தல்.

கொந்தைக் குடைந்தளி யார்மகிழ் மாறன் குருகையர
விந்தைக்கு மிக்க வெழிலாள் பதத்துக்கு மெய்க்குமலா
ரிந்தைக் குமுதச்செவ் வாயா ரலரென்ன நீள்செவிக்குஞ்
சிந்தைக்கு மேசுடு மோவைய நீயஞ்சுந் திச்சுரமே. (கூசக)

தலைவன் போக்குடன்படுத்தல்.

கொதிக்கின்ற செந்தழற் கானூ டிவளடிக் கோகனகம்
பதிக்கின்ற போதெப் படிபடு மோபரி சுத்தர்நித்தந்
துதிக்கின்ற மாறன் குருகூரென் னெஞ்சின்று தூயபொன்போன்
மதிக்கின்ற மாதை யுடன்கொடு போக மதிக்கின்றதே. (கூசஎ)

பாங்கி தலைவிக்குடன்போக்குணர்த்தல்.

ஊருக் கிணறும் பறவாப் புறவு மொருதளிரு
நாருத் தருவுங்கை செய்யாத பாலையு ஞானமுத்திப்
பேருத் தமிழ்செய் தவன்குரு கூர்மடப் பேதைவனத்
தேருத் திருவறி வாளோவென் றூரன்ப ரெண்ணமென்னே. ( )

தலைவி நாணழிபிரங்கல்.

அன்போ விறைவ ருடன்போக வாவென் றழைக்குமலர்
வன்போ வுடன்றள்ளு மாணுநுந் தாம வகுளமணி
நன்போதன் வாழ்குரு கூர்மட வார்குண நான்கினுநாண்
முன்போகு மேயன்பர் பின்போக நானென்னின் மொய்குழலே.

கற்புமேம்பாடு பாங்கிகழறல்.

இல்வாழ்வு வாழ்க்கைத் துணையுள்ள தாமித் துணையும்பொற்பாம்
நல்வாழ்க்கைப் பெண்மைய தாம்பெண்மை தானுமுன் றுண்பெற்
[றதாம்
வெல்வாழ்வு நாணுங்கற் புற்றது வேயெனில் வீறன்றமிழ்ச்
சொல்வாழ் குருகைப்பொன் னேகற்பன் றோமிகத் தூயதுவே. ( )

தலைவியொருப்பட்டெழுதல்.

அழலும் பரலும் பொடியுமொன் றுக வலகைவெண்டேர்
சுழலுங் கடுநெறி தானுமஞ் சேன்சுக முங்குயிலுங்
குழலும் பொருவுஞ்சொல் லாய்மகிழ் மாறன் குருகைவெற்பர்
நிழலுந் தனையுங் குளிர்ந்தே யுவகை நிறைவிக்குமே. (கூருக)

சுரத்தியலுணர்த்தல்.

மெலியார் தனியர் தமதாம் பெருமையை வெய்யசெல்வ
வலியார் துணைய ரிடையே தடுப்பவு மானம்விடாக்

கலியா ரவர்மனம் போற்சுடும் பாலை கடப்பதெவ்வா
றொலியா ரணத்தமிழ்ப் பெம்மான் குருகையி லொண்ணுதலே. ()

பாங்கி சுரத்திய லுணர்த்தழித்தலைவி சொல்லல்.

விழியுஞ் சிவக்க முகமுங் கறுத்திதழ் மென்றுநம்மோய்
மொழியுங் குறிப்பு மயலார் முகமுகந் தோறுநகை
பொழியும் பழிப்பும் பொறுதவென் னெஞ்சம் பொறுக்குமெந்த
வழியுந் திருமகிழ்த் தாரான் குருகையெம் மன்பினரே. (௬௫௩)

தலைவி யொருப்பட்டெழுந்தது.

பாங்கிதலைவற் குணர்த்தலும்வரும்.

முன்கை யடைகொண்டு சாலினட் டாருடன் மொய்குழனீ
பின்கை யடையெனச் செல்வாயென் றுள்பெரு நான்மறைபோ
னன்கை யடைதமிழ்க் கோமான் குருகைத்தன் னுகணவா
யுன்கை யடையென்றென் பாலளித் தாள்வெற்ப வொண்டொடியே.

கையடைகொடுத்தல்.

அங்கத் தெழுந்த மதயானை யம்மருங் காய்நெருங்குஞ்
சிங்கத்தை நோக்க முகங்கவிழ்ந் தாலுந்தெண் ணீர்க்கடஞ்சூழ்
வங்கக் கடலினைப் போல்குரு கூர்மகிழ் மாறன்வெற்பா
தங்கத் திருவுக்கிந் நாள்போற் கருணை சுரந்தருளே. (௬௫௫)

வைகிருள்விடுத்தல்.

முன்னே யிருவருஞ் சென்றருள் வீர்மலர் மொய்குழலுன்
பின்னே சுவடெறிந் தேவரு கேன்பெருந் தேர்த்திருநான்
மன்னோர் திகழ்குரு கூரய லாரலர் வாய்குவிப்பித்
தின்னே மனமிடை யாதிடை யாமத் தினிடைந்தே. (௬௫௬)

அவன்சுரத்துய்த்தல்.

நன்னிழன் முத்த நகைநங்கை காண நடந்துபுளி
யின்னிழ லூடுசென் றுன்குரு கூர்வெற்பி லேந்திழையாய்
மொய்ந்நிழ லாமலர்ச் சோலையு மாறு முழுவதுமென்
மெய்ந்நிழ லென்றெண்ணி யேநடப் பாய்மெல்ல மெல்லெனவே.

தலைவன்றலைவி யசைவறிந்திருத்தல்.

அணிகொண்ட வொண்கிண் கிணிகொண்ட தாமுன் னடியுள்ளுங்
[கிண்
கிணிகொண்ட தாய்கொப் புளங்கொண்ட நோவைக் கிளருமை
[வாய்ப்

பணிகொண்ட சேடப் புளியார் குருகைப்பைங் காவிருந்து
தணிகொண்ட லாங்குழ லாய்சுழ லாதுன் றனிநெஞ்சமே.(௬௫௮)

உவந்தலர்சூட்டி யுண்மகிழ்ந்துரைத்தல்.

பன்னூறு நான்செய்த மாதவத் தின்பய னாங்குருகை
நன்னாள முண்டக வாசனத் தான்வெற்பி னிளமா
னன்னாள் குழற்கு மலர்சூட்டி வைத்த தருஞ்சுரஞ்சே
றிந்நாளுங் கூடிய முன்னாளைப் போற்றந்த தின்பத்தையே. (௬௫௯)

கண்டோரயிர்த்தல்.

தீரிற் பொருந்துவர் வெற்பிற் பொருந்துவர் நீண்டபொன்னாட்
டேரிற் பொருந்துவர் தேவர்மின் னார்பத்த ரீண்டுகுரு
கூரிற் பொருந்துநம் மாழ்வார் சிலம்பனுங் கோதையுமிப்
பாரிற் பிறந்தவ ரோபிற ரோமிகும் பான்மையரே. (௬௬௦)

கண்டோர்மகிழ்தலும்வரும்

பண்பெற்ற செந்தமி ழாழ்வார் குருகைப் பனிவரைநங்
கண்பெற்ற தாற்பயன் பெற்றேமிப் போது கனலைப்பெற்று
மண்பெற்ற பாலை நடப்பாமிம் மன்னன் வனப்புமிந்தப்
பெண்பெற்ற கோலமுங் காணப்பெற் றேகளி பெற்றனமே. ()

கண்டோர் காதலின்விலக்கல்.

இப்பாலை யெண்ணிற் கருப்பாலை யாகில மீண்டகன்ற
வப்பாலை வெப்ப நெருப்பா லய்மொக்கு மந்தமிழா
லெப்பாலை யுஞ்செய்த வாழ்வார் குருகை யிறைவவங்காம்
வெப்பாலை யோவும்மை நீக்கோமெம் மூரில் விருந்துண்ணுமே. ()

கண்டோர் மன்பதியணிமைசாற்றல்.

உருச்சங்க நாணு மிடற்றூறு நீபு முயர்ந்தெழுமித்
தருச்சங்கக் கான்கடந் தாலெதிர் தோன்றுஞ் சடாரியெங்கள்
குருச்சங்க வாவிக் குருகூரான் றெப்பக் குளக்கரையுந்
திருச்சங் கணித்துறை யுந்திரு வீதியுந் தேர்களுமே. (௬௬௩)

தலைவன் றன்பதி யணிமைகூறல்.

சொரிகின்ற பூந்தண் புளியது வாமதிள் சூழ்ந்தொருபாற்
றெரிகின் றதுபொற் சிகரங்கண் டாய்திரு மால்புகழே
விரிகின்ற செஞ்சொற் றிருமகிழ் மாலை விமலனையே
புரிகின்ற கீர்த்திக் குருகூரைக் காண்பாய் பொலங்கொடியே. ()

தன்பதியடைந்தமை தலைவிக்குணர்த்தல்.

பாதவத் தின்கிளி தந்தவெங் காலுமென் பாங்குவந்த
மாதவத் தின்பய னென்றே தொழுதெழு வல்லியன்னாய்
மோதவத் தீன ருருக்குரு கூரிது முத்திரைக்கை
யாதவத் தின்னுரு வான்கோயில் கோபுர மாமிவையே. (௯௬௫)

கற்பொடு புணர்ந்தகவ்வை.

ஒருசார் வரைந்துகோடல்.

குலனெதிர்கோடல்.

நடிக்குங் களிமயி லேசட கோபன்சொ னுண்மறைத்தேன்
வடிக்குங் குருகையெம் மாளிகைக் கேவந்து வாழ்கமலர்
முடிக்குந் தரங்கத் துப் பார்க்குங் கயலின மூண்டெழுந்து
பிடிக்குங் கமலத்துப் பாய்புன லூரெம் பிரானுடனே. (௯௬௬)

கொண்டகம்புகுதல்.

கழையேந்து வேளன்ன மெய்யேந்து பொற்புள்ள காரியன்பா
முழையேந்து வாட்கண்ணி யார்நங்கை யூலக னெண்குருகூ
ரிழையேந்து வார்கொங்கை மானார்கள் வாழ்கின்ற விற்செறித்தார்
மழையேந்து மின்னென்ன மாமாதி னோடின்ப மன்னனையே. ()

கோலங்காண்டல்.

மைக்கோல வாள்விழிப் பொன்னையு மன்னையு மாட்சிபெற
வெக்கோல முஞ்செய்து வந்தன மேவலத் தேர்ந்தியசெங்
கைக்கோல முத்திரை யார்குரு கூரிலெங் கண்களித்த
வக்கோலம் யாவு மிவர்க்கொக்குங் கோலங்க ளாயினவே. ()

கொடுப்பக்கோடல்.

நடுப்பத்திச் சித்தத் தவத்துறைச் சீரியர் நற்செவிவாய்
மடுப்பச் சுவைத்தமிழ் செய்தான் குருகை மடப்பிடியை
யடுப்பக் களித்துற்ற சுற்றத் தவர்க்கு ளருட்குரவர்
கொடுப்பச் சுரும்பிரைக் குந்தாமக் கொற்றவன் கொண்டனனே.

மணந்தவாணிதனைக்கண்டோர்மகிழ்தல்.

மின்னன்ன நுண்ணிடைப் பண்ணன்ன தண்ணருண் மென்மொழிவாண்
பொன்னன்ன மேனிநம் மாறன்பெண் கோலமும் பொங்குமிணைக்
கன்னன்ன திண்புயன் கோலமுங் கண்டு களித்ததுழாய்
மன்னன்ன ஞானப் பிரான்குரு கூரெம் மலர்க்கண்களே. (௯௭0)

அருந்ததிகாண்டல்.

முருகூர் தடத்தி னளியார வாரஞ்செய் மொய்பொழில்சூழ்
குருகூர் வகுளப் பிரான்வரை வாய்க்குழை யூடுருவி
வருகூ ரயில்விழி யுந்நீயுங் காண்வட மீனயலோர்
பொருகூர்வை வேலன்ன லேயருள் கூர்கவிப் பூமியிலே. (௯௱௧)

அருமறைச் சடங்குக்கமைத்த தருப்பையை மருமலர்த் தாரோன்
மனத்துறநகுதல்.

நுழைகின்ற கார்முழங் குஞ்சோலை சூழ்ந்தவின் ணோர்குழுவும்
விழைகின்ற தென்குரு கூர்மாறன் மால்வரை மென்குதலை
குழைகின்ற நூலிடைக் கொம்பாரக் கொங்கைக் குவட்டையண்மித்
தழைகின்ற வாசைக் கடலைப்புல் லோபின் றடைசெய்வதே. ()

தலைவியொடு கூறல்.

மென்னுண மேருவை நம்மாசை வெள்ளம் விழுங்கினதா
மிந்நாண் முயங்கத் தகாதபெண் ணேநங்கை யென்னுமன்ன
மன்னு ளுதவும் பிரான்குரு கூருனை யாக்கினர்காண்
முந்நாளுங் கந்திரு வன்றீக் கதிரென்னு மூவர்க்குமே. (௯௱௩)

கையடை கொடுத்தலும்வரும்.

பூயுங் குணத்தை யிடைக்கிந்து விங்கிப் பணைமுலைகீழ்
சாயுந் திறத்தை யிடைதர வாங்கினுந் தண்ணிலஞ்சி
தோயும் புயத்தன் குருகூ ரடருச் தொடரிவெற்பா
நீயுந் தெரிவையு மொற்றுமை யாக நினைந்தருளே. (௯௱௪)

கற்பொடு புணர்ந்தகவ்வை.

செவிலி பாங்கியொடுசாவல்.

அன்னையு மையனு நீயென்று போற்று மடியரையுந்
தன்னையும் வேறென்றெண் ணுதருண் மாறன் றமிழ்க்குருகூர்
மின்னையு நூலையும் போலிடை யாயெங்கன் மேயினளோ
வென்னையு நின்னையு மன்னையு நீத்த விளங்கொடியே. (௯௱௫)

பாங்கியறத்தொடுநிற்றல்.

வரையுஞ் செயல்சொல்லி வந்தா ரிலங்கிய மாடவட
வரையும் பொருவுங் கொடையுங்கொள் ளாது மறுத்துநமர்
வரையும் படிசொன்ன தாற்குரு கூர்மகிழ் மாறன்வெற்பில்
வரையுங் கரும்பு நிகர்தோளி போயினன் மன்னன்பின்னே. ()

இனையலென்போர்க் கெதிரழிந்தமொழிதல்.

சேரு திரங்கின் மயக்கம் பிணிவந்து சேருமொல்லை
மாறுது பின்னெனத் தேற்றுகின் றீர்முன் வளர்த்தெடுத்துச்
சீறுத கிள்ளையு மன்னமு மன்னமுந் தேடிப்பொன்னு
லாறுத மாறன் குருகூரி னுனெங்க ளாற்றுவனே. (கூஎஎ)

செவிலிதன்னறிவின்மை தன்னைநொந்துரைத்தல்.

முத்தெடுத் தாள்பர லானதென் முள்வெயின் முன்றிலிற்சால்
வைத்தெடுத் தாள்சுர மீதேயென் முள்கன்னி மார்க்குக்கன்னி
யொத்தெடுத் தாந்துணை யென்றுளெம் மாற னுயர்குருகூர்
கொத்தெடுத் தார்குழ லாளெண்ணம் யான்முன் குறித்திலனே.

செவிலியறத்தொடு நிற்றல்.

தாய்வழி யோடிய கன்றென்ப தன்றியுன் றையலச்சம்
போய்வழி போமவன் பின்வழி போயினள் புன்மைச்சென்மங்
காய்வழி காட்டுந் தமிழோன் குருகைக் கனங்குழையா
யாய்வழி யாசைகொண் டார்க்கறி வேயறி யாதனவே (கூஎசு)

நற்றாய்தானேயிரங்கலும்வரும்.

மெய்யும் வெதும்புஞ்சொன் னுவுங் குழறுமண் மீதுதுழாய்க்
கையு மயர்ந்து தளருமந் தோகளி யாரளியார்
கொய்யும் வகுளப் பிரான்குரு கூரெம்பொற் கொம்புவெம்மை
செய்யும் வனஞ்சென் றதைநினை தோறுந் திகைக்குநெஞ்சே. ()

பாங்கியொடுபுலம்பல்.

வஞ்சித்து நெஞ்சங்கொண் டேன்சுரம் போக்கினை வாய்ந்தகமர்
வஞ்சிக்கு நெஞ்சியன் பாலென்றக் கான்மகிழ்க் கோன்குருகூர்
வஞ்சிக் கடையுரிச் சீர்போலெழுந்த வனமுலையாய்
வஞ்சிக் கிறைவன் படைநுதன் மாதை மணஞ்செய்வரே. (கூஅக)

பாங்கியொடுநற்றாயழுங்கல்.

மின்னுள்ள தென்னு மிடையாளைக் கான்விடுத் தாய்தரித்த
வென்னுள் ளமுமவ ளேகின வுள்ளமு மேகச்செய்தான்
றன்னுள் ளமுமன்றெம் மாழ்வார் குருகைத் தடஞ்சிலம்பி
னின்னுள்ள மேவலி தென்போ லிரங்கலென் னீயுமன்றே. (கூஅஉ)

இதுவுமது.

வெண்பாற்குங் காப்புண்ணும் பூவைக்கு நட்பென்ன மேவுகின்ற
பண்பாற் பசுங்கிள்ளை யைக்கான் விடுத்தனை பைம்புளிக்கீழ்த்

தண்பாற் கரன்குரு கூர்வரை வாயத் தளிரியலின்
னண்பாற் கலங்கி யெமைப்போல நீயு நடுங்குவதே. (௩அ௩)

பாங்கியர் தம்மொடுபுலம்பல்.

எடுக்கின்ற பூவுந் தொடுக்கின்ற தாரு மினிவிளையாட்
டடுக்கின்ற சிற்றிலுஞ் சேரினி யாரெவ ராகுலமே
கொடுக்கின்ற வெஞ்சுரஞ் செல்போது மாறன் குருகைமின்னைத்
தடுக்கின் றதுதப்பி னீர்பாங்கி மீர்மெய் தளர்ந்தனிரே. (௩அச)

அயலார்தம்மொடுபுலம்பல்.

பெற்றவ ருக்கன் றிப் பிள்ளை யருமை பெருதொழிந்த
மற்றவ ருக்குத் தெரியுங்கொல் லோதிரு மாலைத்தொழக்
கற்றவ ருக்கன் குருகூரென் மாமகள் கானஞ்செல்ல
வுற்றவ ருத்த மயலார் மனத்தி லுறுவதன்றே. (௩அரு)

பயிலிடந்தன்னொடு புலம்பல்.

பாவே றியதமிழ்க் கோமான் குருகைப் பனிவரைப்பூங்
காவே யருவித் தடந்துறை யேசிற்றில் காண்மணலே
பூவே யுதிர்கின்ற மாதவி யேமகள் போனதெங்கோ
நாவேயில் லாதுறை வீர்விடை கூற நயந்திலிரே. (௩அசா)

இதுவுமது.

பூணின் னிறைகொங்கை யாளையன் னூன்கொடு போகவஞ்சிப்
பேணி யியலும் பயிலிடஞ் சேர்க்கவென் பேதைவர
நாணி யொழித்துநில் லாளோ மகிழ்த்தொடை நம்பிமுத்திக்
காணியன் னிள்குரு கூர்ச்சோலைக் கோட்டினங் காட்டிமினே. ()

நிமித்தம் போற்றல்.

ஆயச ஆனு முடும்பூனு நெய்யுஞ் செறிந்தசெந்நெற்
பாயசம் பண்ணிப் பலிதரு வேனென்றும் பத்தர்கையின்
மேயசந் தானநம் மாழ்வார் குருகைமன் மேனடந்து
வாயச மேகரை வாய்கரை வாயென் மயில்வரவே. (௩அஅ)

சுடரோடிரந்து கொண்டுறுத்தலும் வரும்.

களியார்க்கு வஞ்சக் கயவர்க்கெட் டாது கருத்திலன்பா
மெளியார்க் கிரங்கிப் புரக்கின்ற மாற னெழிற்குருகூ
ரளியார்க்கும் பூங்குழல் கான்கடந் தார்புகு மத்துணையுந்
துளியார்க்கு மங்குல் கொடுபோதி வாய்வெஞ் சுடரவனே. (௩அக)

சுரந்தணிவித்தல்.

ஊறுத யாழ்ங்கிண றும்பொய்கை போற்புன லூறுகதி
யாறுத கன்னில முங்குளிர் பூவனை யாகுகமுன்
மாறுத காடுந் தொடுங்குடக் காய்மர மல்குகபொய்
கூறுத மாறன் குருகூர்மின் போன கொடுஞ்சுரத்தே. (௧௧0)

மென்மைத்தன்மைக்கிரங்கல்.

செம்பஞ்சு மென்குழம் பிற்பிழம் பேறினுஞ் செம்மலர்க்கா
லம்பஞ்சு மெத்தை விடாதொரு காலுமென் னங்கைபடக்
கொம்பஞ்சு மேனி சிவப்பாகு மாறன் குருகைவெற்பிற்
பம்பஞ்சில் லோதி நடந்தெவ் வாறழற் பாலையிலே. (௧௧௧)

இளமைத்தன்மைக் குளமெலிந்திரங்கல்.

பேதைப்பெண் ணார்மதி பெற்றன ளோமுற் பெதும்பையர்சொன்
மேதைப் புலங்கற் றறிந்தன ளோவிரை யார்வகுளப்
போதைப் புனைந்த பிரான்குரு கூரன் புனக்கிரிவாய்ப்
பாதைச் சுரத்திலெவ் வாறுசென் றாளென் பசுங்கிளியே. (௧௧௨)

அச்சத்தன்மைக் கச்சமுற்றிரங்கல்.

பூவென்ற வாய்சுட வுண்ணாத பாலையும் பூச்சியினி
வாவென் றழைத்திட வூட்டா மனுமுண்ணு மால்வகுளத்
தேவென்று போற்றுங் குருகூரன் மால்வரைச் சீறுபுலி
காவென்று செல்லவென் மான்வல்ல தோதொடர் கள்வனையே.

கண்டோரிரக்கம்.

முன்னோர் தமிழ்க்குரு கூர்மாறன் வெற்பெங்கு மூர்ச்சிக்கின்ற
தென்னோ கழங்குபந் தென்செய்த தோவிள மைப்பருவ
மின்னோவு கூரப் பிரிந்தன ளோவிளம் பத்தகுமோ
வன்னோநும் வாய்கொண்டு கேட்டெங்க ணெஞ்சயர்ந் தஞ்சியதே.

செவிலி யாற்றுத்தாயைத் தேற்றல்.

கொடியார் றணுகிடைப் பூங்கொம்பைத் தேடிக் கொணர்ந்துனது
மடியார வேதரு வேலுரு கேல்வண் குருகைமகிழ்
நெடியார் தமிழ்க்குப் புளியிலே யூடுகின் றன்கொம்பிலோர்
பொடியாரு மேயறி வார்தவி யேலிப் புவிமுற்றுமே. (௧௧௫)

ஆற்றிடைமுக்கோற்பகவரைவினாதல்.

முந்நூ லணிந்துகை முக்கோல் பிடித்துமுந் நீருலகிற்
றென்னூன்முப் போது முணர்ந்தேமுக் காலமுஞ் சூழ்ந்தறிவீர்

மெய்ந்நூலென் முத்திரைக் கையான் குருகை விட்டலபின்னே
சின்னூ லிடைமுத் தமிழ்போன் மொழிவனஞ் சென்றனளே. (௯௯)

மிக்கோரேதுக்காட்டல்.

ஆவி தருந்தழல் வெஞ்சுரத் தூடய லானுடனெங்
காவி தருங்கண்ணி சென்றுளென் றுள்ளங் கலங்கலம்பொற்
றாவி தருமன்ன வாகனன் பாதந் தொழுங்குருகூர்
வாவி தருமலர்ப் பூந்தேன்கொண் டேகு மதுகரமே. (௯௯௯)

எயிற்றியொடு புலம்பல்.

அறத்தியல் சொற்குரு கூர்மாறன் மால்வரை யத்தழைபூண்
மறத்தியர் பெற்ற குலக்கொழுந் தேகந்தன் வள்ளியென்னுங்
குறத்தியர் பொன்னைக் கவர்ந்தது போலுங் குறைபரத்திப்
புறத்திய லாஞ்சிற் றிடைச்சியொ டோரண்ணல் போயினனே.

இதுவுமது.

கைக்கொண்ட வம்புஞ் சிலையுந் துடியுங்கண் ணெற்றிவிடை
மெய்க்கொண்ட வேட்டுவர் பொற்கொடி யேகன்னல் வேலியெல் [லாஞ்
செய்க்கொண்ட வால்வளை யூர்குரு கூர்மகிழ்ச் செல்வன்வெற்பின்
மைக்கொண்ட லோதி நடந்தன ளோவொரு மன்னன்பின்னே. ()

குரவொடுபுலம்பல்.

சேவையைப் பெற்றுத் தனைத்தொழு வார்க்கரு டேசிகன்சொற்
கோவையைப் பெற்ற குருகூர்மன் னன்கொடு போகையிலே
பூவையைப் பெற்ற பொழிற்குர வேபுறம் போதல்செய்யாப்
பாவையைப் பெற்றனை யெம்பாவை நிற்கப் பணித்திலையே. (௪௦௦)

கள்ளியம்புறவுடனுள்ளியசாவலும்வரும்.

அன்புற வேதலை புக்கோன்மெய் முற்று மரியச்செய்த
புன்புற வேசெய்த தன்மையன் றேவப் புருவின்வழி
பின்புற வேபிறந் தாயோ வகுளப் பிரான்குருகூ
ரின்புற வாழ்பொன்னை மீட்டா யிலைக்கள்ளி யின்புறவே. (௪௦௧)

சுவடுகண்டிரங்கல்.

சிதையா தமுந்து மிறையோன் சுவடவை சேர்ந்தநிலம்
புதையாத மெல்லிய ளாள்சுவ டாமிவை பூமகிழ்த்தா
ருதையாத வன்செந் தமிழ்க்குரு கூர னுயர்வரைவாய்த்
ததையாது சிந்திய கான்வர் போன சுவடிவையே. (௪௦௨)

கலந்துடன்வருவோர்க் கண்டுகேட்டல்.

என்மாது நீயென்று மெல்மா திரையுன் னிறையென்றுநான்
முன்மா தயலி னிறைக்கா வொதுங்கினன் முத்திரைக்கை
நன்மா தவன்குரு கூர்வரை வாயவ னன்னியெதிர்
பொன்மாது கண்டனி ரோவொரு கோவையும் பூவையுமே. ([illegible])

அவர்புலம்பத்தேற்றல்.

என்கண் ணெதிர்கண்ட மன்னறு மென்கண் ணினையபினைய
பின்கண் ணெதிர்கண்ட பாவையு நாங்கண்ட வேலைக்கிப்போ
துன்கண் ணெதிர்ப்படு மன்மைய சோகுரு கூர்ப்புலவன்
றன்கண் ணருள்பெறத் தோய்வார்வெண் சங்கணித் தண்டுறையே.

செவிலிபுதல்வியைக் காணாதவலைகூர்தல்.

தேடித் தருவனென் றுயிழைத் தாயுடன் செப்பிவந்தேன்
வாடித் திரக்கண்டி லேனென்று மீண்டெங்ஙன் வாய்திறப்பேன்
கூடித் தருமலர் வீழ்வாரைக் காணவுங் கூசவன்றத்
தாழித் தருந்தமி ழான்குரு கூரிலெம் பாவையையே (௪௦௫)

தலைவிசென்றமை செவிலி தாய்க்குணர்த்தல்.

விதியா ரணத்தமிழ்ச் செண்பக மாறன் வியன்குருகை
பதியார் அறைவன்றன் னூர்கொடு போயின ளங்கைமா
மதியார் தனைசமர் காணும லெறி வல்லினர்ந்த
நதியாரை யென்றுள் ளுயிர்போலத் தேடியுங் கண்டிலனே. ([illegible])

நற்றாயுஞ்செவிலியுங்கடவுட்பராவுதலும்வரும்.

காராண்மை யாவெண்ண செய்தாலுந் தெய்வச் சகாயமின்றி
வாராண்மை யார்க்குங்கை கூடாது காரியம் வண்டமிழால்
வேளாண்மை தீர்த்த பிரான்குரு கூர்வரை வேலவரின்
நீராண்மை யான்மின்னை மீட்டருள் வாய்பவி நோர்த்தனமே. ( )

மீட்சி.

தலைவன்றன்னூர் சார்ந்தமைசாற்றல்

தேன்காவி யங்கனல் லாயுன்னை நான்முன்பு சேர்ந்தநம்மூர்ப்
பூங்காவில் வந்தனை செய்குன்றம் பார்த்தனை பொங்குதிரை
வான்காவி நோக்கினை நீள்வண்டல் கண்டனை மாமறைநூல்
ஓர்க்காவி யப்பெரு மான்குரு கூரின் றடைந்தருளே. ([illegible])

தலைவிமுன்செல்வோர் தம்மொடுதான்வரல்
பாங்கியர்க்குணர்த்திவிடுத்தல்.

நாடார் கலையும் பிணையுந் துணைவரக் காவலன்பொய்
கூடா நிழல்வரு வென்றே னிதுதன் முடிதொடுவோர்ச்
சேடாவ தாரத் திருப்புளி மாறன் திருக்குருகூர்
பாடா மறைகற் றுளிர்சொல்லு நீங்குமென் பாங்கியர்க்கே. [illegible]

ஆங்கவர்பாங்கியர்க்குணர்த்தல்.

செழுந்தே மலர்ப்பொய்கைக் காவுடு மூன்புசென் றெந்தகைதிந்
தெழுந்தோ மவர்வந் திருந்தார்முப் போதுந்தன் னிரடியைத்
தொழுந்தே வருக்கரு ளாழ்வார் குருகைச் சுரும்பிழுங்கள்
கொழுந்தேன் மொழியு மொழிபோ லினிய கொழுங்குறுமே. ( )

பாங்கியர் நற்றாய்க்குணர்த்தல்.

சொற்றவ ளுட்கொண் டருள்காரி மாறன் குருகையின்னைப்
பெற்றவ ணாட்பெற் றதுபொய்ம்மை யாகப் பிரிந்தவர்மீண்
டிற்றவி னாட்பெற்ற தேயுண்மை யாக்கு முவகையன்னே
மற்றவ ளுட்கு மலர்த்தார்க்குஞ் சொல்லும் வரைத்தல்லவே. ( )

நற்றாய்கேட்டவளுளங்கொள்வேலனைவினாதல்.

பாரக நீரகங் காரகம் பேரகம் பாடகமா
மூரக மாகப் புகழ்மலிந் மாற னுயர்குருகூ
ரீரக மார்கண நாருய்க்கு மோவெம நாருக்குமோ
பேரக வேலன போர்வேற்கண் ணுளேயப் பூபதியே. ([illegible])

தன்மனைவரைதல்

நற்றாய்மனையாசேட் [illegible] செவிலிவைபவினுதல்.

[illegible] பொருக்கண்டுன் [illegible] லுய்தன் மனைபுகு
[illegible] திருமண மெம் [illegible] யாகவினைக்கன்னான்
[illegible] புகழ்ச்ச திருநா [illegible] தமிழ்க்குருகூர்
[illegible] தருகின் முலையமே மாதை விருதுமே. ([illegible])

செவிலிக்கிறைவனைவரைத்தமையுணர்த்தல்.

இங்கே வரைத லமர்மறுத் தாரொன்ப தென்னைத்தம்மு
ரங்கே மணக்கொண் டலரொழித் [illegible]
செங்கே ழமலன் குருகூரன் [illegible]
[illegible] ( )

செவிலிநற்றாய்க்குணர்த்தல்.

தரையார் கொடுங்கதித் தூதர்சொன் னாரலர் தாரணியா
னுரையாதுன் மாதைத்தம் மூர்வரைந் தாரென் றெழுகுநறை
விரையார் வகுளப் பிரான்குரு கூரின்மின் னார்குழல்வண்
டிரையாது செண்பகஞ் சூடிய நாட ரிலங்கிழையே. (௪௧௫)

தலைவன்பாங்கிக்கு யான்வரைந்தமை நமர்க்கியம்புகென்றல்.

மருவொத்த பூங்குழ லாய்பல தானம் வழங்கிவிண்ணோர்
குருவொத்த சோதிட ரோதிடு நாளிற் குருகையன்பர்
தருவொத்த மாறர் சிறப்புச்செய் தேமணந் தான்கண்டதை
யருவொத்த நுண்ணிடை யாயன்னை மாருக் கறிக்கைபண்ணே. ()

பாங்கி தானதுமுன்னே சாற்றினேனென்றல்.

நீந்தார் கலியுல கம்போற்ற வேத நிறைந்ததமி
ழீந்தார் குருகையெம் மன்னைக்குக் கூறின னென்னைவிட்டுக்
காந்தார் மலர்க்கரி யாய்மணங் காட்டிக் கனவின்முல்லைப்
பூந்தார் புனைந்தவென் பொன்னுக்கு நீபொன் புனைந்ததுவே. ()

உடன்போக்கிடையீடு.

நீங்குங்கிழத்திபாங்கியர்தமக்குத் தன்செலவுணர்த்திவிடுத்தல்.

பொலிந்துநின் னுரைப் புகழ்ந்திருந் தார்மகிழ்ப் போதருண்
மலிந்துநின் னூர்குரு கூர்வரை வாய்மட வாரலரா
னலிந்துநின் னூரென நாணியொர் கேள்வன்பின் னான்செல்வது
மெலிந்துநின் னூர்வஞ்செய் பாங்கியர்க் கோதுமின் வேதியரே. ()

தலைவிதன்செல வீன்றாட்குணர்த்திவிடுத்தல்.

எய்யாது புன்பிழை செய்தாலு மன்பரென் பாரைவன்பு
செய்யாத மாறன் குருகையி லேசிறி யேனைப்பெற்று
னையாது தேறும் படியந்த னீருமை நான்றொழுதேன்
பொய்யாத சொல்லுந் தமியேனென் கேள்வன்பின் போவதுவே.

ஈன்றாட் கந்தணர்மொழிதல்.

ஏமானுங் கண்ணன்னை சேண்மேர்பொற் பூவிருந் தாளுமவள்
கோமானும் போலியைக் தாறுசென் றூர்குரு கூரெமக்கு
மாமானு மையனு மன்னையு மாமகிழ் மாறன்வெற்பிற்
பூமானு மானுங் கயன்மீனு மானுங்கட் பூவையுமே. (௪௨௰)

கண்டோர்இரங்கல்.

ஒருவ னொருத்தி யெனுமிவர் போம்வழி யொன்றுபலர்
வருவர் பகைத்துப் பலவழி யாய்த்தனை மன்னுமன்பா
லிருவருக் காயினி யார்தீதெப் பாரிங் கிவரைச்செய்ய
சொருபர் வகுளப் பிரானூர் குருகைச் சுரும்பிடத்தே. (௪௨௧)

நற்றாயறத்தொடுநிற்றலிற் றமர்பின்சேறலைத்
தலைவிகண்டுதலைவற்குணர்த்தல்.

பாரே நிறுத்தும் படைபடை காட்டப் பரப்பிநின்பாற்
போரே பொரவரு கின்று ரெனைப்பொரு தந்தமரோ
வேரே பறிகள்வ ரோமகிழ் மாற னெழிற்குருகூ
ராரே யறிகின்றி லேன்சிலம் பாவிது வாய்தருளே. (௪௨௨)

தலைமகளைத்தலைமகன்விடுத்தல்.

மற்று ரெனினுமென் னோர்களை யாலுயிர் வாங்குவனுன்
னுற்றாரன் றேகொலை செய்யத் தகார்நறை யூர்வகுள
நற்றார் புனைபெரு மான்குரு காபுரி நன்னுதலாய்
சுற்றார் தடங்கிரி வாய்மறை வேலிந்தச் சோலையிலே. (௪௨௩)

தமருடன்செல்பவள வன்புறநோக்கிக்கவன்றரற்றல்.

அறஞ்சாலி யார்நல் லறஞ்சாலி யார்கமு காடவியின்
புறஞ்சாலி சூழுங் குருகூர்ப் பராங்குசன் பொற்கிரிவாய்
மறஞ்சாலு மென்னைய ரென்னையர் தாமடி யாதருளுந்
திறஞ்சாலு மன்பர் மறைவா னெருங்குமித் தேம்புனமே. (௪௨௪)

வரைதல்.

ஊர்நிலைமை தோழியுரைத்தலும்வரும்.

இட்டந் தகல விருக்கப் பசலுற வெய்துமன்றிக்
கிட்டச் சென் றுன்முட்ட வெம்பகை யாமென்ப கேழ்கிளர்ந்த
வட்டக் கனதன மானேநம் மாறன் வருகுருகூர்
விட்டப் புறஞ்சென்ற நின்னையன் பாகி விளைத்தந்ததே. (௪௨௫)

உடன்போக்கிடையீடேற்றவருதலும்வரும்.

பேரான சக்கர பாணி மரபிற் பிறந்துவெற்றிச்
சீரான சக்கர பாணிக்கன் பானவன் றென்குருகூ
ரேரான மானுடன் போக்கிடை யீடேற் றிவையந்ததன
ரான நல்லவ ரான்வரைந் தான்புன லூரனுமே. (௪௨௬)

செவிலிநற்றாய்க்குமணநலங்காட்டுகென்றலும்வரும்.

நீங்கித் துயர்செய்த நாண்முத லாய்நின்னை யேநினைந்துள்
ளோங்கித் தளர்ந்தநற் றாய்முகம் பூரிக்க வெப்பொருளுந்
தாங்கித் தமிழ்செய்த வாழ்வார் குருகைத் தடங்கிரிவா
யோங்கிப் புனையுன் மணநலங் காட்டுமென் னொண்டொடியே. ()

அவ்வாறு வரைந்துழிக்கண்டோர்மகிழ்தல்,

மருக்கோல மாலை மகிழலங் காரன் மதிட்குருகூ
ருருக்கோல மாகிய பூமானு மானு முயர்ந்தபந்தர்த்
தருக்கோல நீழன் மணக்கோலம் பார்த்துத் தயரதன்சேய்
திருக்கோலங் கண்டவர் போலே பெருங்களி சேர்ந்தனமே. ()

கற்பியல்.

இல்வாழ்க்கை.

தலைவன் றலைவிமுன்பாங்கியைப்புகழ்தல்,

மன்னள னுத்தம யந்தியு மென்னுமவ் வண்ணமன்ன
மன்னவர் தம்மைப் புணர்த்தது போற்றமி ழாரணப்பாச்
சொன்ன பிரான்குரு கூரிலுன் பாங்கி துணைசெய்துநான்
முன்ன நினைத்த படியணங் கேபின் முடித்தனளே. (௪௨௯)

தலைவனைப்பாங்கிவாழ்த்தல்.

நாடிப் புணர்ந்தருண் மன்னரு முன்னர் நறுந்தெரியல்
சூடிக் கொடுத்தவ ளும்போல வாழி சுருதித்தமிழ்
பாடிப் புகழ்படைத் தார்குரு கூரெங்கள் பைங்கிளியுங்
கூடிக் குழைந்தட் குளிர்கின்ற நீயுமெங் கொற்றவனே. (௪௩0)

பாங்கிதலைவியை வரையுநாளளவும் வருந்தாதிருந்தமை
யுரையென்றல்.

அறியாத வல்ல லறியச்செய் தன்ப ரகன்றுழிமெய்
பிறியார் பிரிந்திலர் பின்னே பிதற்றும் பிணிக்குச்செம்பொன்
வறியாரெண் வள்ளல் வரைநாள் வருமட்டும் வஞ்சிநையாக்
குறியார் குணஞ்சொல் குருகூர்க் குரவன் குளிர்வெற்பிலே. ()

பெருமகளுரைத்தல்.

குருங்கா புரிமின் றிடையொற்றி லாக்குரு காபுரிக்கே
வருங்காரி மாறன் சுரும்பின்மின் னேவரை நாளளவும்

பெருங்காதல் கொண்டு மலர்பொறுத் தேனெம் பிரான்விரும்பிச்
சுருங்காவி யந்தொடர் நின்கதை தேற்றுந் தகுதிகொண்டே.

தலைவனைப்பாங்கி வரையுநாளளவும் நிலைபெறவாற்றிய
நிலைமை வினவல்.

முகத்தா மரையென்னுங் கோடாத திங்களின் மூரிமுத்தாஞ்
சகத்தா நிலவுக்குச் சிந்தைவண் டான சகோரம்பெற்றாய்
சுகத்தால் வரையுந் துணையுங் கரந்தபைந் தோகைக்கன்பா
மகத்தாய்நம் மாறன் குருகைவெற் பாவெங்ங னாற்றினையே. ()

மன்றன் மனைவரு செவிலிக்கிகுளையன்புற வுணர்த்தல்.

மன்னன் கனவலங் காரஞ்செய் வான்மட மானையந்த
வன்னம் பலதிருக் கோலங்கள் காணு மவனைமதிட்
சொன்னம் பொலிந்த குருகூரின் மாறன் கரும்பிலிவ
ரின்னன்பி னுக்கெல்லை யின்றாயன் னையின் றிணங்கினரே. (௪௱௪)

செவிலிக்குப்பாங்கி இல்வாழ்க்கை நன்றென்றறைதல்.

உடையாத நெஞ்சொடுஞ் செய்தான நீருல ராதகையு
மடையாத வாயிலு நல்விருந் தோடுண்ப தன்றித்தனி
கிடையாத நாளும்பெற் றில்வாழ்க்கை மிக்கதுன் கிள்ளையுந்தேந்
தொடையான் வகுளப் பிரான்குரு கூர்வரைத் தோன்றலுமே. ()

மணமனைசென்றுவந்த செவிலிபொற்றொடிக்கற்பிய
னற்றாய்க்குணர்த்தல்.

விண்டலத் தோர்கற்பு தாரண மாம்வட மீனினிமேன்
மண்டலத் தோர்கற்பு தாரண மாமுன் மகளிவளைக்
கண்டல வோமகிழ்க் கோமான் குருகைக் கனங்குழையாய்
குண்டல வாழ்க்கை யருந்ததி தானுடல் குன்றினளே. (௪௱௬)

நன்மனை வாழ்க்கைத் தன்மையுரைத்தல்.

பின்னே யுறங்கியு முன்னே விழித்தும் பெருந்தகைதன்
சொன்னேய மாகியு முண்டபின் னேமிச்சி லுய்த்துங்கொண்ட
மன்னே கடவு ளெனவே தொழுதுமுன் மானனையா
ளன்னேநம் மாறன் குருகூரில் வாழ்க்கைமிக் காயினளே. (௪௱௭)

செவிலிநற்றாய்க் கிருவர்காதலையு மறிவித்தல்.

நீங்காத சென்னியு மோர்பாலு நாவொடு நெஞ்சங்கையும்
பாங்காயுற் றார்க்கிவ ரன்புமுன் டோமன் பணைப்புயமும்

பூங்காரி கைக்கொங்கை யும்போல் விடாவகை புல்லுவவோ
வீங்காம மாறன் குருகையன் னேபண் டறிந்திலமே. (௪௩௮)

பரத்தையிற்பிரிவு.

காதலன் பிரிவுழிக்கண்டோர் புலவிக் கேதுவி தாமவ் விறைவிக்கென்றல்.

சேராப் புலவிசெய் யாதொழி யாள்வஞ்சி செம்மலுமெய்
வாராப் பனுவல்சொல் லாமலி ரான்மரு ளாப்புலமை
கூராச் சிறியர்க் கிரங்கிய மாறன் குருகைவெற்பன்
தீராப் பொதுப்பெண் டிரைத்துற வாமை தெளிந்திடிலே. (௪௩௯)

தனித்துழியிறைவி துனித்தழுதிரங்கல்.

கண்பிறந் தாரு மழைவெள்ளத் தாழ்ந்திருட் கங்குலின்வாய்
மண்பிறந் தார்களின் மாபாவி யாகி வருந்தியுள்ளத்
தெண்பிறந் தாரு முணரகம் மாற னெழிற்குருகூர்
பெண்பிறந் தார்களி லென்போல யாவர் பிறந்தவரே. (௪௪0)

அடிசிலமைத் திரங்கலும்வரும்.

எற்றுக வாரமு தாரா வமுதென் றெணிமகிழ்ந்தார்
போற்றுதென் னாரமு தாரா வமுதெனப் போந்துண்கிலார்
மாற்றுத சொற்றமிழ்க் கோமான் குருகை மகிணரென்னை
டாற்றுத வெம்பலின் வெம்பாம லாறுமென் னன்னமின்றே. ( )

அயனூட்டுப் பிரிவினிரங்கலும்வரும்.

அல்லூடு முன்வந்த மெய்நோவு வாசிக்கின் றுனதுவோ
வெல்லூடு மன்பர்திண் டேர்வரக் காண்கில னெல்வளர்ந்த
நெல்லூ டளிநெருண் டிலாங்குரு கூர்மகிழ் சித்தன்வெற்பில்
வில்லூடு வாளியைப் போலே யொளிருங்கண் மெல்லியலே. ( )

ஈங்கிது வென்னெனப்பாங்கிவினாதல்.

புணர்ந்தார் பிரியினு மில்லூ டினதறம் போற்றிடுசீ
தணந்தாரி னாடி யிரங்குவ தேதண்டூர் தாருமண்மேற்
கொணர்ந்தார் புகழைப் புகழ்மகிழ் மாறன் குருகைநன்னா
டுணர்ந்தாரல் லார்மனம் போல்வண்ண வார்குழ லொண்ணுதலே.

இறைமகன் புறத்தொழுக்கிறைமக ளுணர்த்தல்.

சீர்தாங்கு மார்ப னூரலோடு கட்டுண்ட சீர்த்திக்குக்கண்
ணீர்தாங்கு மன்பன் குருகூர்ச் சிலம்பி னெருங்குங்கொங்கை

வார்தாங்க வேங்கு மருங்குவி னெங்கை மையோதியன்பர்
சார்தாங்குந் தன்மை பொறுதேயென் னெஞ்சந் தளர்கின்றதே. ()

இதுவுமது.

யாற்றரு விப்புனன் மூழ்குங்கொல் யானைபல் யானைசுற்றுஞ்
சேற்றரு நீர்ச்சுனை வீழுஞ் சிலம்பர் சிலம்பெறிந்த
வேற்றருங் கண்மட வாயடி யாரன்றி விண்ணவரும்
போற்றரு மாறப் பிரான்குரு கூரெம் புரவலனே. (௪௪௫)

தலைவியைப் பாங்கிகழறல்.

செருவுங் களவும் பயில்விழி யாயிளஞ் செங்கதிரைப்
பொருவும் பிரான்குரு கூர்க்கேள்வர் குற்றம் புகல்வதென்னே
குருவுங் கணவனுந் தெய்வமு மின்னலைக் கூட்டினுந்தா
மருவும் படிதொழு வாரே பெருந்தன வாழ்க்கையரே. (௪௪௬)

செவ்வணியணிந்து சேடியைவிடுத்தலும்வரும்.

மொய்யா ளரியன்ன நண்பரிங் கேவரு முத்திரைச்செங்
கையாளன் வாழுங் குருகைநல்லாய்வள்ளைக் காதடரு
மையாளுங் கண்ணிசெந் தாமரை யேந்தும் வனப்புறுத்திச்
செய்யா ளெனும்படி யேவிடு சேடியைச் சேரியிலே. (௪௪௭)

அவ்வணியுழையர்கண் டழுங்கிக்கூறல்.

திவப்பா மணிநெடு மாடங்கள் சூழ நெருங்கிமுழுத்
தவப்பான்மை யார்புகழ் தென்குரு கூர்மகிழ்த் தாமன்வெற்பி
லுவப்பாகும் வெண்ணகைப் பைங்கொடி பூப்பகன் றுண்மறைந்து
சிவப்பாகு நோக்கம் வெளிக்காட்டுஞ் சேடிதன் செவ்வணியே.

பரத்தையர்கண்டுபழித்தல்.

சிரத்தா மரையினுந் தாமரைத் தாளிணை சேர்த்தடியா
ருரத்தா மரையினும் வாழ்மகிழ் மாற னுயர்குருகூ
புரத்தா மரைநறும் பொன்பூத் தவளென்று பூத்தவிவள்
கரத்தா மரையின்று காட்டுமென் றுமவள் கற்பியலே. (௪௪௯)

மன்னர்வரவினை வாயிலோர்மொழிதல்.

ஆடகக் குன்றன்ன திண்புய மாற னமர்குருகூர்ச்
சூடகச் செங்கரச் சேடிதன் செவ்வணி சூழ்ந்துவந்தா
ளாடகக் கோதையர் சொல்லிசை யில்ல நணுகினதாற்
பாடகச் சீறடி மெல்லியல் சீற்றம் படாதினியே. (௪௫0)

வரவுணர் பாங்கி யரிவைக்குணர்த்தல்.

குணிகண் டறிவரி தாஞ்சோகந் தீர்ந்தெதிர் கொண்டுசென்று
பணிகண்ட கண்கண் மனங்களி கூரப் பருதிச்செங்கேழ்
மணிகண்ட வண்ணன் குருகூருன் சேடி மருவியசெவ்
வணிகண்டு வந்த புனலூ ரனையென தாரணங்கே. (௪௫௧)

முதிராமென்முலை யெதிர்கொண்டுபணிதல்.

பிரிந்த பொழுதினிற் றுன்பட்ட துன்பத்தைப் பேதுறவு
புரிந்த விறைவர் பொருந்தச்செய் யாமற்புத் தாரமுதாய்
விரிந்த தமிழ்ப்பெரு மான்குரு கூர்வெற்பர் மேவவெதிர்
பரிந்ததென் னெஞ்சமென் றுளூடு மாறெங்ஙன் பைந்தொடியே.

புணர்ச்சியின் மகிழ்தல்.

திருமாளிகையென்னு முந்நீ ரகத்துள்ள சேக்கையென்னுந்
தருமா நலவங்க மேற்கொண்டு வேட்கைத் தனம்பரப்பிப்
பொருமா கலவித் துறைவாய்த் துவர்முத்தம் போதவுய்த்தார்
பெருமான் வகுளப் பிரான்குரு கூர்மன்னும் பேதையுமே. (௪௫௨)

உணர்த்தவுணராவூடல்.

மகப்பொறைகூர்ந்த வண்ணமுரைத்தலும்வரும்.

உதிக்கு மிளங்கதிர் போன்மேனி வெண்மதி யொத்ததுதேன்
கதிக்கு முகைக்கஞ்ச வண்டா மிளமுலைக் காம்புநல்லோர்
துதிக்கு மகிழ்ப்பெரு மான்குரு கூர்வஞ்சி சூலுறலாற்
பதிக்கும் வளர்மதிக் கீழ்மானை யொத்தன பார்வையுமே. (௪௫௩)

வெள்ளணியணிந்து விடுத்துழி தலைவன்வாயில் வேண்டல்.

மீறும் புலவி யழலூ டகப்பட்டு வெம்பும்பொன்னை
யாறும் படிதெளிந் தாற்றுகண் டாயரி வாசமெட்டு
நூறும் புகழ்ந்த பெருமான் குருகை நகர்வரிவண்
டேறுங் கருங்குழ லாயறி வாமொழி யின்னமுதே. (௪௫௪)

தலைவிநெய்யாடிய திருவைசாற்றல்.

பொலம்புரி மாடக் குருகா புரிமகிழ்ப் புங்கவன்பொற்
சிலம்புரி யாயுன் றிருவுள மேதுகொல் செப்புபயக்
குலம்புரி மாதவத் தாலுன் கனிமொழிக் கொம்புமுத்தம்
வலம்புரி யீன்றது போலீன் றனதிரு மைந்தனையே. (௪௫௫)

தலைமகன்றன் மனத்துவகைகூறல்.

பால்கொண்டு விம்மிய கொங்கையுஞ் செங்கைப் பசுங்குழவி
கால்கொண்ட வொக்கலை யும்பாலன் வாண்முகங் கண்டருளுஞ்
சேல்கொண்ட வாட்கண்ணு மாகநம் மாறன் திருக்குருகூர்
போல்கொண்ட லோதியைக் காண்டொறு மென்னுடல் பூரிக்குமே.

பாங்கிவாயில்வேண்டல்.

நின்னை மறந்து பிரிந்தாலு மன்பர்தன் னேயமைந்தன்
றன்னை மறந்திருக் கத்திரியாமற் றமிழ்க்குருகூர்ப்
பொன்னை மறந்தும் பிரியானைத் தேர்மகிழ்ப் போதன்வெற்பி
லென்னை மறந்து முனிவாய் வந்தார்சென் றிறைஞ்சுகவே. (௬௫௮)

தலைவியுணர்ந்து தலைவனொடுபுலத்தல்.

நீலக் கடலின் கரைகடந் தேறித் திலம்விலைகூர்
கூலத்திற் செல்லு மிருங்கழிச் சேர்ப்பமைக் கூர்விழிவேல்
போலத் திகழ்நங்கை யின்றுன் குருகைப் பொதுப்பெண்டிராஞ்
சீலத்தி னெங்கையர் சேரியி லேயின்னஞ் சேரியிலே. (௬௫௯)

பரத்தை தலைவனையிகழ்தல்.

விரியுந் தமிழ்க்குரு கூர்மாறன் வெற்பில் விளங்கிழைதான்
பிரியும் பொழுது பிரியப் பெறுதன்பு பேசிச்சினம்
புரியுங் கருத்தும் புரியா மறப்புந்தன் புத்திகொண்டு
தெரியும் படிவரு வான்புன லூரனெஞ் சேரியிலே. (௬௬௦)

தலைவியையிகழ்தல்.

பூணாத செம்மணி யாமகிழ் மாறன் புகழ்க்குருகூர்க்
கோணாத வாண்மதி போன்முகத் தாடன் குடிப்பிறப்பின்
மாணாது தன்னைப் புணர்வது வேண்டல் வசையென்றெண்ணி
நாணாதஞ் சாதெப் படிச்சிறி னுள்கொண்ட நண்பனையே. (௬௬௧)

பரத்தைதற்புகழ்தல்.

ஆறத் தகாவஞ்ச நண்பனை மாற னருட்குருகூர்ச்
சீறத் தகாத மனையாட்டி தானெங்கள் சேரிவரன்
மாறத் தகாத முனிவாறத் தாழவும் வாரலென்று
கூறத் தகாதென் மனமே பொறுமை குறித்ததுவே. (௬௬௨)

புனலாடியவழியூடல்.

உரைகண்ட செஞ்சொற் குருகூரின் மாற னுயர்தொடரி
வரைகண்ட தோண்மன்ன ரேபொது மாதர் வருதுணையாய்த்

திரைகண்ட் வாற்றுப் புதப்புன லாடித் திரிந்துபுறங்
கரைகண்ட நீர்கரை கண்டீர்கொல் லோவவர் காதற்குமே. ()

பாணனைப்பழித்தல்.

தாணை யுடைய வடித்தா ளுயிருண்ட சோதிபொற்று
ளாணை யுடைய பிரான்குரு கூரணங் கேயிணங்கும்
பூணை யுடைய வெழிற்குறை யாக்கன்பர் பூண்டநம்பாம்
வீணை யுடையவர் வந்தா ருடையவர் வீணையுமே. (௪௬௪)

இதுவுமது.

வெந்தானத் தூங்கல்கைம் மாவென வெண்ணி விடலுனக்கு
வந்தாம் வினைத்தொகை கொல்யானை காண்மகி ழோன்குருகூர்
நந்தா மதங்கவிப் பேர்முத லிண்டனை நண்பர்தந்த
தந்தா வளம்படைத் தோவிடு போதிதந் தாவளத்தே. (௪௬௫)

பாணன் வாயின்மறை.

நெரிசிலை யாற்றிரு ளூடே வருமன்பு நீக்கியெங்கள்
குரிசிலை யெங்கையர்க் காக்குவித் தாய்கொடுஞ் சார்ங்கமென்னும்
வரிசிலை மாலென்ன வந்தான் குருகையென் மன்னர்தந்த
பரிசிலை வேரிப் பழையருக் காக்கிய பாண்மகனே. (௪௬௬)

வாயின்மறுக்கப்பட்ட பாணன்கூறல்.

தேன்செய்த தார்மகிழ்க் கோமான் குருகைச் சிலம்பிலெங்கள்
கோன்செய்த குற்றமுண் டாளுலவ் வண்ணல் குறையிரத்தல்
யான்செய்த குற்ற மெனமுனிந் தாயென்கை யாழுனக்குத்
தான்செய்த குற்றமுண் டோவெறி யோடு நகர்த்தனையே. (௪௬௭)

பாணன்றலைவனொடுகூறல்.

சேண்மக பாரத மாறன் குருகைக் கிளர்வெற்பவிந்
நாண்மக ராசனெங் கேயென் றனைந்த நங்கையிந்நாள்
காண்மக வைப்பெற்ற வீறேவென் யாழைக்கல் லாலுடைத்துப்
பாண்மக னென்ப திருபொரு ளாகமெய் பண்ணினளே. (௪௬௮)

விறலிவாயின்மறை.

யாழுஞ் சதியும் வினையமு மற்றுமி யாருடனும்
வாழும் யாத்தைய ரேயறி வார்மகிழ் மாறனையே
தாழுங் குருகை விறலீ யிறைவர்தம்பொய்யை மெய்யாய்ச்
சூழுஞ் சிறிய னறியேனங் கேயின்னந் துன்னுகவே. (௪௬௯)

கூத்தன்வாயின்மறை.

ஆத்தான் நாவலர் சூழ்குரு கூரி லருவினையை
நீத்தானுக் காகநின் புட்பாஞ் சலியுன் னினைவறிவே
னேத்தான வாரிய கன்று டகவென வேத்தித்தமிழ்க்
கூத்தாவுன் சொற்படி செய்வாருன் பாற்கற்ற கூத்தியரே. ()

காமக்கிழத்தி வாயில்வேண்டல்.

உடனறி கட்கினி யாளாநதி யாகும்பண் புற்றனையூ
டிடனறிந் தூடி யினிதி லுணர்வது மேற்குநல்லோர்
கடனறி மாறன் குருகூரி லன்பர் கருத்திலன்பாந்
திடனறி நீயெமைப் போலல்ல வேமென் றிருந்திழையே. (௪௭௧)

ஊடலொழிப்பத் தலைவன்மகிழ்தல்.

மறுப்பும் பிரிவுமில் லாவிருந் தாக வருகதன்மெய்
யுறுப்புந் தமிழுஞ் சிவந்த பிரான்குரு கூரிலிவள்
வெறுப்பும் புருவக் குனிப்புந் திருநுதல் வேர்ப்புமுள்ளக்
கறுப்புங் கருங்கட் சிவப்புமின் றாகவெக் காலமுமே. (௪௭௨)

புணர்கலவிக் குருகிப்புலத்தல்.

வார்க்குங் குமக்கொங்கை மார்பூ டுருவ மருவிமுத்தம்
பார்க்கும் பவளர் தலைதடு மாறப் பருகிமகிழ்த்
தார்க்குஞ் சரத்தின் குருகூரின் மாதின்பஞ் சார்ந்துமெங்கை
யார்க்குஞ் செலநண்பன் செய்யுமென் றேமுனி வாயினளே. ()

மின்னிடையமளியில் வெந்நிடமெலிதல்.

முத்தும் பவளமுஞ் சங்கமுங் கஞ்ச முகையுங்கெண்டை
தத்துங் கமலமு முந்தியுந் தாந்தமக் காகவப்பால்
வைத்தும்ப ரும்புக ழாழ்வார் குருகையுள் வஞ்சிமலர்க்
கொத்துங் கியபழும் பாதிதந் தாளென் கொடிவினையே. (௪௭௪)

சீறேலென்றவள் சீறடிபணிதல்.

இரணங் கடந்தவை வேல்விழி யாய்வண் டிமிர்வகுளா
பரணன் பலமுரு கூர்குரு கூரிற் பழகிலந்தக்
கரணஞ் சிறிய மலையோ பிழையைக் கருதிடலுன்
சரணஞ் சரண மடியேற் கருளுன் றலையளியே. (௪௭௫)

எங்கையர்காணி னன்றன்றென்றல்.

நன்பா லியற்றமிழ்க் கோமான் குருகையு ளூரதன்போ
லென்பா லியன்ற தவள்பா லுரைக்கவு மெங்கையவ

டன்பா லியன்றதை யென்பா லுரைக்கவுந் தக்கவருண்
டன்பா லவளுக்கு மாகிர்தோட் டிரென் னடியிணையே. (சஎசு)

அங்கவர்யாரையு மறியேனென்றல்.

தேரேன் றுள்ளங் குருகூர்ச்சொல் வீறன் றிருமஞ்சன
நீர வாடையுண் டார்நாவுக் கேமற்ற நீரினிதோ
பீர நாத னடிமேற் படியும் படிமடிமேல்
வாரி ரமுதனை யீரறி யேன்பிற மாதரையே. (சஎஎ)

காமக்கிழத்தியைக் கண்டமைபகர்தல்.

முன்மக வான்புக ழாழ்வார் குருகையெம் முன்றிலின்வாய்
நன்மக வேபொன் மணிமாட வீதி நடந்திடக்கண்
டென்மக வென்றெடுத் தாளெடுத் தாளொங்கை யுற்றவர்க்கு
மென்மக வென்றபி னெற்கண்டு நாணி யிறைஞ்சினளே. (சஎஅ)

காமக்குழலியைப் பாங்கிதணித்தல்.

கூறு யிரத்தமி ழோன்குரு கூர்வெற்பர் கோதைநின்னை
நூறு யிரப்படி தாழ்ந்துமென் றுய்நுண் மருங்கிற்பதி
னாறு யிரத்தொகைத் தேவியர்ச் சேர்ந்தமன் பானதல்லால்
வீறு யிரப்பெயர் மாலைப்போன் மாது வெகுண்டிலளே. (சஎகூ)

தலைமகள் புலவிதணியாளாதல்.

கல்லா துணர்ந்த பிரான்குரு காபுரிக் காதலர்வீண்
சொல்லா துலகம் பரிகரிப் பான்பல சொல்லுவர்பற்
றில்லாத நண்பர் மொழிதேறி யென்கொ லிருதலையன்
பல்லா தவரைப் புணர்வது மின்பமிவ் வாடவர்க்கே. (சஅ0)

தலைமகனூடல்.

நானே தன்னூர்க்கு வழிநாடி வந்தன னங்கையிவ
டானேயென் னூர்க்கும் வழிகூறப் போகிலன் றன்னையுயி
ரானேனை நம்பல ளாழ்வார் குருகை யமர்ந்தவைப்
போனே னினியிங் கிருந்தாலுந் தேற்றம் புரிகிலளே. (சஅக)

அன்பிலை கொடியையெனத் தலைவனையிகழ்தல்.

என்னை வெறுப்பது மிவ்வாறு நம்மை யிணக்குந்தெய்வந்
தன்னை வெறுப்பது மல்லாலெம் மாறன் றமிழ்க்குருகூர்
மின்னை வெறுத்தனை யிங்காட்பன் றுன்முன் மெலிந்திரந்த
வன்னை வெறுக்கத் தருமோ தடம்புன லூரவனே. (சஅஉ)

மைந்தன்வாயில் பிறர்கூறல்.

தனிவேண்டி யாற்றவு மாருத நீதய வாகவரு
ணனிவேண்டப் பால னுடன்புகுந் தார்நன்ற யார்வகுள
முனிவேண் டியதமிழ்த் தென்குரு கூரர் முயக்கமன்றி
யினிவேண் டுவதன்று நீதனி வேண்டுத லேந்திழையே. (சஅரு)

மகற்குறுத்தல்.

தந்தம மைந்தர் செயலும் வடிவுந் தருமமற்று
மைந்த ருடைய ரெனவோ வகுளப் பிரான்குருகூர்ச்
செந்தமிழ் நாடரைப் போல்வாய் பொதுப்பெண்டிர் சேரிபுகுந்
தந்த மடந்தையர் செய்கோலம் பெற்றதென் னாமுதே. (சஅசு)

ஆற்றாமைவாயிலாக வரவெதிர்கோடல்.

எற்றம் புரியன்பு நீர்த்தாரென் றூலு மிறைவரைநாஞ்
சீற்றம் புரியின் முழுதும் பிரியவுஞ் செய்வர்பத்துத்
தோற்றம் புரியுநம் மாழ்வார் குருகைச் சுரும்பர்குற்ற
மாற்றம் புரியுமென் னாற்றாமை யாற்ற மனமகிழ்ந்தே. (சஅஎ)

பாலனைப்புகழ்தல்.

மாட்டாத வாலப் பருவத்தி லேயென் மதலைபரி
பூட்டாத தேரினன் பூட்டிய தாமெம் புரவலர்தே
ரோட்டாத முன்னர் தகைந்தானெம் மாற னுயர்குருகூர்த்
தீட்டாத கூர்விழி யாய்மேலும் வாழ்விக்குஞ் செய்திறமே. ()

தலைவிதலைவனைப்புகழ்தல்.

உன்னுஞ் செனனம் பெறினுநஞ் செல்வ ருழுவலன்பு
தன்னுங் கிழமை பயக்குக யான்சுரு தித்தமிழ்ப்பாப்
பன்னுங் குருகைப் பராங்குசன் சேவடி பத்திமுற்று
மன்னுஞ் சிலம்பர் தலைநா ளளியென்கண் மாற்றிலரே. (சஅஎ)

பாங்கி தலைவியைப்புகழ்தல்.

நீங்கப் பொருத சினேகப் புலவியு நேயநண்ப
ரேங்கப் பொருத வுணர்ச்சியு மெய்தின னெண்டிசையு
மோங்கப் பொருதன் னுயர்புளி யார்குரு கூரிற்கொங்கை
வீங்கப் பொருவிடை யாள்புவிக் கோர்கற்பு வித்தென்னவே. ()

பிணிவறிகண்புதையும்வரும்.

மானே மடமயி லேகனி யேகனி வாயளித்த
தேனே யெனது திரவிய மேசிர்தை பேதறனீ

தானேயென் றருயி ராழ்வார் குருகை தமியன்விருப்
பானே னுனது கரப்பொடு கண்மிசை யாக்குதற்கே. (சஅகூ)

காவற்பிரிவு.

காவற்பிரிவு தோழிக்குரைத்தல்.

கூனர் குருடர் முதியர் நகர்குறு காதவபி
மான ரெளிய ருறையிடந் தேர்ந்துநி வைத்தவெண்ணெய்த்
தேன ருவந்த தமிழ்ப் பெருமான்றென் குருகைநல்லாய்
ஞானரி லாய்ந்து குறைதீர்த்துக் காக்க நயந்தனனே. (சகூ0)

தோழிபிரிவுடன்படாமை.

ஆரையுங் காக்க நினைந்தாயென் றுலுற வானமட
வாரையுங் காக்கத் தகாததுண் டோதன் வளத்தையுமெய்
யோரையுங் காத்த தமிழ்மாறன் றென்குரு கூரிவள்கண்
ணீரையுங் காத்தெம் புலம்பையுங் காத்தினி நீங்குகவே. (சகூக)

தலைவன் காவற்பிரிவு தோழி தலைவிக்குணர்த்தல்.

நின்னேயம் பூண்டுன தாருயிர் போலு நிருபர்மலர்ப்
பொன்னே புவியைப் புரக்கச்சென் றார்புளிக் கீழ்ப்புலவர்
மன்னே வளர்குரு கூர்நூலை யாய்ந்து மகிழவரு
முன்னேதன் றட்டினை நாடோறு நாடு முறைமைகொண்டே. ()

தலைவி கார்ப்பருவத்தில் வருந்தல்.

வயற்றுறை யைமறைக் குந்துறை நீர்வள மாங்குருகூர்ச்
செயற்றுறை யுற்றமகிழ் மாறன் வெற்பர்சென் றட்டிலிந்த
புயற்றுறை நோக்குவ ரோபிரிந் தேயுட் புலம்புமென்கட்
கயற்றுறை நோக்க வருவர்கொல் லோவென்சொல் சற்றவரே. ()

தோழியாற்றுவித்தல்.

மயல்புக்க நெஞ்சும் புனல்புக்க கண்ணு மருவிநிறைச்
செயல்புக்க தொன்றுமின் றுயய ரேல்செங் கமலத்திலே
கயல்புக்க வன்ன விழியாய்நம் மாறன் கவின்குருகூர்ப்
புயல்புக்க தாலெம் புனலூ ருமிங்குப் புக்கவரே. (சகூச)

தூதிற்பிரிவு.

தூதிற்பிரிவு தோழிக்குணர்த்தல்.

தூற்றுவ ரைவ ரெனவிரு பான்மன்னர் நோன்பகையை
யாற்றுவர் வேறில்லை யாற்றலி னாலென்னை யாற்றியிடர்
மாற்றுவன் மாறன் குருகூர்மின் னேகிடு மாற்றஞ்சென்றுஞ்
சாற்றுவ னனித் தேற்றுவை நீயுங் கடையலையே. (சகூரு)

தோழி பிரிவுடன்படாமை.

ஒன்று வரச ரொருவர்சொல் வார்த்தை யொருவர்முன்பு
சென்று ரமர்தனிக் கச்செல்லு வீர்தமிழ்த் தென்குருகூர்
நின்றுரைப் பாடி யிருந்தார் சிலம்பிலென் னேரிழையா
ளொன்று மிலுமுறை யாளெது அதமக் கோதுவதே. (௯௰௬)

தோழி தலைவிக்குணர்த்தல்.

சஞ்சயன் கண்ண னுமா லுலகன் சமரங்கதன்
வெஞ்சயத் தூதுசென் றுரென்ன வேறுமை வேந்தர்தம்பால்
மஞ்சயர் மாட மதிட்குரு கூர்மகிழ் மாறன்வரை
நஞ்சயர் வாள்விழி யாயன்பர் தூது நடந்தனரே. (௯௰௭)

தலைவி கூதிர்ப்பருவத்துவருந்தல்.

இடைக் கயனுக ராதுறங் காதொளிர் சேவல்பொங்கர்ப்
பேடைக் குருகிக் கவல்கின்ற காடர் பிரியிலன்னக
கோடைப் பவனித் திருமகிழ் மாறன் குருகைவெற்பில்
வாடைக் குயிர்தரிப் பாரா ரவல்குல் வாணுதலே. (௯௰௮)

தோழியாற்றுவித்தல்.

மிளிர்கா லகங்கை முகந்திரு மேனி விழிகனிவாய்
நளிர்கால வம்புயம் போல்வான் குருகைமெய்ஞ் ஞானிவெற்பி
லொளிர்கால வேல்விழி யாயன்பர் மீள்வ ருயிருளக்குங்
குளிர்காலந் தூதல வோபிரிந் தாரைக் கொணர்ந்திடவே. (௯௰௯)

துணைவயிற்பிரிவு.

தோழிக்குணர்த்தல்.

எமக்குத் துணையென் றுறவுகொண் டார்சில ரென்னையன்றோர்
தமக்குத் துணையுண்மை யாய்ச்செல்லு வென்றந்தை தாய்குருவாய்
நமக்குத் துணைசெய் தருண்மகிழ் மாறனன் னுங்குருகூ
ருமக்குத் துணையெனத் தேற்றுநல் லாயுங்க ளுள்ளதிவே. (௱௦௦)

தோழி தலைவிக்குணர்த்தல்.

தேர்ப்பாக னுகியுந் தூதாகி யுந்துணை செய்தவராற்
போர்ப்பா ரதமுடித் தான்புக ழேபுகழ்ந் தோன்குருகை
யூர்ப்பா வலர்தமிழ் நாடர்நட் பாமுத விக்குதவ
நீர்ப்பானல் போல்விழி யாயகன் றுரிது நீதியன்றே. (௱௦௧)

தலைவி முன்பனிக்குவருந்தல்.

இன்பரி தான துணைவயிற் போமெம் மிறைவர்முன்செ
யன்பனி யாயப் பகைவீட்டு மாலைங் கணைமதன்போர்
வன்பனி தாரு மறிவார் குருகைநம் மாறன்வெற்பின்
முன்பனி யோங்கவென் கண்பனி யோங்கு முகிண்கையே. (௫௰௨)

தோழியாற்றுவித்தல்.

கஞ்சத்தின் வாட்டங்கண் ணுற்பார்ப்ப ரேகஞ்சக் காரிகையுன்
னெஞ்சத்தின் வாட்டமு நெஞ்சுணர் வார்வெண் ணிறத்துச்செங்கா
லஞ்சத் துவசன் குருகூரின் முன்பனி யால்வருந்தே
றஞ்சத் துணைவயிற் சென்றார் வருவர்பைந் தார்க்குழலே. (௫௰௩)

இல்லகத்தழுங்கல்.

மயலார்க்கும் பாரியைக் காவாது நீங்கின் மகிழநட்ட
வயலார்க் குதவுவ தார்தேறு வார்வளை யார்ப்பப் பொய்கைக்
கயலார்ப்ப வாளை பலவெடி தாவும்பைந் நாவுறையும்
புயலார்க்குந் தென்குரு கூர்மாறன் வெற்பிற் புலம்புநெஞ்சே. ()

இடைச்சுரத்தழுங்கல்.

தேரான் றெளிவுந் தெளிந்தான்க ணையுற வும்பின்புதான்
றீரா விடும்பை தருமென்ப தோர்ந்திலை செய்யமகிழ்த்
தாரான் குருகையை நீங்குமென் றேதளரா வென்னெஞ்சம்
வாரார் தடைவழிக் கேகொண்ட தோவவண் மையலையே. (௫௰௫)

தலைவி பாணனைப் பாசறைவிடுத்தல்.

விற்பாணர் மொய்ம்பின் விசயனைப் பார்முன்பு மேவுகின்ற
சொற்பாண ரேசொல வேறுமுண் டோவெழு சூரியன்போற்
பொற்பாணர் தென்குரு கூர்மட வாள்புலம் பிக்கலங்கு
மற்பா ணரபதி யேவிருந் தானென்ப தன்றியொன்றே. (௫௰௬)

தலைவன் பாணனைவினாதல்.

ஆடுங் கணிகையர் மெய்ப்பாட்டுக் கேற்கு மனவின்னிசை
பாடும் பொருநரெப் போதுவந் தீர்மகிழ்ப் பைந்தொடையல்
சூடும் புலவன் குருகூரி லென்னெஞ்சு சூழுமன்பு
நீடுங்கல் யாணி யியலறி வீர்சொல்லு நின்னயமே. (௫௰௭)

தலைவனுடன்கூறல்.

இருக்கின் றனன்மன மஞ்சேலஞ் சேல்விழி யேக்குமுலை
நெருக்கின் றளர்ந்தனள் பொன்பூத்த நன்முத்து நீலம்பெற்றாள்

செருக்கின் றனைவினைப் பார்க்கொளி யாமகிழ்ச் செல்வன்செஞ்சொ
லிருக்கின் றமிழ்ப்பெரு மான்குரு கூரெம் மிறையவனே. (௫௦௮)

தலைவன்பாசறைப்புலம்பல்.

கார்செய்த கோதையைக் காண்பா னயர்வது காணின்முன்னொல்
போர்செய்த மன்ன ரெனையென்சொல் லார்புகழ்த் தென்குருகூர்
பார்செய்த மைய லொளிப்பதற் காய்ச்செய்த பாடலைப்போற்
சீர்செய்த வேத விதியிங்ங னேவரச் செய்ததுவே. (௫௦௯)

வினைமுடித்ததன்பின் வியன்பதி சேய்த்தெனவிரைதல்.

தினக்கதி ரோனெனத் தென்பா லுதித்துத் திருக்குருகூ
ரெனக்கதி ரேக மயலொழித் தான்வெற்பி லிந்நகரி
தனக்கதி தூரநம் மூர்வர லாமின்னைச் சந்திக்குமென்
மனக்கதி சேர வுரைப்பர் கொல்லோபரி மந்திரமே. (௫௧௦)

பாகனிறைவனைத்தேற்றல்.

சேனைக்கு நாத னுபதேசத் தான்றென் குருகைப்புள்ளார்
கோனைக் குதிரையி லாவேசித் தேன்கொடுங் கூரமென்று
மானைக் குடிவைத்த வூரால் வருந்தலம் மங்கைகொங்கை
யானைக்கு முன்னின்ற மாலாக்கு வேனொ ரரைக்கணத்தே. (௫௧௧)

தலைவி யுருவுவெளிப்பாடுகண்டு தலைமகன்மயங்கல்.

நாளின்ற பார்க்குநம் மூரன்றன் பார்க்கு நடுவில்வந்து
தானின்று தீண்டி யுருதென் றேதண் ணறைவிரும்பித்
தேனின்ற தாமத் திருமகிழ் மாறன் றிருக்குருகூர்
வேனின்ற வாட்கட் சிலைநின்ற வாணுதன் மென்கொடியே. ()

தலைவன் பின் பனிக்காலத்துப்பிரிந்து இளவேனில் வந்தும்
வாராமையா லிறைவிவருந்தல்.

தருங்காம னூர்தி முதலாகக் காணுஞ் சரீரமின்றி
வருங்காம னம்பு கடையாக வந்தும்வந் தாரில்லையாற்
சுருங்கா மறைத்தமிழ்க் கோமான் குருகைச் சுரும்பிலன்ப
ருங்காம வல்லியொப் பாயெங்ங னேயுயி ராற்றுவதே. (௫௧௩)

தலைவிக்குத் தோழிநிமித்தங்கூறல்.

ஆட்சிக் கெளியன் பார்வர வேயறி விக்கும்பொன்னே
சூட்சித் துக் காணுன் னிடமே துடிப்பது சொற்கிரைந்து
மாட்சிக் கொடியு நடந்தது மாறன் வருகுருகூர்க்
காட்சிக் கெளியவ ராவா ரரியநங் காதலரே. (௫௧௪)

தலைவன்மீண்டமை தோழி தலைவிக்குணர்த்தல்.

மண்கொண்ட தெவ்வ ருடலங்கள் யாவுமண் ணாக்கியுயிர்
விண்கொண்ட தாகப் பொருதுவென் றேயின்று மீண்டனர்காண்
பண்கொண்ட செந்தமிழ்க் கோமான் குருகைப்பொற் பாவையிரு
கண்கொண்டு காண வமையா திறையவர் கட்டழகே. (௫௧௫)

தலைவிமகிழ்ச்சி.

ஆனையுந் தேருங் குதிரையு மாட்களு மாகப்பம்புஞ்
சேனையுந் தூளியு மோசையும் பார்த்துச் செவிக்கொண்டுமெங்
கோனையுங் கோன்றண் ணளியையும் வாழ்த்துதுங் கோலமகிழ்த்
தேனையு மாலையுஞ் சூழ்குரு கூரிலெஞ் சேடியரே. (௫௧௬)

இதுவுமது.

சார்ந்தாலு முள்ளத் துவகைமிக் காருந் தலைவரென்னைத்
தீர்ந்தாலுஞ் சோகமு மோகமு மாநறை சேர்வகுளத்
தீர்ந்தார் புனைபெரு மான்குரு கூரி லிருவகைக்கும்
வார்ந்தார் கருங்குழ லாய்மறப் பாமென் மனந்தன்னையே. (௫௧௭)

பொருள்வயிற்பிரிவு.

தோழிக்குணர்த்தல்.

நீலத் தொடையற் குருகுல வேந்தர்க்கு நீணிதியம்
ஞாலத்து ளேவந் ததுபோல வந்தது நன்மழலைக்
கோலக் கருங்குயி லேயங்ங னேகிக் கொணர நுண்மைச்
சீலத் தமிழ்ப்பெரு மான்குரு கூர்ப்பொன்னைத் தேற்றுவையே.

தோழி பிரிவுடன்படாமை.

சொல்லுந் தமிழ்க்குரு கூர்மாறன் வெற்பவென் றோகைக்கெண்ணேல்
வல்லுந்து பூண்முலைக் கன்னியர் யார்க்கு மணம்பொருந்தி
யில்லுந்து நல்லறஞ் செய்வதெவ் வாறிவள் பாரியென்னப்
புல்லும் படிநிச் சயமாம்பெண் பேசிப் பொருட்ககலே. (௫௧௯)

இரவினிட்டம்.

உதையக் கிரணம் விடாததண் டோவென்று மொண்கதிரோன்
சிதையத் திமிர[illegible]ள் பம்பிய வோவென்றுஞ் செங்கதிரோன்
புதையச் சரி[illegible]பி வீழ்ந்தன வோவென்றும் பூவரன்சே
ரிதையப் பிரா[illegible]றென் குருகூர னீபிரி யாமத்திலே. (௫௨௦)

தோழி தலைவற்குணர்த்தல்.

அருணாத வன்னம் மகிழலங் கார னமுதச்செய்யுட்
கருணா கரன்செந் தமிழ்க்குரு கூர்மலர்க் காரிகையாஞ்
சுருணன வார்குழ லாய்வறி யோர்புகழ் சொற்பெறவே
பொருணா டினரெழுத் தூனா நெடிய புயவெற்பரே. (ருஉக)

தலைவி பின்பனிக்கு வருந்தல்.

முத்தமும் பொன்னுமென் கண்ணு முலையு முறைமுறையே
நித்தமு மீட்டுவ தார்சொல்லு வாரன்பர் நீள்விழியுஞ்
சித்தமும் வாயும் பிரியாங் பராங்குசன் றென்குருகூ
ரத்தமுன் றேடவிப் பின்பனி யூடு மகன்றவர்க்கே. (ருஉஉ)

கலத்திற்சேறல்.

குலத்திற்சென் றுரில் லுடன்செல்வ தில்லென்று கூறுநண்ணூற்
புலத்துச்சென் றுரென்னை நீத்தகன் றுர்புகழ்த் தென்குருகூர்த்
தலத்திற்சென் றுர்பிரி யாச்சேவை மாறன் றடந்துறைவாய்க்
கலத்திற்சென் றுரென் விழிநீர்க் கடற்கலங் கைவளையே. (ருஉ௩)

தலைவன் கனவுகண்டிரங்கல்.

மையே ரரங்க ரருண்மாறன் வாழ்ழ் மைக்குருகூர்
மையோ டரிக்கண் மயிலனை யாள்வந்த வோர்கனவிற்
பொய்யோ வெனுமிடை யாடையை நீக்கிப்புன் றுரலைச்செய்
தையோ விழித்துவிட் டேன்றெவிட் டாவின்ப மாகுமுன்னே. ()

வந்துழிமகிழ்தல்.

வேதியர் காவலர் பாவல ராதலர் வேறெளியா
ராதியர் யார்க்கு மவரவர் வேட்ட தருளியுண்மை
நீதியர் போற்றுநம் மாழ்வார் குருகை நிருபர்முகச்
சோதிய ராகிவந் தார்மட வாய்சொன்ன சொன்னங்கொண்டே.

தலைவன்பாங்கியொடுரைத்தல்.

கையுங் கபோலமுங் கண்ணுங்கண் ணீருங் கனன்றுடுங்கு
மெய்யும் பசலையு நீண்மூச்சு நாசியின் மேல்விரலுஞ்
செய்யுங் கவலையுள் ளேனென்று மாறன் றிருக்குருகூ
ருய்யும் படிவந்து மீட்டாளுன் றேகையென் னுள்ளத்திலே. ()

மாறன்கோவை முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௨௪	௨௫	தழைலங்க	தழைவாங்க
௨௯	௨௧	வெத்தல்	ரைத்தல்
௬௧	௭	பிரானனை யாருக்கு	பிராண னனையார்க்கு
௬௯.	௫	பூவால ருன்பொருட் டாலே யென்	பூவா வலருன் பொருட்டாலென்
௬௭	௧௨	பிறந்தே	பிரிந்தே
௯௦	௧௦	மணந்தவாணிதனை	மணந்தவாணிதனை